# அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்

## நெறியாளர்களுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி பாடத்திட்ட அறிமுகப் பயிற்சிக்கான

# கருத்து ஆதாரக் கையேடு

**21.09.2021 – 23.09.2021**

**திருச்சி**

**வெளியீடு**

அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்

வான்முகில், திருநெல்வேலி

# உள்ளடக்கம்

1. மனித உரிமைகள் என்றால் என்ன? (1)
2. அரசியலமைப்புச் சட்டத்தில் மனித உரிமைகள் (5)
3. அகில உலக மனித உரிமைப் பிரகடனம் (15)
4. ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை (23)
5. பெண்கள் மீதான அனைத்துவகைப் பாகுபாட்டிற்கெதிரான உடன்படிக்கை (28)
6. பணியிடங்களில் பாலியல் வன்முறை பற்றி உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்கள் (30)
7. மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (33)
8. கல்விக்கான உரிமை (35)
9. பாகுபாடு (38)
10. பெண்களும் சமத்துவமும் (43)
11. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் (48)
12. பெண்களுக்கெதிரான வன்முறைகள் – புரிதல் (56)
13. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (62)
14. அரசமைப்பு உரிமைக் கல்வி ஆசிரியரின் பங்கு (81)

1

# மனித உரிமைகள் என்றால் என்ன?

மனிதர்கள், மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்குக் கிடைத்த அடிப்படையான, விட்டுக் கொடுக்க இயலாத, மறுக்க முடியாத சில உரிமைகளை நாம் மனித உரிமைகள் என்று அழைக்கிறோம். சாதி, மதம், பால், இனம், நாட்டுரிமை ஆகியவற்றிற்கு அப்பால், ஒவ்வொரு தனி மனிதருக்கும் பொதிந்திருக்கக் கூடிய பிறப்புரிமைகளை, மனிதனின் சுதந்திரத்திற்கும், கண்ணியத்திற்கும், நலன்களுக்கும் அவசியமான உரிமைகளை, மனித உரிமைகள் என்று நாம் அழைக்கின்றோம். மனிதர்களுக்கு மனித உரிமைகள் மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுவதால் சில நேரங்களில் மனித உரிமைகளை அடிப்படை உரிமைகள் என்றும், இயற்கை உரிமைகள் என்றும், பிறப்புரிமைகள் என்றும், உள்ளார்ந்த உரிமைகள் என்றும் நாம் அழைக்கின்றோம். ஒவ்வொரு நாட்டிலும் அதற்கேற்ற, உரியச் சட்டமியற்றும் வழிமுறைக்கு ஏற்ப இந்த மனித உரிமைகள் சட்ட வடிவம் பெறுகின்றது. **டி.கே. பாசு** அவர்கள் மனித உரிமைகளை வரையறுக்கும் பொழுது "எவ்வித மறுபயனுமின்றி மனிதனாகப் பிறந்த காரணத்தினாலேயே ஒவ்வொரு தனி நபருக்கும் இருக்கக் கூடிய குறைந்தபட்ச உரிமைகளே மனித உரிமைகள்" என்று குறிப்பிட்டுள்ளார். 1993ஆம் ஆண்டு வியன்னா நகரில் நடைபெற்ற மனித உரிமைகள் குறித்த உலக மாநாட்டின் பிரகடனத்தில் "மனிதனின் மதிப்பிலிருந்தும், கண்ணியத்திலிருந்தும் விளைவதே மனித உரிமைகள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் என்பது யாராலும் உருவாக்கப்பட்டதல்ல, அதுபோல் மனித உரிமைகள் எவராலும் வழங்கப்பட்டதுமல்ல. எனவே தான் மனித உரிமைகள் எவராலும் பறிக்கப்பட முடியாத உரிமைகள் என அறிஞர்களால் அழைக்கப்படுகின்றது. மனிதனாகப் பிறந்த காரணத்தினால், ஒருவனுக்கு இயற்கையிலேயே உடன் பிறந்த உரிமைகள் மனித உரிமைகள். இந்த உரிமைகள் எந்த ஒரு சமுதாயத்தினாலோ, அரசினாலோ அல்லது அரசியல் அதிகார அமைப்புகளினாலோ உருவாக்கப்பட்டதல்ல. அதனால்தான் எந்த ஒரு அரசிற்கும், அதிகார அமைப்பிற்கும் மனித உரிமைகளை மீறுவதற்கான அதிகாரம் அளிக்கப்படவில்லை. இந்தியாவைப் பொறுத்தமட்டில் "மனித உரிமைகள்" என்ற பதத்திற்கான வரையறை 1993 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 2(d)ல் கொடுக்கப்பட்டுள்ளது. அப்பிரிவின்படி

**மனித உரிமைகள் என்பது,**

*"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினால் உறுதி செய்யப்பட்ட அல்லது இந்திய நீதிமன்றங்களால் அமல்படுத்தக் கூடிய பன்னாட்டு உடன்படிக்கையில் உள்ளடங்கிய வாழ்வு, தன்னுரிமை, சமத்துவம், தனிநபர் மாண்பு பற்றிய உரிமைகளைக் குறிக்கும்."*

## ***நமது உரிமைகள்:***

*மனித உரிமைகள் பொதுவாகப் பிரிக்கப்பட முடியாதவை. மேலும், அவை ஒன்றோடு ஒன்று சார்ந்து இருப்பவை. அதனால் பல்வேறு வகையான மனித உரிமைகள் இருப்பதற்குச் சாத்தியமில்லை. முக்கியத்துவத்தின் அடிப்படையிலும், அனைத்து மனித உரிமைகளும் சமமான முக்கியத்துவத்தினைப் பெறுகிறது. அதனால்தான் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தில் எவ்விதமான வகைப்பாடுகளும் காணப்படவில்லை. ஆனால் அதற்குப் பின்னர் ஐ.நா.வின் உறுப்பு நாடுகள் மனித உரிமைகளை ஐந்து வகைகளாகப் பிரித்தது.*

*அவை :*

1) *குடிமையியல் உரிமைகள்;*
2) *அரசியல் உரிமைகள்;*
3) *பொருளாதார உரிமைகள்;*
4) *சமூக உரிமைகள்;*
5) *கலாச்சார உரிமைகள்.*

***- மனித உரிமைகள் சட்டம்***

## ***தனி மனிதருக்கு உரிய உரிமைகள்***

*மனித உரிமைகள் குறித்து அகில உலக உடன்படிக்கைகள்/ஒப்பந்தங்களில் தனிநபருக்கும், குழுக்களுக்கும் வழங்கப்பட்டுள்ள பல்வேறு உரிமைகளை இங்கே பட்டியல்படுத்தப்படுகின்றது. இன்றைய சூழலில் கீழே சொல்லப்பட்டுள்ள உரிமைகள் அனைத்தும் நமக்கு உள்ளனவா என்ற கேள்வி நமக்குள் எழுகின்றது. என்னென்ன உரிமைகள் நமக்கு உண்டு என்பதையாவது தெரிந்துகொள்வோம்.*

## ***குடிமையியல் உரிமைகள் (Civil Rights)***

- *உயிர்வாழ்வதற்கான உரிமை*
- *சட்டத்திற்கு முன் சமமாக நடத்தப்படுவதற்கான உரிமை*
- *தேசிய இனத்திற்கான உரிமை*
- *நீதிமன்றத்தை அணுகுவதற்கான உரிமை*
- *வெளிப்படையான விசாரணைக்கான உரிமை*
- *குற்றமற்றவர் என அனுமானிக்கப்படுவதற்கான உரிமை*
- *(இலவசச்) சட்ட உதவிக்கான உரிமை*
- *குற்றம் சுமத்தப்பட்டவர் முன்னிலையில் விசாரணை நடக்கவும், அவரே எதிர் வாதாடவும் உள்ள உரிமை*
- *சாட்சிகளை விசாரிப்பதற்கான உரிமை*
- *உறுதியளிக்கப்பட்ட உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் மீறப்படும்போது குறைதீர்க்கும் அமைப்புகளை அணுகுவதற்கான உரிமை.*

- ஒரே குற்றத்திற்காக இருமுறை தண்டிக்கப்படுவதிலிருந்து விடுதலைப் பெறுவதற்கான உரிமை.
- மேல் முறையீடு, மறுபரிசீலனை செய்வதற்குமான உரிமை
- தகவல்களைப் பெறவும், தேடவும், பெற்றதை வழங்குவதற்குமான உரிமை
- மதம் மற்றும் அரசியல் நம்பிக்கைகள் மீது கருத்து கொண்டிருக்க உரிமை
- தனது வீட்டில் தனியாக இருக்க உரிமை.
- தன் மாண்பும் நற்பெயரும் காக்கப்படுவதற்கான உரிமை
- நடமாட்டச் சுதந்திரத்திற்கான உரிமை
- நீதி தவறாக வழங்கப்படுகையில் நிவாரணம் பெறும் உரிமை
- தன்னிச்சையாக நாடு கடத்தப்படாமல் இருப்பதற்கான உரிமை
- ஒரு நாட்டில் நுழைவதற்கான உரிமை
- ஒரு நாட்டை விட்டு வெளியேறுவதற்கான உரிமை

## அரசியல் உரிமைகள் (Political Rights)

- கருத்துக்களை வெளியிட உரிமை
- கூட்டம் கூடுவதற்கான உரிமை
- சங்கமாகச் சேருவதற்கான உரிமை
- வாக்களிப்பதற்கான உரிமை
- அரசியல் பங்கேற்புக்கான உரிமை
- பொதுப்பணிகளில் சம வாய்ப்பு பெறுவதற்கான உரிமை

## பொருளாதாரச், சமூகப், பண்பாட்டு உரிமைகள் (Economic, Social and Cultural Rights)

- வேலைக்கான உரிமை
- வேலையைத் தெரிவு செய்யும் உரிமை
- சொத்து வைத்திருப்பதற்கான உரிமை
- போதிய வாழ்க்கைத் தரத்தைக் கொண்டிருப்பதற்கான உரிமை
- கல்வி பெறுவதற்கான உரிமை
- குடும்பம் அமைத்துக் கொள்வதற்கான உரிமை
- சமூகப் பாதுகாப்புக்கான உரிமை
- ஆயுள் காப்பீட்டுக்கான உரிமை
- சமூக, மருத்துவ உதவி பெறும் உரிமை
- அறிவியல் முன்னேற்றங்களின் பலன்களை அனுபவிப்பதற்கான உரிமை
- சுகாதாரம், பாதுகாப்புக்கான உரிமை

## குழுக்களின் உரிமைகள்

- சம ஊதியத்திற்கான உரிமை (ஒரே வகைப்பட்ட வேலைக்குச் சமமான ஊதியம்)
- கூட்டாகப் பேரம் பேசுவதற்கான உரிமை
- தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும், தொழிற்சங்கங்களில் சேர்வதற்குமான உரிமை

- போராட்ட உரிமை
- பணிநீக்கம் செய்யப்படுவதற்குமுன் முன்னறிவிப்புப்பெறும் உரிமை
- பதவி உயர்வில் சம வாய்ப்பும், பாதுகாப்பான, சுகாதாரமான பணிச்சூழலில் பணிபுரிவதற்குமான உரிமை
- வேலை வாய்ப்புக்கான வழிகாட்டுதல், பயிற்சி பெறும் உரிமை
- சம்பளத்துடன் கூடிய விடுப்புக்கான உரிமை
- நியாயமான ஊதியத்திற்கான உரிமை
- வரையறுக்கப்பட்ட வேலை நேரத்திற்கான உரிமை (வாராந்திர ஓய்வுக்கான உரிமை)

## பெண்களுக்கான உரிமைகள்

- சம ஊதியம் பெறுவதற்கான உரிமை
- பாலியல் சமத்துவத்திற்கான உரிமை
- தம்பதியருக்கிடையில் சமத்துவ உரிமை
- சுரண்டலிலிருந்து பாதுகாப்பு பெற உரிமை
- கர்ப்பிணிப் பெண்கள் மகப்பேறு விடுப்புரிமை

## குழந்தைகள், இளம் சிறார்களுக்கான உரிமைகள்

- கல்வி பெறுவதற்கான உரிமை
- தொழிற்பயிற்சி மற்றும் வேலையிடைப் பயிற்சிகளை இலவசமாகப் பெற உரிமை
- கைது செய்யப்பட்ட இளம் சிறார்கள் புனர்வாழ்வு பெற உரிமை
- மரண தண்டனை விதிக்கப்படாமலிருப்பதற்கான உரிமை
- சித்திரவதை, சுரண்டல், கவனிக்கப்படாமையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை
- வேலைக்கான குறைந்தபட்ச வயதை நிர்ணயிக்கும் பாதுகாப்பு உரிமை
- விளையாட்டு, பொழுது போக்கிற்கான வாய்ப்பு பெறும் உரிமை
- சமூக சேவைகளைப் பெறுவதற்கான உரிமை

## சிறைக் கைதிகளின் உரிமைகள்

- சிறைக்கைதியாகப் பதிவு செய்யப்படுவதற்கான உரிமை
- சிறைக் கைதிகளை வகைப்படுத்திப் பிரித்து வைப்பதற்கான உரிமை
- சிறையில் தனியாகத் தங்கவைக்கப்படுவதற்கான உரிமை
- போதிய காற்றோட்டம், வெளிச்சம், உடல் நலம் மற்றும் சுகாதாரத்திற்குத் தேவையான வசதிகளுக்கான உரிமை
- துணிமணிகள், படுக்கை, போதிய உணவு, தண்ணீர், மருத்துவ வசதி பெற உரிமை
- பயிற்சி, விளையாட்டுக்கான உரிமை
- கொடூரமான, கேவலமான தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை
- அதிகாரிகளிடம் வேண்டுகோள் மற்றும் புகார்கள் கொடுப்பதற்கான உரிமை
- குடும்பம், நண்பர்களுடன் தொடர்புகொள்வதற்கான உரிமை (கடிதத் தொடர்பு, நேர்காணல் மூலம்)
- வெளிஉலகச் செய்திகளைத் தொடர்ந்து பெறுவதற்கான உரிமை
- சிறைச்சாலையின் நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கான உரிமை
- தமக்கு விருப்பமான மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை
- சொந்தச் சொத்துக்களை வைத்துக் கொள்வதற்கான உரிமை
- பெண் சிறைக் கைதிகள் பெண் அதிகாரிகளாலேயே பாதுகாக்கப்படுவதற்கான உரிமை

# அரசியலமைப்புச் சட்டத்தில் மனித உரிமைகள்

2

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பாகத்தில், தனிநபர்களுக்கு வழங்கப்பட்ட மனித உரிமைகளை நாம் அடிப்படை உரிமைகள் என்றழைக்கிறோம்.

உச்சநீதிமன்றமும் இவ்வடிப்படை உரிமைகளை "இயற்கை உரிமைகளாக" அங்கீகரித்திருக்கிறது. காலம் காலமாக இயற்கை உரிமைகள் என்று நாம் அழைத்து வந்த உரிமைகளைத் தான் தற்பொழுது மனித உரிமைகள் என்று அழைக்கிறோம் என்று உச்சநீதிமன்றம் கூறுகிறது.

- ஒரு மனிதன் மாண்புடன் உயிர்வாழத் தேவைப்படும் அடிப்படைத் தேவைகளே அடிப்படை உரிமைகளாக இச்சட்டத்தில் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.
- இயற்கையான இவ்வுரிமைகள் மறுக்கப்படுகின்றபோது மனிதரால் மாண்புடன் வாழ முடியாது என்பதனால் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மூன்றாம் பாகத்தில் குறிப்பிட்டுள்ள அடிப்படை உரிமைகள் ஒரு நபருக்கு மறுக்கப்படுகின்றபோது அரசை எதிர்த்து வழக்கு தொடர முடியும்.

## அடிப்படைப் பண்புகள் / சிறப்புக் கூறுகள்

- சாதாரணச் சட்டத்தினால் நமக்குக் கிடைக்கப் பெறாமல் மிக உயர்ந்த சட்டமாகிய அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் நமக்குக் கிடைத்தது.
- இவ்வுரிமைகளை சாதாரணச் சட்டங்களை மாற்றுவது போல எளிதில் மாற்ற முடியாது. அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்திற்கான கடுமையான நடைமுறைகளைப் பின்பற்றிய பின்னரே மாற்றம் செய்ய முடியும். அம்மாற்றங்களும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **"அடிப்படை கட்டமைப்புக்குப்"** பாதிப்பு ஏற்படாத வண்ணம் இருந்தால்தான் உச்சநீதிமன்றம் அம்மாற்றத்தை அங்கீகரிக்கும்.
- அரசியலைமைப்புச் சட்டத்தின் மூன்றாம் பாகத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை மீறும் வகையிலோ, பறிக்கும் வகையிலோ அரசு சட்டமியற்றக்கூடாது. அவ்வாறு இயற்றப்பட்டால் அச்சட்டம் செல்லா நிலைச் சட்டமாக ஆகிவிடும்.
- இதேபோல் அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன் (அதாவது 26.1.1950க்கு முன்) இயற்றப்பட்ட சட்டங்கள் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் இருந்தால் செல்லா நிலைச் சட்டமாக ஆகி விடும்.
- சாதாரணச் சட்டத்தின் கீழ் பெறப்படும் உரிமைகள் மீறப்படும் பொழுது நாம் அதற்கென அமைக்கப்பட்டிருக்கும் நீதிமன்றங்களில் தான் வழக்கு தொடுத்து உரிமையைப் பாதுகாக்க முடியும். ஆனால் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால்

*நேரடியாக அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 32ன் கீழ் உச்சநீதிமன்றத்தையோ அல்லது அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 226ன் கீழ் உயர்நீதிமன்றத்தையோ அணுகி நிவாரணம் பெறக்கூடிய உரிமை உண்டு.*

## வகைப்பாடுகள்

1. *சமத்துவத்திற்கான உரிமை (பிரிவுகள் 14 முதல் 18வரை)*
2. *சுதந்திரத்திற்கான உரிமை (பிரிவுகள் 19 முதல் 22)*
3. *சுரண்டலுக்கெதிரான உரிமை (பிரிவுகள் 23 மற்றும் 24)*
4. *மதச் சுதந்திரத்திற்கான உரிமை (பிரிவுகள் 25 முதல் 28 வரை)*
5. *சிறுபான்மையினருக்கான உரிமைகள் (பிரிவுகள் 29 மற்றும் 30)*
6. *அரசியலமைப்புச் சட்ட நிவாரணம் பெறும் உரிமை (பிரிவு 32)*

# அடிப்படை உரிமைகள்

## *1. சமத்துவ உரிமை:*

- *சமத்துவம் என்பது இச்சமூகத்தில் அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார அடிப்படையில் மிகவும் பின் தங்கியுள்ளோர்களை சகல வசதிகளோடும், உரிமைகளோடும் வாழ்கின்ற மக்களோடு சமத்துவப்படுத்துவது.*
- *சமமில்லாதவர்களைச் சமமாக்குவது.*
- *எங்கெல்லாம் பாகுபாடு காணப்படுகிறதோ அங்கு சமத்துவம் இருக்காது.*
- *எங்கெல்லாம் சமத்துவம் இல்லையோ அங்கு அடக்குமுறைதான் இருக்கும்.*
- *எங்கெல்லாம் அடக்குமுறை இருக்கிறதோ அங்கு சட்டத்தின் ஆட்சி நடக்காது.*
- *எனவே சமத்துவமின்மை ஒரு மனித உரிமை மீறல் ஆகும்.*
- *இச்சமூகத்தில் பெண்கள், குழந்தைகள், சிறுபான்மையினர், தீண்டாமைக்குப் பலியாகும் தலித்துக்கள் சமத்துவமின்றி வாழ்கின்றனர். (ரோஹித் வெமுலாவின் தற்கொலை சமத்துவமின்மைக்கு ஒரு சான்றாகும்)*

***பிரிவு 14*** *சட்டத்தின் முன் சமம் அல்லது சட்டத்தின் சமமான பாதுகாப்பினை இந்திய எல்லைக்குள் அரசு எந்தவொரு நபருக்கும் மறுக்கக்கூடாது.*

***பிரிவு 15*** *மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் குடிமக்களிடையே அரசு பாகுபாடு காட்டுதல் கூடாது.*

***பிரிவு 15 (2)***

- *கடைகள், பொதுமக்கள் தங்கும் விடுதி, உணவு விடுதி, பொதுமக்களின் பொழுதுபோக்கிற்கான இடங்கள் ஆகிய இடங்களில் அனுமதிப்பதற்கும்*

- *கிணறுகள், குளங்கள், நீராடும் துறைகள், சாலைகள், பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அரசு நிதியுடன் பராமரிக்கப்படும் பொதுமக்கள் கூடுகின்ற இடங்களைப் பயன்படுத்துவதற்கும்*
- *மதம், இனம் சாதி, பால், பிறப்பிடம் அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் எந்தவொரு குடிமகனையும் கட்டுப்பாடு அல்லது நிபந்தனைக்கு உட்படுத்தக்கூடாது.*

***பிரிவு 15 (3)*** *குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் முன்னுரிமை மற்றும் சலுகைகள் வழங்குவதை இப்பிரிவு தடை செய்யக்கூடாது.*

***பிரிவு 15 (4)*** *சமூக மற்றும் கல்விபெற வாய்ப்பற்ற பிற்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரை முன்னேற்றச் சலுகைகள் வழங்குவதை இப்பிரிவு தடை செய்யக்கூடாது.*

***பிரிவு 16 (1)*** *அரசு பதவிகளுக்கு நியமனம் அல்லது வேலை வாய்ப்பில் அனைத்துக் குடிமக்களுக்கும் சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.*

***பிரிவு 16 (2)*** *மதம், இனம், சாதி, பால், வம்சாவழி, பிறப்பிடம் அல்லது இவற்றின் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் அரசு பதவிகளுக்கு நியமனம் அல்லது வேலைவாய்ப்பு தொடர்பாக எந்தவொரு குடிமகனையும் தகுதியற்றவராகக் கருதக்கூடாது மற்றும் பாகுபாடு காட்டக்கூடாது.*

***பிரிவு 17*** *தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டதால், எந்த வடிவிலும் தீண்டாமையைக் கடைபிடிப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. தீண்டாமையைக் கடைப்பிடிப்பது சட்டத்தின்படி குற்றமாகும்.*

## ***2. சுதந்திரத்திற்கான உரிமை***

- *எவ்விதத் தடையுமின்றிப் பிறர் பாதிப்படையாவண்ணம் ஒருவன் தன் உணர்வுகளை வெளிப்படுத்துவதும் அதைச் செயல்படுத்துவதும் சுதந்திரஉரிமை*
- *சட்டத்திற்குட்பட்டு ஒருவர் தன்னைப் பற்றியும், சமூக அரசியல் பொருளாதார நிலைகள் பற்றியும், அரசின் திட்டங்கள் பற்றியும் தகவல் பெறுகின்ற உரிமை சுதந்திர உரிமை*
- *இச்சுதந்திர உரிமை சட்டத்தின் வரையறைக்கு உட்பட்டது*
- *அடக்குமுறை, கொத்தடிமை முறை, மனிதர்களைப் பல்வேறு வேலைகளுக்காகக் கடத்தல் முறை இதுபோன்ற செயல்கள் ஒரு தனிமனிதனின் சுதந்திர உரிமையைப் பறிக்கிறது.*
- *சுதந்திரம் என்பது ஒவ்வொரு தனி மனிதனின் இயல்பான இயக்கம். இதற்குத் தடைகள் இருப்பின் அது அவனின் சுதந்திர உரிமையைப் பறிப்பதாகும்.*

*பிரிவு 19 (1)* அனைத்துக் குடிமக்களுக்கும் கீழ்க்கண்ட உரிமைகள் உண்டு

*பிரிவு 19 (1) (a)* பேச்சு மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை

*பிரிவு 19 (1) (b)* ஆயுதங்கள் இல்லாமல் அமைதியாகக் கூடும் உரிமை

*பிரிவு 19 (1) (c)* சங்கங்கள் அமைக்கும் உரிமை

*பிரிவு 19 (1) (d)* இந்திய எல்லைக்குள் சுதந்திரமாகச் சென்று வரும் உரிமை

*பிரிவு 19 (1) (f)* ஏதேனும் தொழில், வேலை, வணிகம் அல்லது வியாபாரம் செய்யும் உரிமை

*பிரிவு 20 (1)* நடைமுறையில் இருக்கும் சட்டத்தில் குற்றம் எனக் குறிப்பிடப்பட்ட செயலைத் தவிர வேறு எந்தச் செயலுக்காகவும் ஒருவர் தண்டிக்கப்படக்கூடாது. மேலும் அச்செயல் புரிந்த நேரத்தில் நடைமுறையிலிருந்த சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட தண்டனையைவிட அதிகப்படியான தண்டனை வழங்கக்கூடாது.

*பிரிவு 20 (2)* ஒரே குற்றத்திற்காக ஒருவரை ஒன்றுக்கும் மேற்பட்ட முறை தண்டிக்கக்கூடாது.

*பிரிவு 20 (3)* குற்றம் சாட்டப்பட்ட எந்த ஒரு நபரையும் அவருக்கு எதிராகச் சாட்சியளிக்க வற்புறுத்தக்கூடாது.

## அ) உயிர்வாழும் உரிமை

- தனிநபர் மாண்பு, மதிப்புடன் உயிர்வாழ்தல்
- நடமாட்டச் சுதந்திரத்தோடு உயிர்வாழ்தல்
- சுயசிந்தனையோடு செயல்படும் உரிமை
- ஆற்றிலினை வெளிப்படுத்தும் உரிமை. வாழ்வுரிமை என்பது வெறுமனே உயிர்வாழ்தல் என்ற பொருள் அல்ல. மாறாக வாழ்தல் என்பது இயற்கை வாழ்வாதாரம், கல்வி, மருத்துவம், உடல்நலம், மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படாமலிருத்தல் போன்ற உயரிய உரிமைகளை அனுபவிப்பது.

*பிரிவு 21* சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட நடைமுறையில் இல்லாமல் வேறு விதத்தில் ஒரு நபரின் உயிரையோ அல்லது அவரின் தனிநபர் சுதந்திரத்தையோ பறிக்கக்கூடாது.

*பிரிவு 22 (1)*

- கைது செய்யப்படும் நபரிடம் கைதிற்கான காரணத்தினைத் தெரிவிக்காமல் காவலில் வைக்கக்கூடாது.
- கைதானவர் அவருடைய விருப்பப்படி வழக்குரைஞர் ஒருவரைக் கலந்தாலோசித்து அவருடைய தரப்பில் வழக்குரைஞர் ஒருவரை வாதிட அனுமதி வழங்க வேண்டும்.

*பிரிவு 22 (2)* கைதான இடத்திலிருந்து நீதிமன்றம் செல்வதற்கான நேரம் நீங்கலாக 24 மணி நேரத்திற்குள் கைதானவர்கள் அருகிலுள்ள நீதித்துறை நடுவர் முன்பு ஆஜர்படுத்தப்பட வேண்டும்.

*பிரிவு 22 (3)* *இப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் உரிமைகள் கீழ்கண்டவர்களுக்குப் பொருந்தாது.*

1. *நம் நாட்டிற்கெதிராகப் போர் தொடுக்கும் நாட்டினைச் சேர்ந்தவர்கள்.*
2. *தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள்*

## ***ஆ) கல்வி உரிமையும் வாழ்வுரிமையே!***

- *விலங்கிற்கும் மனிதனுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை வெளிக்கொணரக் கல்வி அடையாளமாகப் பயன்படுகிறது.*
- *ஒரு மனிதன் ஆற்றலுடன் இச்சமூகத்திற்குப் பயனுள்ள வகையில் மாறவேண்டுமெனில் அவனுக்குக் கல்வி அவசியம்.*
- *அரசு இக்கல்வியைக் கட்டாயமாக, இலவசமாக 6 முதல் 14 வயது உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்க வேண்டும் என்று உன்னிகிருஷ்ணன் எதிர் ஆந்திரப்பிரதேசம் என்ற வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.*
- *இலவசத், தரமான, கட்டாயக் கல்வியை வழங்கும் அரசு 0-6 வயதுள்ள குழந்தைகளுக்கும் அதை நீட்டிக்க வேண்டும் என்பதும் அடிப்படை உரிமையாகும்.*

## ***இ) தூய்மையான சுற்றுப்புறச் சூழல் வாழ்வுரிமையே***

- *இயற்கை அனைத்து மக்களுக்கும் வழங்கியுள்ள வாழ்வாதாரமாகிய நீர், நிலம், காற்று ஆகாய மண்டலம் ஆகியவற்றை அனைவரும் சமபங்கீடு செய்து அனுபவிப்பது ஒவ்வொருவரின் அடிப்படை உரிமையாகும்.*
- *வாழ்வாதாரங்களைத் தனியார் நிறுவனங்கள் மாசுபடுத்துவது மற்றும் அழிப்பது என்பது தனிமனிதனின் வாழ்வுரிமையை நசுக்கும் செயலாகும்.*
- *பணியிடங்களில் பெண்களுக்கெதிராக நடக்கும் பாலியல் வன்முறை என்பதும் வாழ்வுரிமையை மீறும் செயலாகும்.*

## ***3) சுரண்டலுக்கெதிரான உரிமைகள்***

*பிரிவு 23* *மனிதர்களை விற்பது வாங்குவது மற்றும் அனைத்து வகையான கொத்தடிமை முறைகள் தடை செய்யப்பட்டுள்ளது.*

*பிரிவு 24* *14 வயதிற்குட்பட்ட சிறுவர்களை எந்தத் தொழிற்சாலையிலும் சுரங்கத்திலும் பிற அபாயகரமான தொழிலிலும் நியமிக்கக்கூடாது.*

- *14 வயதிற்குட்பட்ட சிறுவர்களை அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தி அவர்களது உழைப்பைச் சுரண்டுதல் கூடாது.*
- *குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு மற்றும் முறைப்படுத்துதல் சட்டத்தின் படி குழந்தைகளின் நலனை மையப்படுத்தித் தொழில்கள் இருக்க*

வேண்டுமேயன்றி, தொழிற்சாலைகளின் நலனை மையப்படுத்திக் குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக் கூடாது.

- கொத்தடிமை முறை என்பது மனித உரிமைக்கு எதிரானது.

## *உயிர்வாழும் உரிமை குறித்த வழக்குகள் பிரிவு 21*

*மேனகா காந்தி எதிர் இந்திய அரசு என்ற வழக்கில் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 21ல் குறிப்பிடப்பட்டிருக்கும் வாழ்வுரிமை மற்றும் தனிநபர் சுந்திரம் என்ற சொற்றொடர் பரந்த பொருள் கொண்டதாகவும் பல்வேறு வகையான உரிமைகளை உள்ளடக்கியதாகவும் உள்ளது என்று உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்தது.*

*மேலும் கராக்சிங் எதிர் உத்திரப்பிரதேச அரசு என்ற வழக்கில் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 21ல் குறிப்பிட்டுள்ள வாழ்வுரிமை மற்றும் தனிநபர் சுதந்திரம் என்ற பதத்திற்குள் மனிதர்களின் அத்தனை உரிமைகளும் அடங்கும் என்று உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்தது. இதே போன்ற கருத்துக்களை உச்சநீதிமன்றம் பல வழக்குகளில் தெரிவித்தது.*

## வெளிநாட்டிற்குப் பயணம் செய்யும் உரிமை

*சத்வந்த் சிங் சிகாணி எதிர் இந்திய அரசு என்ற வழக்கில் வெளிநாட்டிற்குப் பயணம் செய்யும் உரிமை பிரிவு 21ல் குறிப்பிட்டுள்ள தனிநபர் சுதந்திரம் என்ற பதத்திற்குள் அடங்கியிருப்பதால் வெளிநாட்டிற்குப் பயணம் செய்யும் உரிமை அடிப்படை உரிமையாக உச்சநீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இதே உரிமையை உச்சநீதிமன்றம் மேனகா காந்தி எதிர் இந்திய அரசு என்ற வழக்கிலும் அடிப்படை உரிமையாக அங்கீகரித்தது.*

## *அந்தரங்க உரிமை*

*கராக் சிங் எதிர் உத்திரப்பிரதேச அரசு என்ற வழக்கில் கராக்சிங் வீட்டிற்குள் அனுமதியின்றி நுழைவதும் அவருக்குத் தொல்லை தருவதும் பிரிவு 21ல் அடங்கிய அந்தரங்க உரிமையைப் பாதிக்கும் என்றும் விளக்கி உத்திரப்பிரதேச காவல் விதிகளின் விதி இரவு நேரங்களில் வீடுகளில் சோதனையிடுதல் என்ற அதிகாரம் அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 21ற்கு முரண்பட்டுள்ளது என்று அறிவித்து ரத்துச் செய்து உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.*

*இதே உரிமையினைக் கோவிந்த் எதிர் மத்தியப் பிரதேச அரசு வழக்கில் மேலும் விவரமாக உச்சநீதிமன்றம் விளக்கித் தீர்ப்பளித்தது. இவ்வழக்கில் அந்தரங்க உரிமை என்பது வீட்டிலிருப்போருடைய நெருக்கமான உறவுகள், குடும்பம், திருமணம், தாய்மை அடைதல், கருத்தரித்தல் குழந்தைகளை வளர்த்தல் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியதாகும் என்று அந்தரங்க உரிமை என்ற அடிப்படை உரிமையை விளக்கி மேற்படி உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.*

*ராஜகோபால் எதிர் தமிழக அரசு என்ற வழக்கில் அந்தரங்க உரிமை என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 21ல் உத்திரவாதமளிக்கப்பட்ட வாழ்வுரிமை மற்றும் தனிநபர் சுதந்திரம் என்ற அடிப்படை உரிமைக்குள் அடங்கியிருக்கிறது என்று உச்சநீதிமன்றம் விளக்கியது.*

இவ்வழக்கில் ஒருவருடைய சம்மதம் இல்லாமல் அவரின் வாழ்க்கை, குடும்பம், திருமணம், கருத்தரித்தல், குழந்தை பெறுதல் போன்ற விபரங்களை வெளியிடக்கூடாது என்றும் அவ்வாறு வெளியிட்டால் அது அவருடைய அந்தரங்க உரிமையைப் பாதிக்கும் என்றும் உச்சநீதிமன்றம் விளக்கியது.

## விரைவான விசாரணைக்கான உரிமை

இவ்வுரிமை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படாவிட்டாலும் உச்சநீதிமன்றத்தால் இவ்வுரிமை பிரிவு 21க்குள் உட்கிடையாக உறுதி செய்யப்பட்டிருக்கக்கூடிய உரிமை என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

உசைனரா காட்டூர் எதிர் பீகார் அரசு என்ற வழக்கில் விசாரணையின்றி நீண்டகாலமாகச் சிறையில் அடைக்கப்பட்டிருத்தல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 21ற்கு விரோதமானது என்று உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

இவ்வழக்கில் விரைவான விசாரணைக்கான உரிமை பிரிவு 21ல் உத்திரவாதமளிக்கப்பட்டுள்ள வாழ்வுரிமை மற்றும் தனிநபர் சுதந்திரத்தின் முக்கியப் பகுதியாகும் என்றும் உச்சநீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பில் தெளிவுபடுத்தியுள்ளது.

உசைனரா காட்டூன் 2 எதிர் உள்துறைச் செயலர் பீகார் அரசு என்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு விரைவான விசாரணையினை நடத்த வேண்டியது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அரசுகளுக்கு உண்டான கடமை என்றும் அக்கடமையினை நிதி அல்லது நிர்வாகக் காரணங்களைக் காண்பித்துத் தவிர்க்க முடியாது என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது அதில் தலையிட்டு நிவாரணம் வழங்க வேண்டிய கடப்பாடு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் உச்சநீதிமன்றத்திற்கு உள்ளதால்

குற்றம் சாட்டப்பட்டவருக்கு விரைவான விசாரணைக்கான உரிமை மறுக்கப்படும்போது சம்பந்தப்பட்ட அரசுகளுக்குப் புலனாய்வுத் துறையினைப் பலப்படுத்துவது குறித்து அறிவுறுத்துவதுபுதிய நீதிமன்றங்களை ஏற்படுத்துவது, கூடுதலாக நீதிபதிகள் நியமிக்கப்படுவது போன்ற விசாரணையை விரைவாக முடிக்கத் தேவையான வழிமுறைகளைப் பின்பற்றுமாறு கட்டளையிட வேண்டியது அவசியமாகிறது எனத் தெரிவித்தது.

ராஜ்தேவ் சர்மா எதிர் பீகார் அரசு என்ற வழக்கில் விரைவான விசாரணைக்கான உரிமையை அங்கீகரிக்கும் வகையில் குற்றவியல் விசாரணைகளில் ஏழாண்டு காலத்திற்குக் குறைவான தண்டனை வழங்கக்கூடிய குற்றங்களை விசாரிக்க குழு நீதிமன்றம், சாட்சி விசாரணை முடிந்தாலும் முடியாவிட்டாலும் அரசு தரப்பு விசாரணையைக் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்தவுடன் முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

ஏழாண்டு காலத்திற்குக் கூடுதலான தண்டனை வழங்கக்கூடிய குற்றங்களை விசாரிக்கும் நீதிமன்றம், சாட்சி விசாரணை முடிவடைந்தாலும் முடிவடையாவிட்டாலும் அரசு தரப்பு

*விசாரணையைக் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவடைந்தவுடன் முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.*

## <u>இலவசச் சட்ட உதவிப் பெறுவதற்கான உரிமை</u>

*எம்.எ.ஆஸ்காட் எதிர் மகாராஷ்டிரா அரசு என்ற வழக்கில் இலவசச் சட்ட உதவிப் பெறுவதற்கான உரிமை, இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 21ல் உள்ளடங்கிய ஒரு அடிப்படை உரிமையாகும் என்று உச்சநீதிமன்றம் கருத்து தெரிவித்தது. ஒரு சிறைக்கைதி பல்வேறு நியாயமான காரணங்களால் தகுதி வாய்ந்த வழக்குரைஞரை நியமித்துத் தன்னைக் காத்துக் கொள்ள இயலாத நிலையில் நீதிமன்றமே அவருக்காக வாதாட ஒரு தகுதி வாய்ந்த வழக்குரைஞரைக் குற்றம் சாட்டப்பட்டவரின் சம்மதத்துடன் நியமிக்க வேண்டும் என்றும் இத்தீர்ப்பில் உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியது.*

*உசைனரா காட்டூன் (2) எதிர் உள்துறை செயலர், பீகார் அரசு என்ற வழக்கிலும் இலவசச் சட்ட உதவி என்பது நியாயமான நேர்மையான சட்ட நடைமுறையின் ஒரு அங்கமாக இருப்பதால் பொருளாதாரக் காரணங்களினாலோ அல்லது பிற இயலாமையினாலோ நீதியைப் பெறும் வாய்ப்பு ஒருவரிடமிருந்து பறிக்கப்படக்கூடாது என்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.*

*காட்ரி (2) எதிர் பீகார் மாநில அரசு என்ற வழக்கில் இவலச சட்ட உதவியினைக் குற்றம் சாட்டப்பட்டவர் கேட்டுத்தான் பெற வேண்டுமா? என்ற வினா எழுந்தது. இவ்வினாவிற்கு விடையளித்த உச்சநீதிமன்றம் இந்தியாவில் உள்ள கல்வியறிவின்மையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கையில் குற்றம் சாட்டப்பட்டவர் கேட்டால்தான் இலவசச் சட்ட உதவிக் கிடைக்கும் என்று சொன்னால் அது கேலிக்குரியதாகி விடும்*

*அமர்வு நீதிபதி முன்பாகவோ அல்லது குற்றத்துறை நடுவர் முன்பாகவோ குற்றம் சாட்டப்பட்டவர் ஆஜராகும்போது சம்பந்தப்பட்ட நீதிபதி குற்றம் சாட்டப்பட்டவரிடம் உங்களால் வழக்குரைஞர் நியமித்து வழக்காட முடியவில்லை என்றால் அரசு செலவில் வழக்குரைஞர் நியமிக்கப்பட்டு இலவசச் சட்ட உதவிப் பெறும் உரிமை உண்டு என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவர்கள் என்று தீர்ப்பளித்துள்ளது.*

*குற்றம் சாட்டப்பட்டவரிடம் இலவசச் சட்ட உதவி பெறும் உரிமை குறித்துத் தெரிவிக்காமல் பின்னர் அக்குற்றம் சாட்டப்பட்டவர் அந்நீதிமன்றத்தால் தண்டனைக்கு உட்படுத்தப்படும்போது சம்பந்தப்பட்ட நீதிமன்றம் நீதிபதி இலவசச் சட்ட உரிமை குறித்துத் தெரிவிக்காமல் இலவசச் சட்ட உதவியைப் பெற்றுத் தராமல் வழக்கினை விசாரித்தது பிரிவு 21ல் வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமையை மீறிய செயலாகும், அரசியலமைப்பு சட்டட்திற்குப் புறம்பாக இருப்பதால் அவ்விசாரணையைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.*

## இறுதியில்

*இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் சர்வதேச மனித உரிமைப் பிரகடனங்களில் கூறப்பட்டு நமது நாட்டு நீதிமன்றங்களில் நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமைகளான வாழ்வுரிமை, சுதந்திரம், சமத்துவம், தனிநபர் மாண்பு சம்பந்தப்பட்ட உரிமைகளே, மனித உரிமைகள் என்று மனித உரிமைச் சட்டம் கூறுகிறது.*

## 4. மதச்சுதந்திரத்திற்கான உரிமைகள்

**பிரிவு 25** *அனைவரும் அவரவர் மனசாட்சிபடி மதத்தினைப் பின்பற்றச் சம உரிமை உண்டு. பொது அமைதி, ஒழுக்க முறைமை, சுகாதாரம் ஆகியவற்றிற்கு உட்பட்டு ஒரு மதத்தைத் தழுவப், பின்பற்றப், பரப்ப அனைவருக்கும் உரிமையுண்டு.*

**பிரிவு 26** *பொது அமைதி, ஒழுக்க முறைமை, சுகாதாரம் ஆகியவற்றிற்கு உட்பட்டு ஒவ்வொரு மதத்தினருக்கும் அல்லது மதப் பிரிவினருக்கும்*

- *மத மற்றும் அறநிலையங்களை நிறுவவும், பராமரிக்கவும்*
- *மதம் சம்பந்தப்பட்ட விவகாரங்களை மேலாண்மை புரியவும்*
- *அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைப் பெறவும் சொந்தமாக்கிக் கொள்ளவும்*
- *அச்சொத்துக்களைச் சட்டங்களின் படி நிர்வகிக்கவும் உரிமை உண்டு*

**பிரிவு 27** *எந்தவொரு குறிப்பிட்ட மதத்தினையும் அல்லது மதப்பிரிவையும் வளர்க்க அல்லது பராமரிக்க ஆகும் செலவிற்காக எவரையும் வரி செலுத்துமாறு கட்டாயப்படுத்தக் கூடாது.*

**பிரிவு 28** *அரசு நிதியால் முழுமையாகப் பராமரிக்கப்படும் கல்வி நிறுவனங்களில் மதபோதனைக் கல்வி கற்பிக்கக்கூடாது. மற்ற அரசு நிதி உதவிப் பெறும் தனியார் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் மற்றும் பெற்றோரின் சம்மதத்துடன் தான் , அங்கு நடத்தப்படும் மத வழிபாடுகள் அல்லது மதபோதனை வகுப்புகளில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ள முடியும்.*

- *மதச் சுதந்திரம் என்பது தனிமனிதனின் அடையாளத்திற்கான உரிமையாகும்.*

## *5) சிறுபான்மையினருக்கான உரிமைகள்*

***பிரிவு 29 (1)*** *இந்திய எல்லை அல்லது எதாவது ஒரு பகுதியில் வசிக்கும் குடிமக்களின் அனைத்துப் பிரிவினருக்கும், அவர்களுடைய மொழி எழுத்து வடிவம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் உரிமை உண்டு.*

***பிரிவு 29 (2)*** *அரசால் அல்லது அரசின் நிதி உதவியால் நடத்தப்பட்டு வருகின்ற கல்வி நிலையங்களில் எந்தக் குடிமகனுக்கும் மதம், இனம், சாதி, மொழி அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றில் அடிப்படையில் சேர்க்கை அனுமதி மறுக்கப்படக்கூடாது.*

***பிரிவு 30*** *மொழியை அடிப்படையாகக் கொண்ட அல்லது மதத்தினை அடிப்படையாகக் கொண்ட அனைத்துச் சிறுபான்மையினருக்கும், அவர்களின் விருப்பதிற்கேற்ப கல்வி நிறுவனங்களை நிறுவுவதற்கும் அவற்றை நிர்வகிக்கவும் உரிமை உண்டு.*

3

# அகில உலக மனித உரிமைப் பிரகடனம்

## முகவுரை

*மானுடச் சமூக உறுப்பினர்களின் உள்ளார்ந்த மாண்பும், சமத்துவமும் பிரிக்க இயலா உரிமைகளுமே உலகின் சுதந்திரம், நீதி, அமைதிக்கான அடித்தளங்களாகும்.*

*மனித உரிமைகளைப் புறக்கணித்தல், அவமதித்தல் எனும் காட்டுமிராண்டிச் செயல்கள் மனிதக் குலத்தின் மனசாட்சியையே உலுக்கியுள்ளது. மனிதர்கள் பேச்சுச் சுதந்திரமும் நம்பிக்கைச் சுதந்திரமும் பெற்று, அச்சத்திலிருந்தும், இல்லாமையிலிருந்தும் விடுபட்டு வாழும்படியான உலகை மலரச் செய்வதே சாதாரண மக்களின் ஏக்கமாகும்.*

*கொடுங்கோன்மையையும், ஒடுக்குமுறையையும் எதிர்த்துப் போராடுகையில் வேறு வழியின்றி மனிதன் கலகக் கொடி உயர்த்தும் நிலை தடுக்கப்படவேண்டுமெனில், சட்டத்தின் ஆட்சியால் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது அவசியமாகிறது.*

*தேசங்களுக்கிடையே நட்புறவு வளருவதை ஊக்கப்படுத்துவது இன்றியமையாததாகும்.*

*ஐ.நா அமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும் அடிப்படை மனித உரிமைகளிலும், மனித மாண்பிலும், நன்மதிப்பிலும், ஆண்-பெண் சமவுரிமைகளிலும் ஆழமான நம்பிக்கை கொண்டுள்ளன. இந்நம்பிக்கையை ஐ.நா. சாசனத்தின் வாயிலாகவும் உறுதி செய்துள்ளன. சமுதாய முன்னேற்றத்துக்கு ஊக்கமளிக்கவும், முழுச்சுதந்திரத்தோடு வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் இந்நாடுகள் உறுதி பூண்டுள்ளன.*

*ஐக்கிய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் அரசுகள் இவ்வமைப்போடு ஒத்துழைத்து, மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரங்களையும் உலகளாவிய முறையில் யாவரும் மதித்துக் கடைப்பிடிக்கும் நிலையை ஏற்படுத்த உறுதி அளித்துள்ளன.*

*இந்த உறுதிமொழியை முழுமையாக நிறைவேற்றிட, இவ்வுரிமைகளையும், சுதந்திரங்களையும் பற்றிய பொதுவான புரிதல் இன்றைய கட்டாயத் தேவையாகும். ஆகவேதான், ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச்சபை இங்கு இப்பிரகடனத்தை வெளியிடுகிறது.*

## பிரகடனத்தின் நோக்கம்

*அனைத்து மக்கள் சமுதாயங்களும் அனைத்துத் தேசங்களும் முயன்று அடைய வேண்டிய பொது நியதியாக இந்த அகில உலக மனித உரிமைப் பிரகடனத்தை ஐ.நா. பொதுச்சபை அறிவிக்கிறது. தனி மனிதர் ஒவ்வொருவரும், ஒவ்வொரு சமூக அமைப்பும் இப்பிரகடனத்தை எப்போதும் மனத்தில் இருத்திக் கொள்வது அவசியமாகும். ஐக்கிய நாடுகள் அமைப்பில் அங்கம்*

*வகிக்கும் அரசுகளின் அதிகார வரம்புக்குட்பட்ட ஆட்சிப் பரப்புகளில் வாழும் மக்கள் சமுதாயங்களிடையில் போதனை மற்றும் கல்வி வாயிலாக இந்த உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் மீது மதிப்பை வளர்க்க முயல வேண்டும். தேசிய மற்றும் உலக அளவில் முற்போக்கான நடவடிக்கைகள் மூலம் இவ்வுரிமைகளுக்கான உலகளாவிய ஆக்கப்பூர்வமான ஒப்புதலையும், அவை நடைமுறைப்படுத்தப்படும் நிலையையும் அடைய ஓயாதுழைக்க வேண்டும் என்பனவே இப்பிரகடனத்தின் முதன்மை நோக்கங்களாகும்.*

## ***சுதந்திரம், சமத்துவம்***

***பிரிவு 1:*** *எல்லா மனிதர்களும் உள்ளார்ந்த சுதந்திரத்தோடும், மாண்போடும், உரிமைகளோடும், சமத்துவத்தோடும் பிறக்கிறார்கள். அவர்கள் பகுத்தறிவும், மனசாட்சியும் வாய்க்கப் பெற்றவர்கள்; எனவே ஒருவரோடு ஒருவர் சகோதரத்துவ உணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.*

***பிரிவு 2:*** *இப்பிரகடனத்தில் எடுத்துரைக்கப்படும் உரிமைகள், சுதந்திரங்கள் அனைத்தும் இனம், நிறம், பால், மொழி, சமயம், அரசியல்கொள்கை, தேச அல்லது சமுதாயப் பின்னணி, சொத்து, பிறப்பு அல்லது பிறவகைத்தகுநிலை (Status) போன்ற எவ்வித வேற்றுமையுமின்றி அனைவருக்கும் உரியனவாகும். ஒருவர் சார்ந்துள்ள நாடு, ஆட்சிப்பரப்பு, அரசியல், அதிகாரவரம்பு, சர்வதேசத் தகுநிலை எப்படி இருப்பினும், அவர் சார்ந்த நாடு சுயசார்புடையதாகவோ, இறையாண்மையற்ற*

*தாகவோ இருப்பினும், அவற்றின் அடிப்படையில் மனிதரை வேற்றுமை பாராட்டக் கூடாது.*

## ***உயிர்வாழச் சுதந்திரம்***

***பிரிவு 3:*** *உயிருக்கும், சுதந்திரத்துக்கும், பாதுகாப்புக்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.*

## ***அடிமைத்தனத்திற்கு எதிராக***

*பிரிவு 4:* *எவரையும் அடிமையாக வைத்துக் கொள்ள யாருக்கும் உரிமையில்லை. அடிமை முறையும், அடிமை வியாபாரமும் அவற்றின் அனைத்து வடிவங்களும் தடை செய்யப்பட வேண்டும்.*

## ***சித்திரவதைக் கொடுமைகளுக்கு எதிராக***

*பிரிவு 5:* *யாரையும் சித்திரவதை செய்யக் கூடாது. கொடூரமாக, மனிதத்தன்மையற்று, கேவலமாக நடத்தக் கூடாது. கொடூரமான, மனிதத்தன்மையற்ற கேவலமான தண்டனைக்கு உட்படுத்தக் கூடாது.*

## மானுட அங்கீகாரம்

*பிரிவு 6:* *சட்டத்திற்கு முன் மனிதராக அங்கீகரிக்கப்படும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.*

## சமத்துவமும் சட்டப் பாதுகாப்பும்

*பிரிவு 7:* *சட்டத்தின் முன் அனைவரும் சமம். எவ்வித பாகுபாடுமின்றி சட்டத்தின் முன் சமபாதுகாப்பைப் பெறும் உரிமை அனைவருக்கும் உண்டு. இப்பிரகடனத்தை மீறுகின்ற வகையில் மனிதரிடம் இருந்து மனிதரை பாகுபடுத்துதல் அல்லது பாகுபடுத்தத் தூண்டுதல் என்பனவற்றில் இருந்து பாதுகாப்பு பெறுகின்ற உரிமை அனைவருக்கும் உண்டு.*

## நீதி பெறும் உரிமை

*பிரிவு 8:* *அரசமைப்போ சட்டமோ நமக்கு வழங்கிடும் அடிப்படை உரிமைகளை மீறும் குற்றச்செயல்களுக்கு அந்நாட்டின் நீதிமன்றம் மூலம் தக்க பரிகாரம் பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.*

## கைதுக்கு எதிராக

*பிரிவு 9:* *எவர் ஒருவரையும் சரியான காரணமின்றி கைது செய்வதோ, சிறைப்படுத்துவதோ, நாடு கடத்துவதோ கூடாது.*

## வெளிப்படையான விசாரணை

*பிரிவு 10:* *ஒருவருக்குரிய உரிமைகளையும், கடமைகளையும் தீர்மானிக்கின்ற போதும், அவருக்கு எதிராக ஏற்கனவே குற்றவியல் குற்றச்சாட்டு இருந்தாலும், அதனை நிரூபிக்க, நடுநிலை தவறாத நடுவர் மன்றத்தின் மூலம் நியாயமான, வெளிப்படையான விசாரணை கோருவதற்கான உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு.*

## தண்டனைக்கு எதிராக

***பிரிவு 11:***

1. *தண்டனைக்குரிய குற்றம் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் வெளிப்படையான விசாரணையில் குற்றவாளியென்று சட்டப்படி நிரூபணமாகும் வரை, குற்றமற்றவராகவே கருதப்படவேண்டும். இவ்விசாரணையில் அவரது பாதுகாப்பிற்குரிய அனைத்து உத்திரவாதங்களையும் கோருவதற்கான உரிமை அவருக்கு உண்டு.*

2. தேசியச் சட்டத்தின் கீழோ அல்லது அகில உலகச் சட்டத்தின்படியோ ஒரு செயல் குற்றம் என்று வரையறுக்கப்படா நிலையில், அல்லது அச்செயல் புரிந்த நேரத்தில் சட்டப்படி வரையறுக்கப்பட்டுள்ள தண்டனையை விடக் கூடுதலான தண்டனை வழங்கப்படக் கூடாது.

## தனிமனிதச் சுதந்திரப் பாதுகாப்பு

**பிரிவு 12:** உரிய நடைமுறையைக் கடைப்பிடிக்காமல் ஒருவருடைய அந்தரங்கம், குடும்பம், இல்லம் அல்லது கடிதத் தொடர்பு ஆகியவற்றில் தேவையின்றிக் குறுக்கிடக் கூடாது. எவருடைய மாண்புக்கும், நற்பெயருக்கும் வேண்டுமென்றே களங்கம் ஏற்படுத்திடக் கூடாது. இத்தகைய குறுக்கீடுகளுக்கும், தாக்குதல்களுக்கும் எதிராகப் பாதுகாப்பு பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

## குடியேற்றத்திற்கும், தஞ்சம் புகுவதற்கும் உரிமை

**பிரிவு 13:**

1. தத்தமது அரசின் எல்லைக்குள் சுதந்திரமாய்ப் போய் வருவதற்கும், குடியிருப்பதற்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.
2. சொந்த நாடு உட்பட எந்த நாட்டை விட்டும் வெளியேறுவதற்கும், சொந்த நாட்டுக்கே திரும்புவதற்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

**பிரிவு 14:**

1. தாங்கவியலா கொடூரச் சூழலிலிருந்து தப்பித்துப் பிற நாடுகளில் தஞ்சம் கோரிப்பெறுவதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.
2. ஐ.நா. வரையறுத்த நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் புறம்பாகவோ, அரசியல் சாராக் குற்றங்கள் புரிந்ததற்கோ அகதியாகத் தஞ்சம் கோரிப் பெறும் உரிமை கிடையாது.

## தேசிய இன அடையாளம்

**பிரிவு 15:**

1. தேசிய இன உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.
2. தன்னிச்சையாக எவரது தேசிய இன உரிமையைப் பறிப்பதற்கோ, அவரது தேசிய இன அடையாளத்தை மாற்றிக் கொள்வதற்கான உரிமையை மறுப்பதற்கோ உரிமை இல்லை.

## திருமணம் குறித்து

***பிரிவு 16:***

*1.* *மணம் புரிந்து கொள்வதற்கும் குடும்பம் அமைத்துக் கொள்வதற்குமான உரிமை உரிய வயதடைந்த அனைத்து ஆண்களுக்கும், பெண்களுக்கும் உண்டு. மரபினம், தேசிய இனம் அல்லது சமயம் காரணமாய் இந்த உரிமைக்கு வரம்பு ஏதும் விதிக்கலாகாது. திருமணத்தின் போதும், திருமண உறவை ரத்துச் செய்கிற போதும், ஆணுக்கும், பெண்ணுக்கும் திருமணம் தொடர்பான சம உரிமைகள் உண்டு.*

*2.* *மண மக்களின் முழுமையான சுய இசைவோடு தான் திருமண உறவு ஏற்படுத்தப்பட வேண்டும்.*

*3.* *குடும்பமே சமுதாயத்தின் இயற்கையான, அடிப்படையான அலகு ஆகும். சமுதாயத்திடமிருந்தும், அரசிடமிருந்தும் பாதுகாப்பு பெறும் உரிமை குடும்பத்திற்குண்டு.*

## சொத்துரிமை

***பிரிவு 17:***

*1.* *தனித்தும், பிறரோடு சேர்ந்தும் சொத்து வைத்துக்கொள்வதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.*

*2.* *தன்னிச்சையாக எவரிடமிருந்தும் சொத்தினைப் பறிக்கக் கூடாது.*

## சிந்தனை வெளிப்பாடும் மத நம்பிக்கையும்

***பிரிவு 18:*** *சிந்தனை, மனச்சாட்சி மற்றும் சமயச் சுதந்திரத்திற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. சமயம் அல்லது நம்பிக்கையை மாற்றிக் கொள்வதற்கான சுதந்திரமும், தனித்தோ மற்றவர்களுடன் கூடியோ, வெளிப்படையாகவோ, அந்தரங்கமாகவோ போதனையிலும், நடைமுறையிலும், வழிபாட்டிலும், கடைப்பிடித்தலிலும் சமயம் அல்லது நம்பிக்கையை வெளிப்படுத்திக் கொள்வதற்கான சுதந்திரமும் இவ்வுரிமையில் அடங்கும்.*

***பிரிவு 19:*** *கருத்துரிமை, எண்ணங்களை வெளியிடுவதற்கான சுதந்திரம் அனைவருக்கும் உண்டு. தடையின்றித் தகவல்களைப் பெறவும், பெற்ற தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், இருக்கின்ற சமூகத் தொடர்பு சாதனங்களைத் தேச எல்லைகளைக் கடந்து முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவும் உரிமை உண்டு.*

## ***சங்கமாகும் உரிமை***

***பிரிவு 20:***

1. *அமைதியான முறையில் கூட்டம் கூடவும் சங்கமாகச் சேருவதற்குமான சுதந்திர உரிமை அனைவருக்கும் உண்டு.*
2. *ஒரு சங்கத்தில் சேரும்படி எவரொருவரையும் கட்டாயப்படுத்தலாகாது.*

## ***அரசாட்சியில் பங்கு***

***பிரிவு 21:***

1. *நேரிடையாகவோ, சுதந்திரமான முறையில் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் மூலமாகவோ, தமது நாட்டின் அரசாட்சியில் பங்கேற்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.*
2. *தன் நாட்டின் அரசுப் பணியில் சமவாய்ப்பு பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.*
3. *மக்களின் விருப்பமே அரசதிகாரத்தின் அடிப்படையாய் அமைதல் வேண்டும். அவ்வப்போது நடைபெறும் நேர்மையான தேர்தல்களின் வாயிலாக மக்கள் விருப்பம் வெளிப்பட வாய்ப்பளிக்க வேண்டும். இவை எல்லோருக்குமான சமவாக்குரிமையின் அடிப்படையில், இரகசிய வாக்களிப்பின்படி அல்லது அதற்கீடான சுதந்திர வாக்களிப்பு வழிமுறைகளின்படி நடைபெற வேண்டும்.*

## ***சமூகப் பாதுகாப்புரிமை***

***பிரிவு 22:*** *சமுதாயத்தின் உறுப்பினர் என்ற முறையில், சமூகப் பாதுகாப்பிற்கான உரிமையும், குடிமகனின் மாண்பிற்கும், ஆளுமை வளர்ச்சிக்கும், தேவையான பொருளாதாரச், சமூகப், பண்பாட்டு உரிமைகளை நிறைவேற்றிக் கொள்ளும் உரிமையும் ஒவ்வொருவருக்கும் உண்டு. இவ்வுரிமைகளின் நிறைவு தேசிய அரசின் வளர்ச்சித் திட்டங்கள் , அகில உலக ஒத்துழைப்பு, குறிப்பிட்ட அரசமைப்பு, நாட்டு வளங்கள் என்பனவற்றின் அடிப்படையில் அமையும்.*

## **வேலையுரிமையும் தொழிற்சங்க உரிமையும்**

***பிரிவு 23:***

1. *வேலைக்கான உரிமையும், தான் விரும்பும் வேலையைத் தேர்வு செய்து கொள்ளும் உரிமையும் நியாயமான, சாதகமான பணிச்சூழலுக்கான உரிமையும், வேலையின்மைக்கு எதிராகப் பாதுகாப்பு பெறும் உரிமையும் ஒவ்வொருவருக்கும் உண்டு.*

2. சமவேலைக்கு சமஊதியம் பெறும் உரிமை எவ்விதப் பாகுபாடுமின்றி ஒவ்வொரு நபருக்கும் உண்டு.

3. வேலை செய்கிற ஒவ்வொருவருக்கும் நியாயமான ஊதியம் பெற உரிமை உண்டு. இவ்வூதியமானது ஒருவர் கண்ணியமாகத் தனது குடும்பத்தினை வழி நடத்திடப் போதுமானதாக அமையவேண்டும். அவசியமானால், இந்த ஊதியத்தோடுகூடப் பிறவகை சமூகப்பாதுகாப்புகளைப் பெறவும் உரிமை உண்டு.

4. தனது நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தொழிற்சங்கங்கள் அமைப்பதற்கும், தொழிற்சங்கங்களில் சேருவதற்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

## ஓய்வுரிமை

**பிரிவு** *24:* ஓய்வுக்கும், இளைப்பாறலுக்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. வேலை நேரத்திற்கு நியாயமான முறையில் வரம்பிட வேண்டும் என்பதும், ஊதியத்தோடு கூடிய விடுமுறை வழங்க வேண்டும் என்பதும் இவ்வுரிமையில் அடங்கும்.

**பிரிவு** *25:* குடும்பத்தினரின் ஆரோக்கியத்தையும், நல்வாழ்வையும் பேணும் வகையில், உணவு, உடை, உறைவிடம், மருத்துவ வசதி, அவசியமான சமூகப்பணிகள் ஆகியவற்றுக்கான உரிமையும், வேலையின்மை, நோய், இயலாமை, கைம்மை நிலை, முதுமை, வாழ்வதற்கான வசதியின்மை போன்ற நிலைகளில் சமூகப் பாதுகாப்பைப் பெறுவதற்கான உரிமையும் ஒவ்வொருவருக்கும் உண்டு.

## கல்வியுரிமை

**பிரிவு** *- 26:*

1. கல்விபெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆரம்ப மற்றும் அடிப்படை நிலைகளிலாவது கல்வி இலவசமாக இருக்க வேண்டும். ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்க வேண்டும். தொழில் நுட்பம் மற்றும் தொழில் முறைக் கல்வியைப் பரவலாக்குவதோடு, உயர் கல்வியை அனைவருக்கும் தகுதி அடிப்படையில் சம வாய்ப்பிற்குரியதாக்க வேண்டும்.
2. மானுட ஆளுமையின் முழு வளர்ச்சியை, மனித உரிமையை, அடிப்படை சுதந்திரங்களின்பால் உள்ள மதிப்பை வலுப்படுத்துவதே கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும். தேசங்கள், மரபின அல்லது சமயக் குழுக்களிடையே நல்லிணக்கத்தையும், சகிப்புணர்வையும், நட்புணர்வையும் வளர்த்திடுவதாகவும், அமைதி காத்திட ஐக்கிய நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகளுக்குத் துணைப் புரிவதாகவும் கல்வி இருக்க வேண்டும்.
3. குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வியைத் தேர்வு செய்யும் உரிமை பெற்றோருக்கு உண்டு.

## கலையும், அறிவியலும்

**பிரிவு : *27***

*1.* தடையின்றிச் சமுதாயத்தின் கலாச்சார வாழ்க்கையில் பங்கேற்பதற்கும், கலைகளைத் துய்ப்பதற்கும், அறிவியல் முன்னேற்றத்திலும், அதனால் விளையும் நன்மைகளிலும் பங்கு பெறுவதற்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

*2.* தாம் படைத்திடும் கலை, இலக்கிய, அறிவியல் படைப்புகளிலிருந்து விளையும் தார்மீகப் பௌதிக நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை ஒவ்வொரு படைப்பாளிக்கும் உண்டு.

**பிரிவு *28:*** இப்பிரகடனத்தில் இடம்பெற்றுள்ள உரிமைகள், சுதந்திரங்கள் நிறைவுறும் வகையில், அமைக்கப்படும் நியாயமான, நல்லிணக்கத்தோடு கூடிய சமூகச், சர்வதேச ஒழுங்கமைவில் பங்கேற்க அனைவருக்கும் உரிமை உண்டு.

## சமூகக் கடமை

**பிரிவு : *29***

*1.* ஒரு மனிதன் தன் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றுகின்ற போதுதான், அவன் சுதந்திரமான ஆளுமை பெற்ற, முழு வளர்ச்சியடைந்த மனிதனாக மாற முடியும்.ஒரு குறிப்பிட்ட நாட்டின் சட்டத்திற்கு உட்பட்டுப், பிறரது உரிமைகளையும், சுதந்திரங்களையும் அங்கீகரித்தும், மதித்தும், அந்நாட்டு அறநெறி கோட்பாடுகளைக் கவனத்தில் கொண்டும், பொது அமைதி, மக்களாட்சி சமூகத்தின் பொது நலன் போன்ற வரம்புகளுக்கு உட்பட்டு மேற்சொல்லப்பட்ட உரிமைகளும், சுதந்திரங்களும் பயன்படுத்தப்பட வேண்டும்.

*2.* இவ்வுரிமைகளையும், சுதந்திரங்களையும் எந்நிலையிலும் ஐக்கிய நாடுகளின் நோக்கங்களுக்கும், கோட்பாடுகளுக்கும் புறம்பான விதத்தில் பயன்படுத்தலாகாது.

**பிரிவு : *30***

இப்பிரகடனத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைச், சுதந்திரங்களைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட ஒரு குழுவிற்கோ, அரசுக்கோ அல்லது தனிநபர்க்கோ உரிமையுண்டு என எவரும் பொருள் கொள்ளக்கூடாது.

இப்பிரகடனத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைச், சுதந்திரங்களைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட ஒரு குழுவிற்கோ, அரசுக்கோ அல்லது தனிநபர்க்கோ உரிமையுண்டு என எவரும் பொருள் கொள்ளக்கூடாது.

இப்பிரகடனத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைச், சுதந்திரங்களைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட ஒரு குழுவிற்கோ, அரசுக்கோ அல்லது தனிநபர்க்கோ உரிமையுண்டு என எவரும் பொருள் கொள்ளக்கூடாது.

# ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை

4

*(1989ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் நாள் ஐ.நா பொதுக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையில் இந்தியா நவம்பர் மாதம் 1992ல் கையெழுத்திட்டது)*

## நான்கு வகையான அடிப்படை உரிமைகள்

### உயிர் வாழ்வதற்கான உரிமை என்பது...

- *உயிருக்கான உரிமை*
- *உயர்ந்தபட்சத் தரமான உடல்நலம், சத்தான உணவு, வாழப் போதுமான வசதிகள்*
- *பெயர் வைத்துக்கொள்ள உரிமை*
- *ஒரு நாட்டைச் சேர்ந்தவராக வாழ உரிமை*

### பாதுகாப்பிற்கான உரிமை என்பது...

- *அனைத்து விதச் சுரண்டல்களிலிருந்தும்*
- *தீங்குகளிலிருந்தும்*
- *மனிதாபிமானமற்ற முறைகளிலிருந்தும்*
- *தரக்குறைவாக நடத்துவதிலிருந்தும்*
- *குறிப்பாக அவசர நிலை காலங்களிலும் ராணுவப் பிரச்சனை காலங்களிலும் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கான உரிமை*

### முன்னேற்றத்திற்கான உரிமை என்பது...

- *விளையாடுவதற்கான உரிமை*
- *கல்விக்கான உரிமை*
- *குழந்தைப்பருவ வளர்ச்சிக்கான*
- *குழந்தை பராமரிப்பதற்கான*
- *சமூகப் பாதுகாப்பிற்கான*
- *ஓய்வு மற்றும் கலாச்சார நடவடிக்கைகளுக்கான உரிமை*

### பங்கேற்பிற்கான உரிமை என்பது…

- *குழந்தையின் கருத்துக்களை மதிப்பது*
- *கருத்துக்களை வெளிப்படுத்தச் சுதந்திரம்*
- *தகவல் பெற உரிமை*
- *சிந்திப்பதற்கான உரிமை*

- சிந்தனைப்படி நடக்க, விரும்பிய மதத்தைத் தேர்ந்தெடுக்க உரிமை

### பிரிவு 1 - குழந்தை - வரையறை

ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் மீதான உடன்படிக்கைகளின் படி 18 வயதுக்குக் குறைந்த அனைவரும் குழந்தைகளே.

### பிரிவு 2- பாகுபாடின்மை

இனம் நிறம், பால், மொழி, சமயம், அரசியல், தேசியம், தேசிய இனம், இயலாமை, பிறப்பு இவைகளின் அடிப்படையில் குழந்தைகள் மீது பாகுபாடு காட்டப்பெறல் கூடாது.

### பிரிவு 3 - குழந்தையை மையப்படுத்துதல்

குழந்தைகளுக்கான செயற்பாடுகளில் குழந்தைகளுக்கான முதன்மைத் தேவைகளை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும்.

### பிரிவு 5 - பெற்றோர், குடும்பம், சமூகத்தின் உரிமைகளும் கடமைகளும்

குழந்தைகளின் உரிமைகளைக் குழந்தைகள் சரியாகப் பயன்படுத்தும் வகையிலும், அவர்களின் ஆற்றல்களைச் சரியாக வெளிப்படுத்தும் வகையிலும் வளர்வதற்கான வழிவகைகள் செய்து தருவதிலும் பெற்றோர்களுக்கு இருக்கும் பொறுப்புகளையும், உரிமைகளையும் உறுப்பு நாடுகள் மதிக்கவேண்டும்.

### பிரிவு 6 - வாழ்வும் முன்னேற்றமும்

1. ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படையிலேயே உள்ளார்ந்த உயிர் வாழும் உரிமையுண்டு.
2. குழந்தைகள் உயிர் வாழவும் வளர்ச்சியை உத்தரவாதப்படுத்தவும் அரசு உறுதி செய்ய வேண்டும்.

### பிரிவு 7 - பெயரும் குடியுரிமையும்

குழந்தை பிறந்தவுடன் பதிவு செய்யப்பட வேண்டும். குழந்தைகள் தமக்கென்று ஒரு பெயரையும், ஒரு தேசத்தையும் கொள்ளுவதற்கு உரிமையுண்டு.

### பிரிவு 8 - அடையாளத்தைப் பாதுகாத்தல்

குழந்தைகளின் தனித்த அடையாளம், தேசியம், பெயர் இவற்றை உறுப்பு நாடுகள் மதித்துப் பாதுகாக்க வேண்டும்.

### பிரிவு 9 - பெற்றோரிடமிருந்து பிரிக்கப்படாமல் இருத்தல்

குழந்தைகளின் விருப்பத்திற்கு மாறாக அவர்களின் பெற்றோர்களிடமிருந்து குழந்தைகளைப் பிரித்து வைப்பதற்கான உரிமையில்லை.

### பிரிவு 10 - குடும்பத்தோடு சேர்ந்து வாழ்தல்

ஒரு குழந்தை, தன் பெற்றோரோடு வாழ விரும்பி அவர்கள் வாழும் நாட்டிற்குச் செல்வதற்கோ அல்லது வேறு ஒரு நாட்டிலிருந்து வெளியேறுவதற்கோ ஒரு குழந்தையிடமிருந்து பெறும் விண்ணப்பத்தை அரசு மனிதாபிமானத்தோடு அணுக வேண்டும்.

## பிரிவு 11 - சட்டத்திற்குப் புறம்பாக நாட்டிலிருந்து அனுப்புதல்

சட்டத்திற்குப் புறம்பாகக் குழந்தைகளை அந்நிய நாட்டிற்கு அனுப்புதலை அனுமதிக்க முடியாது.

## பிரிவு 12 - கருத்துக்களை வெளிப்படுத்துதல்

ஒரு குழந்தைக்குத் தனக்கான சொந்தக் கருத்துக்களை உருவாக்கிக்கொள்ளும் உரிமை உண்டு. அக்கருத்துக்களைத் தைரியமாகத் தாராளமாக எடுத்துரைக்க முடியும் என்ற உத்திரவாதத்தை உறுப்பு நாடுகள் உறுதியளிக்க வேண்டும்.

## பிரிவு 13 -கருத்துக்களைத் தெரிவிக்கவும் செய்திகளைப் பெறுவதற்குமான சுதந்திரம்

குழந்தைகளுக்குக் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்த உரிமையுண்டு. வாய்மொழியாகவோ, அச்சு வடிவமாகவோ கலை இலக்கிய வடிவிலோ கருத்துக்களை அறியவும் பெற்றுக்கொள்ளவும் உரிமையுண்டு.

## பிரிவு 14 - மனசாட்சிக்கும் சமயத்திற்குமான சுதந்திரம்

குழந்தைகளுக்குச் சிந்திக்கின்ற உரிமையும் மனசாட்சி உரிமையும், சமய உரிமையும் உண்டு.

## பிரிவு 15 - சங்கமாகும் உரிமை

குழந்தைகள் குழுவாகக் கூடுவதற்கும், பிறரோடு தொடர்பு கொள்வதற்கும் உரிமையுண்டு.

## பிரிவு 16 - அந்தரங்கம், மரியாதை, புகழ்

குழந்தைகளின் அந்தரங்கம், குடும்பம், வீடு மற்றும் கடிதம் போன்ற போக்குவரத்தின் மீது எந்தத் தலையீடுமின்றி மதிக்கப்பட வேண்டும்.

## பிரிவு 17 - தகவல் மற்றும் தொடர்பு சாதனங்களுக்கான வாய்ப்பு

குழந்தைகளின் முழுவளர்ச்சி கருதித் தேசிய அளவிலும் அகில உலக அளவிலும் சமூகத் தொடர்பு சாதனங்கள் மூலம் கிடைக்கின்ற செய்திகளைக் குழந்தைகள் பெறுகின்ற வழிவகை உருவாக்கப்படவேண்டும்.

- ❖ குழந்தைகள் தொடர்பான நூல்கள் உருவாக்கப்படவேண்டும்
- ❖ சிறுபான்மைச் சமூகம் சார்ந்த குழந்தைகளின் மொழிசார்ந்த தேவைகளைக் காக்கும் வகையில் சமூகத் தொடர்பு சாதனங்களின் செயல்பாடு அமைதல் வேண்டும்.

## பிரிவு 18 - பெற்றோரின் கடமைகள்

தாய் தந்தை இருவருக்கும் குழந்தையை வளர்த்தெடுக்கவும் அவர்தம் முழுமையான வளர்ச்சிக்கு வழி காணவும் கடமையுண்டு.

## பிரிவு 19 - தவறான முறையில் பயன்படுத்தப்படுதலும் புறக்கணிக்கப்படுதலும்

உடல், மன ரீதியான வன்முறைகளிலிருந்தும், சுரண்டல் மற்றும் பாலியல் வன்முறையிலிருந்தும் புறக்கணித்தல், அவமானப்படுத்துதலிருந்தும் பாதுகாக்கப்பட உரிமையுண்டு.

## <u>பிரிவு 20 - பெற்றோர் இல்லாச் சூழலில் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு</u>

*ஒரு குழந்தை அதன் குடும்பச் சூழலிலிருந்து பிரிந்து வாழவேண்டிய சூழல் ஏற்பட்டால் அந்தக் குழந்தைக்குக் கூடுதல் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அரசின் கடமையாகும்.*

## <u>பிரிவு 21 - தத்தெடுத்தல்</u>

*அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள் மட்டுமே குழந்தைகளைத் தத்தெடுக்கும் உரிமை பெற்றுள்ளன என்பதை அரசு உத்திரவாதப்படுத்த வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள் மட்டுமே குழந்தைகளைத் தத்தெடுக்கும் உரிமை பெற்றுள்ளன என்பதை அரசு உத்திரவாதப்படுத்த வேண்டும்.*

## <u>பிரிவு 22 - அகதிக் குழந்தைகள்</u>

*அகில உலக அல்லது உள்நாட்டு சட்டத்திற்கு உட்பட்டு, அகதி அந்தஸ்து கோரும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு பெற உரிமையுண்டு.*

## <u>பிரிவு 23 - ஊனமுற்ற குழந்தைகள்</u>

*உடல் மற்றும் உள்ள ரீதியாகப் பாதிக்கப்பட்ட குழந்தைகள் முழுமையான வாழ்வு பெறவும், அவர்தம் மாண்பும், சுயசார்பும், சமூகப் பங்கேற்பும் பாதுகாக்கப் பெற உரிமையுண்டு.*

## <u>பிரிவு 24 - குழந்தைகளின் நல உரிமை</u>

*ஒவ்வொரு குழந்தையும் ஆரோக்கியமான உடல் நலத்தை அனுபவித்திட உரிமையுண்டு. உடல் நலம் என்பது சத்தான உணவையும் தூய்மையான குடிநீரையும் உள்ளடக்கியது.*

- *அரசு, குழந்தை மரணத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.*
- *ஊட்டச்சத்துக் குறைவையும் நோய்களையும் எதிர்த்திடப் போதுமான சத்தான உணவையும்,*

  *தூய்மையான குடிநீரையும் வழங்கிட வேண்டும்.*
- *தாய்மார்களுக்குக் கர்ப்பக்காலத்திலும் பிரசவத்திற்குப் பின்பும் தேவையான நலபாதுகாப்புக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்*

## <u>பிரிவு 26 - சமூகப்பாதுகாப்பு</u>

*ஒவ்வொரு குழந்தையும் சமூகப்பாதுகாப்பைப் பெறுவதற்கு உரிமையுண்டு. இப்பாதுகாப்பை அனைத்துக் குழந்தைகளும் பெறும் அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.*

## <u>பிரிவு 27 - குழந்தைகளின் வாழ்க்கைத்தரம்</u>

*குழந்தையின் உடல், உள்ளம், ஆன்மீகம், ஒழுக்கம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சி கருதிக் குழந்தைகளின் தரமான வாழ்விற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.*

## <u>பிரிவு 28 - கல்வி உரிமை</u>

*ஒவ்வொரு குழந்தைக்கும் இலவசத் தரமான கட்டாய ஆரம்பக் கல்விக்கு உரிமையுண்டு. ஒவ்வொரு குழந்தைக்கும் தொழிற்கல்வி உயர்நிலைக்கல்வி வாய்ப்புகள் எளிதில் கிட்டக்கூடியதாய் அமைதல் வேண்டும். குழந்தையின் கல்வி என்பது குழந்தையின் தனி மனித*

*ஆளுமை, திறமைகள், உடல் மற்றும் மன ரீதியான திறமைகள் வெளிப்படும் அளவுக்கு அமைதல் வேண்டும்.*

## ***பிரிவு 29 - கல்வியின் நோக்கம்***

*குழந்தையின் கல்வி, குழந்தையின் ஆளுமையையும், திறமைகளையும் வெளிப்படுத்துமளவிற்கும், மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் வளர்த்தெடுக்கும் வகையிலும் அமைதல் வேண்டும்.*

## ***பிரிவு 30 - சிறுபான்மையினரும் பூர்விக இனக் குழந்தைகளும்***

*சமயம், மொழி, இனம், (சிறுபான்மை) சமூகம் சார்ந்த குழந்தைகளுக்கு அவர்கள் சார்ந்த கலாச்சாரத்தை அனுபவிக்கவும் ஒரு குறிப்பிட்ட சமயத்தைத் தழுவிக் கடைபிடிக்கவும் அவர்தம் தாய் மொழியைப் பயன்படுத்தவும் உரிமையுண்டு.*

## ***பிரிவு 31 - விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு***

*அனைத்துக் குழந்தைகளுக்கும், ஓய்வெடுக்கவும், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கை அனுபவிக்கவும் கலாச்சார வாழ்க்கை மற்றும் கலைகளில் சுதந்திரமாகப் பங்கெடுக்கவும் உரிமையுண்டு.*

## ***பிரிவு 32 - பொருளாதாரச் சுரண்டல்***

*பொருளாதாரச் சுரண்டலிலிருந்தும், அபாயகரமான வேலைகளில் ஈடுபடுத்தப்படுத்துதலிருந்தும் குழந்தைகளின் உடல், மன, ஆன்ம, ஒழுக்க, மற்றும் சமூக மேம்பாட்டிற்கு ஊறு விளைவிக்கக் கூடிய எந்த ஒரு வேலையைச் செய்வதில் இருந்தும் பாதுகாப்பு பெற உரிமையுண்டு.*

## ***பிரிவு 33 - போதைப்பொருள் உபயோகம்***

*போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதில் இருந்து குழந்தைகள் பாதுகாக்கப் பெறும் பொருட்டு அரசு சட்டப்பூர்வ, சமூக, நிர்வாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.*

## ***பிரிவு 34 - பாலியல் சுரண்டல்***

*எல்லா வகையான பாலியல் ரீதியான சுரண்டல்களிலிருந்தும் கொடுமைகளிலிருந்தும் குழந்தைகள் பாதுகாக்கப்பட உரிமையுண்டு.*

## ***பிரிவு 35 - விற்றலும் கடத்தலும்***

*எந்த நோக்கத்திற்காகவும் எந்த விதத்திலும் குழந்தைகளை வாங்குவதை, விற்கப்படுவதைக், கடத்தப்படுவதை, இடம்பெயர்க்கப்படுவதை தடுப்பதற்குத் தேவையான தேசிய அளவிலான இரு நாடுகளுக்கிடையேயான பல நாடுகளுக்குகிடையேயான எல்லா நடவடிக்கைகளையும் உறுப்பு நாடுகள் மேற்கொள்ள வேண்டும்.*

## ***பிரிவு 37 - சித்ரவதை, சுதந்திரமின்மை, கொடூரத் தண்டனை***

*எந்தக் குழந்தையையும் சித்ரவதை, மனிதாபிமானமற்ற நடவடிக்கை, கொடூரமான தண்டனைக்கு உட்படுத்தக்கூடாது.*

# 5 பெண்கள் மீதான அனைத்துவகைப் பாகுபாட்டிற்கெதிரான உடன்படிக்கை (1979)

## *பகுதி-1*

***பிரிவு-1*** *பாலியல் அடிப்படையில் மனித உரிமைகளை, அடிப்படைச் சுதந்திரங்களைப் பெண்கள் அனுபவிப்பதிலிருந்து பாகுபடுத்தவோ, ஒடுக்கவோ, ஒதுக்கவோ கூடாது.*

***பிரிவு-2*** *ஐ.நாவின் உறுப்பு நாடுகள் தங்கள் அரசியல் சாசனங்களில் உள்ள பெண்களின் உரிமைகளுக்கெதிரான சட்டங்கள் அகற்றப்பட வேண்டும். எந்த ஒரு நபராலோ நிறுவனத்தாலோ பெண்கள் பாகுபடுத்தப்படுவராயின் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே இருக்கின்ற சட்டங்கள், பழக்க வழக்கங்கள், ஒழுங்குகள், பெண்கள் மீதான பாகுபடுத்தலுக்குத் துணைப் போகுமானால் அச்சட்டங்கள் ஒழிக்கப்பட வேண்டும்.*

***பிரிவு-3*** *பெண்களின் முழுவளர்ச்சியைக் கவனத்திற்கொண்டு, அரசு உரிய நடவடிக்கை எடுப்பதோடு தேவையான சட்டங்களையும் உருவாக்க வேண்டும்.*

***பிரிவு-4*** *பெண்களின் உண்மையான சமத்துவம் கருதி அரசு முன்னெடுக்கும் பெண்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளை, ஆண்களுக்கு எதிரான பாகுபாடாகக் கருதக் கூடாது.*

***பிரிவு-5*** *பெண்கள் மீது மரபுரீதியாகச் சமூகக், கலாச்சார ரீதியாக உருவாக்கப்பட்டிருக்கும் முன் தீர்மானக் கருத்துக்களை, உயர்வு தாழ்வு கற்பிக்கும் கற்பிதங்களைப் போக்க அரசு முயலவேண்டும்.*

***பிரிவு-6*** *பெண்களைக் கடத்தல், பாலியல் ரீதியாகச் சுரண்டல் என்பன தடை செய்யப்பட வேண்டும்.*

***பிரிவு-7*** *தேர்தலில் பங்கு பெறவும், அரசுத் திட்டங்களை வகுத்தலிலும் அமுல் செய்தலிலும், அரசு சாரா நிறுவனங்களில் பங்கு பெறவும் பெண்களுக்கு உரிமையுண்டு.*

*பிரிவு-8* *எவ்விதப் பாகுபடுத்தலுக்கும் உட்படுத்தப்படாமல், சர்வதேச நிறுவனங்களின் பணியில் பங்குபெறும் உரிமை மறுக்கப்பெறக் கூடாது.*

*பிரிவு-9* *தாம் சார்ந்த தேசிய இனங்களை மாற்றிக் கொள்ளும் உரிமையுண்டு*

*பிரிவு-10* *ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் அனைத்துவகை கல்வியைப் பெறவும், கல்விக்கான சலுகைகளைப் பெறவும் உரிமையுண்டு; விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கல்வி பெறவும் உரிமையுண்டு.*

*பிரிவு-11* *விரும்பிய வேலையைத் தேர்வு செய்யும் உரிமை பெண்களுக்குண்டு. சம ஊதியம், சலுகைகள் பெறவும், சமமாக நடத்தப்பெறவும், சமூகப் பாதுகாப்பு பெறவும் உரிமையுண்டு. சம்பளத்தோடு கூடிய மகப்பேறு கால விடுமுறைக்கும் உரிமையுண்டு.*

*பிரிவு-12* *பெண்களின் நல உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் எவ்விதப் பாகுபாடும் காட்டக்கூடாது. பெண்கள் கருவுற்ற நிலையிலும், பிரசவக் காலங்களிலும் பெண்களுக்கு இலவசமாக மருத்துவ வசதி அளிக்க வேண்டுவது அரசின் கடமையாகும்.*

*பிரிவு-14* *இவ்வுடன்படிக்கைகளில் தரப்படும் அனைத்து உரிமைகளும் கிராமப்புறப் பெண்களுக்கும் கிடைக்கும் வகையில் அமைய வேண்டும். அரசின் திட்டங்கள், நடைமுறைப்படுத்தல், சமூகப் பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்துதல், சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல் மற்றும் சமூக நடவடிக்கையில் கலந்துகொள்ளுதல் ஆகிய அனைத்திலும் பெண்களுக்கு உரிமையுண்டு.*

*பிரிவு-15* *ஆண்களைப் போலவே சட்டத்தின் முன் சமமாகக் கருதப்பட வேண்டும்.*

*பிரிவு-16* *திருமணம் செய்துகொள்ளக், கணவனைத் தெரிவு செய்யத், தேவையெனில் நிராகரிக்கக், குழந்தைகள் பெறுவதைத் தீர்மானிக்கக், குழந்தைகளுக்கு வேண்டிய கல்வியைத் தெரிவு செய்திடக், குடும்பப் பெயரைத் தெரிவு செய்ய உரிமையுண்டு.*

# பணியிடங்களில் பாலியல் வன்முறை பற்றி உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்கள்

6

*1990களில் ராஜஸ்தான் மாநில அரசின் வளர்ச்சித் திட்டத்தில் பணிபுரிந்த பெண் ஒருவர் பணியின்போது பலமுறை பாலியல் வன்முறைக்கு ஆளானார். இறுதியாகப் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். அவரது புகார்களுக்கு உயரதிகாரிகள் செவிசாய்க்கவில்லை. காவல்துறையும், மாவட்ட நிர்வாகமும் இச்சம்பவத்திற்கு அப்பெண்ணும் உடந்தை என்று கூறி இப்பிரச்சினையைத் திசைதிருப்ப முயன்றன.*

*மேலும் பல புகார்கள் நாட்டின் பல்வேறு இடங்களில் பாலியல் வன்முறை குறித்து அளிக்கப்பட்டன. பணியிடங்களில் பெண்கள் பாதுகாப்பான சூழலில் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கும் நிறுவன உரிமையாளருக்கும் உள்ளதா என்ற கேள்வி எழுந்தது.*

*பெண் பணியாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிச் சமூக ஆர்வலர்கள் உச்ச நீதிமன்றத்தில் பேராணை மனு தாக்கல் செய்தனர். இதனைத் தொடர்ந்து பணியிடங்களில் பாலியல் வன்முறை குறித்து வரலாற்று சிறப்புமிக்க வழிகாட்டுதல்களை உச்சநீதிமன்றம் 1997 ஆகஸ்ட் 13இல் அறிவித்தது.*

## வழிகாட்டுதல்கள்

- *பணியிடங்களில் பாலியல் வன்முறையால் பல பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொழில், பணித்திறன் மற்றும் சமூக நிலைகளில் அனைத்து மட்டத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.*
- *பாலியல் வன்கொடுமையில் ஈடுபடுபவரின் நோக்கத்தைவிட பாதிப்பின் தாக்கமே முக்கியமாகும்.*
- *பாலியல் வன்முறையும் மனித உரிமை மீறலே என்று முதன் முறையாகச் சட்டம் அங்கீகரிக்கின்றது.*
- *பணியிடங்களில் பாலியல் வன்முறையைத் தடுப்பது அந்நிறுவன உரிமையாளரின் பொறுப்பாகும். மேலும் அது சம்பந்தமான விதிமுறைகள், பரிகாரம், தண்டனை ஆகியவற்றை உருவாக்க வேண்டும்.*
- *பாலியல் வன்முறையைத் தடுப்பது, அதிலிருந்து பாதுகாப்பது, பணியிடத்தில் ஆண் பெண் நட்பு மற்றும் சமத்துவம் பற்றிய விழிப்புணர்வைப் பணியில் உள்ளவர்களுக்கும் அதன் உரிமையாளர்களுக்கும் உருவாக்குவது*

*இவ்வழிகாட்டுதல்கள் சட்டப்பூர்வமாக உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.*

## குற்ற நடவடிக்கைகள்

நடைமுறையிலுள்ள குற்றவியல் சட்டத்தில்,

- விசாரணை மற்றும் தண்டனையே முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.
- உடலில் காயமிருந்தால் மட்டுமே குற்றமாகக் கருதப்படுகிறது. பெண்களுக்கெதிரான பாகுபாடுகளைப் பாலியல் வன்முறையாகக் குறிப்பிடவில்லை.

## பணியிடங்களில் இவையும் பாலியல் வன்முறையா?

- ஒரு பெண்ணோடு பேசும்போது மேலும் கீழும் உற்றுப் பார்த்தல்
- சக ஆண்கள் பணியாளர்களின் பாலியல் உள்ளர்த்தம் கொண்ட விமர்சனங்கள்
- கம்ப்யூட்டரில் பணிபுரியும்போது பின்பக்கம் தொட முயற்சிப்பது
- கைகுலுக்கும்போது வழக்கத்திற்கு மாறாகக் கைகளைப் பிடிப்பது
- மாடிப்படிகளில் இறங்கும்போது உரசிக்கொண்டு செல்வது
- அருவருப்பான தகவல்களை மேஜை மீது வைப்பது
- அலுவலகச் சுவர்களிலும் மாடிப்படியிலுள்ள சுவர்களிலும் லிப்ட் சுவர்களிலும் ஆபாசமான வார்த்தைகளை எழுதி வைப்பது
- நிறுவன உரிமையாளர் அடிக்கடி வெளியே சென்று தேநீர் அருந்தச், சிற்றுண்டி சாப்பிட வற்புறுத்தி அழைப்பது

இவையனைத்தும் பணியிடங்களிலுள்ள பாலியல் வன்முறைகளே.

## பாலியல் வன்முறை குறித்த உச்சநீதிமன்றத்தின் வரையறை

- உடலைத் தொடுதல் அல்லது தொட முயற்சித்தல்
- பாலியல் இணக்கம் வேண்டுதல் அல்லது வற்புறுத்துதல்
- பாலியல் உள்ளர்த்தமுடைய விமர்சனங்கள்
- ஆபாசமான புத்தகங்கள், ஒளி நாடாக்கள் ஆகியவற்றைக் காண்பித்தல்
- உடல் அசைவும், பேச்சு, செய்கை ஆகியவற்றின் மூலம் பாலியல் உள்ளர்த்தத்துடன் செயல்படுதல்

## பாலியல் வன்முறையும் மனித உரிமை மீறலே

- பாலியல் வன்முறையென்பது பணியிலிருப்பவரை அவமானப்படுத்துவதால் இது மனித உரிமை மீறலே.
- இது மகளிர்க்கெதிரான வன்முறை.
- சமூகப் பொருளாதாரத் தளங்களில் பெண்களைச் சமமற்றவர்களாகப் பாகுபடுத்துகிறது.
- பணியிடத்தில் நிகழும் வன்முறை பணியாளருக்கும் நிறுவனத்திற்குமிடையே ஆரோக்கியமற்ற உறவை வளர்க்கிறது.

## ***பணியிடம் என்றால் என்ன?***

*நான்கு சுவர்களுக்கு மத்தியில் உள்ளதே பணியிடம் என்ற வரையறை கிடையாது. பணியிடத்திற்கு வெளியே பணித்தொடர்புடைய இடங்களனைத்தும் இதில் அடங்கும்.*

## ***பணியிடங்களில் பாலியல் வன்முறைகள் நடைபெறாமல் இருப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகள் என்ன?***

- *நிறுவன உரிமையாளர்கள் பணியிடங்களில் பாலியல் வன்முறையைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். வழக்கு தொடரத் தேவையான வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.*
- *பணியிடங்களில் பாலியல் வன்முறை தடை செய்யப்பட்டுள்ளது என்பதனைச் சுற்றறிக்கை மூலம் தெரிவிக்க வேண்டும்.*
- *பணிச் சூழல் பொருத்தமாக இருக்க வேண்டும். பொருத்தமற்ற பகைமையான பணிச் சூழல் உருவாவதைத் தடுக்கும் பொருட்டு பணியிடங்களில் பாலியல் வன்முறை பற்றிய செய்திகள் பரவலாக்கப்பட வேண்டும்.*
- *பணியிடங்களில் பாலியல் வன்முறை நடைபெறா வண்ணம் தடுப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரம் தேடவும் ஒவ்வொரு நிறுவனமும் முறையீட்டு குழுவை உருவாக்க வேண்டும்.*
- *பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர விரும்பினால் அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டியது ஒவ்வொரு நிறுவன உரிமையாளரின் கடமையாகும்.*
- *பணி பயிற்சியின்போது பாலியல் வன்முறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஏற்கனவே பணிபுரிபவர்களுக்கும் இதுபற்றிய விழிப்புணர்வு ஏற்படச் செய்யவேண்டும்.*

## ***முறையீட்டு குழு***

- *பணியிடத்திலுள்ள ஒருவரின் செயல் சட்டப்படி குற்றமாகவோ அல்லது பணி விதிமுறைகளை மீறியதாகவோ இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் பாதிக்கப்பட்டவர் கொடுக்கும் முறையீட்டை விசாரித்துப் பரிகாரம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கவும் ''முறையீட்டு குழு'' உருவாக்கப்படவேண்டும்.*
- *இக்குழு குறிப்பிட்ட காலவரையறைக்குள் விசாரணையை முடிக்க வேண்டும்.*
- *இக்குழு நம்பகத்தன்மையைப் பாதுகாப்பதாகவும் இருக்க வேண்டும்.*
- *இக்குழுவின் உறுப்பினர்களில் பாதிக்கு மேல் பெண்களே இடம்பெற வேண்டும்.*
- *அதன் தலைவியாக ஒரு பெண்ணே இருக்க வேண்டும்.*
- *உயர் அதிகாரிகள் நிர்ப்பந்தங்களைத் தவிர்க்கப் பெண்ணுரிமையில் ஈடுபாடுள்ள பிற தன்னார்வ அமைப்பின் உறுப்பினர்கள் இக்குழுவில் இடம்பெறலாம்.*

# 7 மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993

## இச்சட்டத்தின் பின்னணி

ஒவ்வொரு நாட்டிலும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கெனப் பாரபட்சமற்ற ஒரு அமைப்பினை உருவாக்குதல் வேண்டுமென்ற யோசனையை முதன் முதலாக யுனெஸ்கோ, 1946ஆம் ஆண்டில் தெரிவித்தது. 1947ஆம் ஆண்டில் ஐ.நா. தலைமை செயலகத்தால் "மனித உரிமைகளை மேற்பார்வையிடுதலும், அமலாக்குதலும்"என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட குறிப்பாணை மூலம் நாடுகளில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்ற ஆலோசனையைத் தெரிவித்தது.

1966ஆம் ஆண்டில் "சர்வதேசக் குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த உடன்படிக்கை" மற்றும் "சர்வதேசப் பொருளாதாரச் சமூகப் பண்பாட்டு உரிமைகள் குறித்த உடன்படிக்கை" ஆகிய இவ்விரு உடன்படிக்கைகளால் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளைக் கடைபிடித்தல். அது தொடர்பான பணிகளை ஆற்றுவதற்காகத் தேசிய அளவில் மனித உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தினை உருவாக்குதல். மேலும் அதனால் ஏற்படக்கூடிய நன்மைகளைக் கவனத்தில் கொள்ளுமாறு ஐ.நா. பொதுச் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் நாடுகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. இத்தீர்மானத்தின் மூலம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம், 1970 ஆம் ஆண்டு கவனத்துடன் பரிசீலித்து, ஒவ்வொரு நாடும் அந்த நாட்டின் சட்டங்களுக்குட்பட்டு தேசிய மனித உரிமைகள் ஆணையத்தினை அமைக்க முடிவு செய்ய வேண்டும் எனத் தனது அறிக்கையில் தெரிவித்தது. இதே கருத்தினை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் 1978 ஆம் ஆண்டில் மீண்டும் வலியுறுத்தியது.

1993 ஆம் ஆண்டு வியன்னாவில் 171 நாடுகள் கலந்து கொண்ட மனித உரிமைகள் குறித்த உலகளாவிய மாநாடு ஜூன் 14 முதல் 25 ஆம் தேதி வரை நடைபெற்றது. அவ்வமயம் ஒவ்வொரு நாட்டிலும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் தேசிய அளவில் அமைப்புகளை உருவாக்குமாறு, அம்மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. இதனையடுத்துப், பல நாடுகள் தங்களுடைய நாட்டில் தேசிய அளவிலான மனித உரிமை ஆணையங்களை நிறுவத் தொடங்கின.

இந்தியாவில் 27.9.1993இல் குடியரசுத் தலைவரால் மனித உரிமைகளைப் பாதுகாக்க அவசரச் சட்டம் ஒன்று பிரகடனம் செய்யப்பட்டது. இச்சட்டத்திற்கு மாற்றாக மனித உரிமைகள் பாதுகாப்பு மசோதா 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்தியப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலை 8.1.1994இல் பெற்றது. அதன் பின்னர் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 10.1.1994இல் அரசிதழில் வெளியிடப்பட்டது. ஆயினும் இச்சட்டம் 28.91993இல் நடைமுறைக்கு வந்ததாகக் கருதப்பட வேண்டும் என இச்சட்டத்தின் முதல் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சட்டத்தின் நோக்கம்

*மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் கீழ்க்கண்ட நோக்கங்களை அடைவதற்காக இந்தியப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது.*

1) *தேசிய மனித உரிமைகள் ஆணையத்தினை அமைத்தல்;*
2) *மாநில மனித உரிமைகள் ஆணையங்களை அமைத்தல்;*
3) *மாவட்ட அளவில் மனித உரிமைகள் நீதிமன்றங்களை அமைத்தல்;*
4) *மனித உரிமைகளைச் சிறந்த முறையில் பாதுகாத்தல்;*
5) *இதனுடன் தொடர்புடைய பிற பொருள்களுக்கு வழிவகை செய்தல்.*

## விளக்கங்கள்

*மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்திலுள்ள கீழ்காணும் சொற்றொடர்களுக்குப் பிரிவு 2-ல் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளது.*

*"ஆயுதப்படைகள்" என்பது கப்பல், இராணுவம் மற்றும் விமானப்படைகளைக் குறிப்பதுடன் நாட்டின் பிற ஆயுதம் தாங்கிய படைகளையும் குறிக்கும்.*

*"மனித உரிமைகள்" என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினால் உறுதி செய்யப்பட்ட அல்லது இந்திய நீதிமன்றங்களால் அமல்படுத்தக்கூடிய பன்னாட்டு உடன்படிக்கைகளில் உள்ளடங்கிய வாழ்வு, தன்னுரிமை, சமத்துவம், தனி நபர் மாண்பு பற்றிய உரிமைகளைக் குறிக்கும்.*

*"மனித உரிமைகள் நீதிமன்றம்" என்பது இச்சட்டத்தின் பிரிவு 30-ல் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமை நீதிமன்றங்களைக் குறிக்கும்.*

*"பன்னாட்டு உடன்படிக்கைகள்" எனப்படுபவை ஐ.நா. பொதுச் சபையினால் 16.12.1966இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட 'குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை' மற்றும் 'பொருளாதாரச் சமூகக் கலாச்சார உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை' ஆகியவற்றைக் குறிக்கும்.*

*"பொது ஊழியர்" என்பவர் இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 21-ல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களைக் குறிக்கும்.*

# கல்விக்கான உரிமை

8

கல்விக்கான உரிமையும் மனித உரிமையே. இலவசக் கட்டாய ஆரம்பக் கல்வி முதல் உயர்கல்வி வரை பெற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. அத்தகையக் கல்வியை எவ்விதப் பாகுபாடுமின்றிச் சுதந்திரமாகப் பெற எல்லோருக்கும் உரிமையுண்டு. கல்விக்கான உரிமையென்பது பிற அடிப்படை உரிமைகளோடு பிரிக்கவியலாத, ஒன்றையொன்று சார்ந்த உலகளாவிய தன்மையுடையது. அதனோடு தொடர்புள்ள பிற உரிமைகள்...

- சமூகத்திலும், குடும்பத்திலும் ஆண், பெண் பாகுபாடற்ற சம உரிமை
- போதுமான வாழ்க்கைத் தரத்தைப் பெற வேலை செய்யவும் அதற்கான ஊதியம் பெறவும் உரிமை
- சுயசிந்தனை, கடமையுணர்வு, மத நம்பிக்கை ஆகியவற்றிற்கான உரிமை
- போதுமான வாழ்க்கைத் தரத்திற்கான உரிமை
- ஒரு சமுதாயத்தைப் பாதிக்கும் முடிவுகளைக், கொள்கைகளைத் திருத்தி அமைக்க உள்ளூர், தேசிய மற்றும் உலகளவில் பங்கேற்க உரிமை

## கல்வி பற்றி யுனெஸ்கோ-வின் பரிந்துரைகள்

- அறிவார்ந்த உணர்வுப்பூர்வ நிலையைக் கல்விமூலம் வளர்த்தெடுப்பது
- உலக அமைதியை வலுப்படுத்தும் கடமையுணர்வுடன் போருக்கான சூழல்களை மறுதலிக்கும் கலாச்சாரத்தைக் கல்வி மூலம் வளர்த்தெடுப்பது
- மக்கள் நலனே மிகவும் முக்கியமானது. பொருளாதாரத்திலும் அரசியலிலும் ஆதிக்கம் செலுத்துவோரால் ஏற்படும் போர் மக்கள் நலனுக்காக அல்ல எனக் கல்வியால் உறுதிப்படுத்துவது.
- ‘‘கலாச்சாரங்களுக்கிடையேயான புரிதல்’’ ‘‘உலகளவில் கல்வியின் பரிமாணம்’’, ‘‘உலக மக்கள் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் விழிப்புணர்வு’’, ‘‘ஒருமைப்பாட்டிற்காக ஒவ்வொருவரையும் ஆயத்தப்படுத்துதல்’’, ‘‘ஒருவரின் சமூகம், நாடு மற்றும் உலகளாவிய பிரச்னைகளுக்குத் தீர்வு காணக் கல்வியை வளர்த்தெடுப்பது.’’
- மானுட வாழ்விற்கும், நலனுக்கும் பெருத்த சவாலாக இருக்கும் பிரச்சனைகளுக்கு முடிவு கட்ட உலக ஒற்றுமையைக் கல்வி மூலம் உருவாக்குவது.

*Source: www.un.org*

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அரசின் நெறியுறுத்தும் கொள்கையில் கல்விக்கான உரிமை

*இவ்வுரிமை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், அரசிற்கான நெறியுறுத்தும் கொள்கைகளில் ஒரு கொள்கையாகப் பிரிவு 45ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின்படி அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து 10 ஆண்டுக்குள்ளாக 14 வயதிற்குட்பட்ட அனைத்துச் சிறுவர்களுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்க, அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என நெறியுறுத்தப்பட்டுள்ளது. இந்திய உச்சநீதிமன்றம், உன்னிகிருஷ்ணன்-எதிர்-ஆந்திரப் பிரதேச அரசு என்ற வழக்கில், பதினான்கு வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்குக் கல்விக்கான உரிமை பிரிவு 45ல் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், இவ்வுரிமை, பிரிவு 21ல் குறிப்பிடப்பட்டுள்ள வாழ்வுரிமையில் உள்ளடங்கிய ஒரு உரிமை என்று தீர்ப்பளித்துள்ளது. இத்தீர்ப்பினை அடுத்து இவ்வுரிமை அடிப்படை உரிமைக்கான நிலையைப் பெற்றுள்ளது.*

## அ. அகில உலகமனித உரிமைப் பிரகடனம்

### கல்வியுரிமை

***பிரிவு-26***

1. *கல்விபெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆரம்ப மற்றும் அடிப்படை நிலைகளிலாவது கல்வி இலவசமாக இருக்க வேண்டும். ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்க வேண்டும். தொழில் நுட்பம் மற்றும் தொழில் முறைக் கல்வியைப் பரவலாக்குவதோடு, உயர் கல்வியை அனைவருக்கும் தகுதி அடிப்படையில் சம வாய்ப்பிற்குரியதாக்க வேண்டும்.*
2. *மானுட ஆளுமையின் முழு வளர்ச்சியை, மனித உரிமையை, அடிப்படை சுதந்திரங்களின் மீது உள்ள மதிப்பை வலுப்படுத்துவதே கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும். தேசங்கள், மரபின அல்லது சமயக் குழுக்களிடையே நல்லிணக்கத்தையும், சகிப்புணர்வையும், நட்புணர்வையும் வளர்த்திடுவதாகவும், அமைதி காத்திட ஐக்கிய நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகளுக்குத் துணைப் புரிவதாகவும் கல்வி இருக்க வேண்டும்.*

## ஆ. பொருளாதாரச், சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை (1996)

### கல்வி பெறுவதற்கான உரிமை

*கல்வி பெறுவதற்கான உரிமையை அனைவருக்கும் பெற்றுத் தருவதற்காக இவ்வுடன்படிக்கையின் உறுப்பு நாடுகள் அங்கீகரிக்க வேண்டிய சில விபரங்களையும் இவ்வுடன்படிக்கையின் பிரிவு 12(2)ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை,*

1. *ஆரம்பக்கல்வி அனைவருக்கும் கட்டாயமாகவும் இலவசமாகவும் கிடைக்க வேண்டும்.*

2. தொழில்நுட்ப மற்றும் தொழில்பயிற்சி கல்வி உள்ளிட்ட பல வடிவங்களில் உள்ள இடைநிலைக் கல்வி அனைவருக்கும் எளிதாகவும், குறிப்பாக இலவசமாகக் கிடைக்க வேண்டும்.
3. உயர்கல்வியும் தகுதியின் அடிப்படையில் அனைவருக்கும் எளிதாகவும் குறிப்பாக இலவசமாகவும் கிடைக்க வேண்டும்.
4. ஆரம்ப நிலை கல்வி பெறாதவர்களுக்கும், ஆரம்பக்கல்வி முழுமையாக முடிக்காதவர்களுக்கும் அடிப்படைக் கல்வி கற்கத் தீவிரமாக ஊக்கப்படுத்த வேண்டும்.
5. ஆரம்ப நிலை, இடைநிலை மற்றும் உயர்நிலைப் போன்ற அனைத்து நிலைகளிலும் கல்விக் கூடங்கள் நிறுவுவதற்கான முயற்சிகள், போதிய படிப்புதவி முறையினை உருவாக்கவும், ஆசிரியர்களின் பணி நிலையினைத் தொடர்ந்து மேம்படுத்தவும் முயற்சிகளைச் சீரிய முறையில் மேற்கொள்ள வேண்டும். அரசினால் நிறுவப்பட்டுள்ள கல்வி நிறுவனங்களைத் தவிர, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களிலும் தங்களுடைய குழந்தைகளைச் சேர்த்துப் படிக்க வைப்பதற்கான சுதந்திரம், பெற்றோர்களுக்கும் சட்டப்பூர்வமான காப்பாளர்களுக்கும் உண்டு என்பதனை இவ்வுடன்படிக்கையின் உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன எனப் பிரிவு 13(3)ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இ. ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை

### கல்விக்கான உரிமை (விதி 28, 29)

ஒவ்வொரு குழந்தைக்கும் சம வாய்ப்பின் அடிப்படையில் ஆக்கப் பூர்வமான, முன்னேற்றகரமான முறையில், கட்டாய, இலவசத், தரமான கல்விக்கான உரிமையுண்டு.

எந்தவொரு குழந்தைக்கும் பல்வேறு வகையான தொழிற்கல்வி உள்ளிட்ட உயர்நிலைக்கல்விக்கான வாய்ப்புகள் எளிதில் கிட்டக்கூடியதாய் இருக்கும்படி செய்தல் மற்றும் தேவைப்பட்டோருக்குக் கல்வி பயில்வதில் நிதியுதவி அளித்திடவும் வேண்டும். குழந்தையின் கல்வி என்பது குழந்தையின் தனிமனித ஆளுமை, திறமைகள், உடல் மற்றும் மனரீதியான திறமைகள் அவற்றின் முழுவீச்சும் வெளிப்படும் அளவிற்கு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். விஞ்ஞானத் தொழில் நுட்ப மற்றும் நவீனக் கற்பித்தல் முறைகளைப் பெற்றிட வாய்ப்புகள் உருவாக்கித் தரப்பட வேண்டும்.

9

# பாகுபாடு
# DISCRIMINATION

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**

**செய்தொழில் வேற்றுமை யான்."**

என்றார் வள்ளுவப் பெருந்தகை. மனிதர்கள் மட்டுமல்ல இப்பூமிபந்தில் பிறந்து வாழும் ஒவ்வொரு உயிரினமும் சம அந்தஸ்தும் சம உரிமையும் வாய்க்கப் பெற்றவை என்ற அடிப்படையில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே உலகப் பொதுமறையாம் திருக்குறள் உலகிற்கு இதை பறைசாற்றுகிறது.

## பாகுபாடு ஒரு பார்வை

உலக மக்கள் இனங்களிடையே கடந்த சில நூற்றாண்டுகளாக வெள்ளை இனமே ஆளப் பிறந்தவர்கள் என்றும் மற்ற நிறத்திற்கு இத்தகைய தகுதி இல்லை என்றும் இனங்களிடையே பாகுபாடு காட்டப்பட்டு வருகிறது. அரசு அதிகாரத்தின் மூலம் வெள்ளை நிறவெறியை வலுவாக செலுத்தத் தொடங்கிய ஐரோப்பியர்கள் உலகையே சந்தைகளாக்கி பிற இனமக்களை குறிப்பாக கறுப்பர்களை (நீக்ரோக்களை) ஆடு மாடுகளைப் போல் விலங்குகளாகக் கருதி அடிமை வாணிகம் - வியாபாரம் செய்யத் தொடங்கினர். இனப்பாகுபாடு உணர்ச்சியும் ஆதிக்கமும் இந்த நிலையிலிருந்து தொடங்கியது எனலாம். இந்த நிலை 20ஆம் நூற்றாண்டில் இட்லரின் மூலமாக மேலும் உரமிட்டு வளர்க்கப்பட்டது. வெளியிலிருந்து வந்த வெள்ளை நிற மக்கள் இந்திய மண்ணின் பழங்குடிமக்களாகிய கருமை நிற மக்களை தாழ்வாக கருதியதன் விளைவாக இந்திய சமூக அமைப்பு சாதிய அமைப்பாக கட்டமைக்கப்பட்டது. அதற்கு சமூக அமைப்பில் நான்கு வர்ண கோட்பாடு தெளிக்கப்பட்டது. அந்த நான்கு சாதிகளும் கடவுளின் படைப்புகளாக கருதி ஒரு தெய்வீக மூலம் கற்பிக்கப்பட்டது. இந்த சாதிய அமைப்பு இறைவன் ஏற்பாடு என்பதால் அது மாறக்கூடாது தெய்வீகமானது என்றும், நிலைத்து நிற்பது என்றும், நான்கு சாதிகளும் மேல் கீழ் என்று இறைவனால் படைக்கப்பட்டதால் நியாயமானது என்றும் கற்பிதம் செய்யப்பட்டது. இந்த நான்கு சாதிகளின் பெருக்கமே நான்காயிரம் சாதிகளாக பெருகியது. இதன்பிறகுதான் இந்திய சமூக அமைப்பு இப்படி ஏற்றத்தாழ்வான சமூக

அமைப்பாக உருவாகியது. மேலிருந்து கீழ் சாதிகள் என்றும், கீழிலிருந்து மேல் சாதி என்றும் பிளவும், பாகுபாடும் உருவாக்கப்பட்டது. இந்தப் பாகுபாடு மனிதனால் மட்டுமே உருவாக்கப்பட்டது என்பதை உணர்ந்தவர்கள் இந்த பாகுபாட்டிற்கு எதிராக குரல் எழுப்பியே வந்துள்ளனர்.

அடிப்படையில் மனித இனம் ஒருவருக்கு ஒருவர் எந்த வகையான வேறுபாடு கொள்வதற்கும் நியாயமில்லை என்ற வகையில், ஒருவரின் உரிமையில் மற்ற ஒருவர் தலையிடுவதற்கு உரிமையில்லை. எனவே, அடுத்தவர் உரிமையில் குறுக்கிடுவது என்பது மனித உரிமை மீறலே. எனவே, இனப்பாகுபாடு சாதிப்பாகுபாடு மனித உரிமை மீறல்களாகவே வரையறை செய்யப்படுகிறது. இந்த சமூக அமைப்பில் சரி பாதியாக உள்ள பெண்களும் கீழ் நிலைக்கு தள்ளிவிடப்பட்டுள்ளனர். அதனால் பெண்கள் உரிமை உள்ள பிறவியாகவே கருதப்படுவதில்லை.

விவசாய சமூதாயமாகிய நம் நாட்டில் உழைப்பின் ஒவ்வொரு நிலையிலும் வேறுபாடற்ற வகையில் ஆணும் பெண்ணும் உழைத்தும், பிழைத்தும் வருவதை சமமாக பங்கிட்டும் கணவனும் மனைவியுமாக சம உரிமையுடன் குடும்ப அமைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்த சமூக பாகுபாடுகளை நியாயப்படுத்த கூடியவர்களே பெண்களை தங்களை விட கீழானவர்கள் தாழ்ந்தவர்கள் என கருதி பெண்களின் உரிமைகளை மறுத்தார்கள். பெண்களுக்கு எதிராக நடப்பதும் பெண்களின் மீது நடத்தும் வன்முறை வாழ்வியல் உரிமைகளின் குறுக்கிடுவதும் மனித உரிமை மீறல்களே. இந்த ஏற்றத்தாழ்வான சாதிய சமூக அமைப்பில்தான் பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. பெண்கள் மனித பிறவிகளாக கருதப்படுவதில்லை. பெண்களை அடிமைகளாக்கி அவர்கள் தங்கள் உரிமைகளுக்கு மீறி எழுகிறபோது ஸ்டவ் வெடிப்பது அன்றாட நிகழ்வுகளாக உள்ளன. விளையாடுவதற்கும், விரும்பியவாறு பள்ளிக்கு சென்று கல்வி பெற முடியாதவர்களாக வறுமையின் கோரப்பிடியில் கோடிக்கணக்கான குழந்தைகளின் குரல்வளை நெறிக்கப்பட்டு கிடக்கிறார்கள். இப்படி வறுமையில் உள்ள குழந்தைகள் படிக்க வசதியின்றி கொத்தடிமை குழந்தைகளாக குழந்தைத் தொழிலாளராக வாழ்ந்து வருகிறார்கள்.

நம் நாட்டில் பெரும்பான்மையினராக கருதிக்கொண்டு இனத்தால், மொழியால், மதத்தால் குறைந்த எண்ணிக்கையில் வாழும் சிறுபான்மை மக்களுக்கு அடிப்படை உரிமைகளை மறுத்து மனித உரிமை மீறல்களை செய்து வருகின்றார்கள். தங்களது

மொழியினை சிறுபான்மை மக்கள் மீது திணித்து சிறுபான்மை மக்களின் மொழி உரிமைகளை மறுத்து பாகுபாடாக நடத்துகிறார்கள். வாழ்வுரிமை மறுத்து அவர்கள் குடிமக்கள்தான் என்பதையும் அங்கீகரிக்க மறுக்கிறார்கள். இப்படி ஒரு தேசிய இனத்தையும் மொழி சிறுபான்மையினரையும் மதச் சிறுபான்மையினரையும் பாகுபாடாக நடத்துவதும் மனித உரிமை மீறலே.

இந்நிலையில் இனவெறிக்கு எதிராக சாதிய பாகுபாட்டிற்கு எதிராக, இழிவாக நடத்துவதற்கு எதிராக, குழந்தைகளை அவர்கள் போக்கில் வாழ்வதற்கு எதிராக, மத, மொழி, சிறுபான்மை உரிமைகளை மறுக்கும் ஆதிக்கவாதிகளுக்கு எதிராக இத்தகைய பாகுபாடுகளைக் கொண்டு வரும் இனங்களுக்கெதிராக, நாடுகளுக்கு எதிராக உலகு எங்கிலும் பரந்துபட்டு மனித உரிமை ஆர்வலர்களும், மனித மாண்பினை காப்பதற்கான அமைப்புகளும் போராடியதன் விளைவாகத்தான் CERD, CEDAW, CRC உருவாக்கப்பட்டுள்ளது.

நம் நாட்டில் இத்தகைய சாதிய பாகுபாட்டிற்கு எதிராகவும், பெண்களின் உரிமைகளுக்காகவும், குழந்தைகளை காப்பதற்காகவும், மொழி, மத சிறுபான்மையினரை பாதுகாக்கவும் இந்திய அரசமைப்புச் சட்டங்களும் பிற சட்டங்களும் உறுதியளிக்கின்றன.

## <u>பாகுபாடு என்றால் என்ன?</u>

பாகுபாடு என்றால் இன, நிற, பிறப்பு, தேசிய, மரபு, பாலின, உடல் ஊனமுற்ற அடிப்படையில் அரசியல், பொருளியல், சமூக பண்பாடு மற்றும் பொது வாழ்வின் அனைத்து தளங்களிலும் உள்ள மனித உரிமைகள், அடிப்படை சுதந்திரங்களை மறுக்கின்ற அவற்றின் பயன்பாட்டு அடையாளங்களை அழித்து ஒழிக்கின்ற நோக்கத்தையும், தாக்கத்தையும் உள்ளடக்கிய எந்த வேறுபாடோ பிரிவினையோ, ஒதுக்கவோ, கட்டுப்பாடோ அல்லது முன்னுரிமை அளித்தலோ அதுவே பாகுபாடு என்பதாகும்.

## பாகுபாடு - ஒரு கண்ணோட்டம்

பாகுபாட்டைக் களையும் நோக்கில் உலகின் பல்வேறு நாடுகளும் இந்தியா உட்பட உலகம் முழுவதும் பல்வேறு சட்டங்களையும், உடன்பாடுகளையும் இயற்றி நடைமுறைப்படுத்தி வருகின்றன. இருப்பினும் அனைத்து விதமான பாகுபாட்டிற்கெதிரான பல சம்பவங்களை நாம் அன்றாடம் நேரிலும், பத்திரிகை, தொலைக்காட்சிகளிலும் கண்ணுற்றும் வருகிறோம். இதற்கான முக்கிய காரணிகளாக விளங்குபவை காலம் காலமாக எளியவரை அடக்கி ஆள வேண்டும் என்ற எண்ணமும், புரையோடிய ஆணாதிக்கமும், சக மனிதனை எண்ணாத போக்கும் நிலப்பிரப்புத்துவ முறைகளுமே ஆகும்.

வளரும் நாடுகளில் இப்போது சரியான சமூக மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. இம்மாற்றங்கள் பாகுபாட்டைக் களையும் நாள் வெகு தொலைவில் இல்லை. செய்யும் தொழிலை அடிப்படையாகக் கொண்ட பண்பாடு (ஆண்களுக்கான கடமைகள், தலைவர்களுக்கான கடமைகள், சாதிய கடமைகள் மற்றும் பல) களைந்தெறியப்பட்டு, நவீன அரசின் அதிகாரத்தைக் கொண்டு மனித மாண்புகளை உரிமைப்படுத்தும் உரிமைகள் உருவாகி உள்ளன. இத்தகைய உரிமைகள் இந்தியாவில் சட்டங்கள் மூலம் வரையறை செய்யப்பட்டு குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதைப்போல சர்வதேச உடன்படிக்கைகள் மூலம் உலக அரங்கின் முக்கிய கூறான ஐ.நாவால் வரையறை செய்யப்பட்டு உலகின் பல நாடுகளால் கையெழுத்திடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

## அரசமைப்புச் சட்டத்தில் பாகுபாட்டிற்கு எதிரான சட்டப்பிரிவுகள்

தற்போது பரவலாக நம் அனைவரால் விவாதிக்கப்படும் மனித உரிமை என்ற சொல் ஏற்கனவே நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. சட்டப்பிரிவு 14 முதல் 32 வரை நமது அடிப்படை உரிமைகள் வரையறை செய்யப்பட்டுள்ளன.

## சமத்துவத்திற்கான உரிமை

பிரிவு 14இன்படி சட்டத்தின் முன் அனைவரும் சமம். இந்திய எல்லைக்குள் எந்த ஒரு நபரையும் சட்டத்தின் முன் வேறுபடுத்தியோ அல்லது சட்டத்தால் வழங்கப்படும் பாதுகாப்பில் வேறுபாட்டையோ அரசு செய்யக்கூடாது.

## பிரிவு 15-இன் படி மதம், இனம், சாதி, பாலின, பிறப்பிடம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி வேறுபடுத்துவதை தடை செய்தல்

எந்த ஒரு குடிமகனையும் மதம், இன, சாதி, பாலின, பிறப்பிடம் அல்லது எவற்றைக் கொண்டும் யாவரும் வேறுபடுத்தக்கூடாது. இது அரசின் உதவித்தொகை, பொதுக்கிணறு பயன்பாடு போன்றவற்றிற்கும் பொருந்தும். அதே வேளையில் அரசால் பெண்கள், குழந்தைகளுக்கு இயற்றப்படும் சட்டங்களுக்கு பொருந்தாது.

## பிரிவு 16-இன் படி அரசின் அனைத்துத் துறைகளிலும் சம வாய்ப்பு அளிக்கப்படுதல்

அரசின் எந்தத் துறையிலும் அனைத்துக் குடிமக்களுக்கும் சம வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். அதைப்போல் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு அரசு வழங்கி உள்ள இட ஒதுக்கீட்டை இது கட்டுப்படுத்தாது.

## பிரிவு 17-இன் படி தீண்டாமை ஒழிப்பு

தீண்டாமை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விட்டது. எந்த வகையிலும் அது பின்பற்றப்படுவது தடை செய்யப்படுகிறது. தீண்டாமை பின்பற்றப்படுவதால் பாதிப்பு ஏதேனும் ஏற்பட்டால் அதை குற்றமாகக் கருதி சட்டத்தின் வாயிலாக தண்டனை வழங்கப்படும்.

# பெண்களும் சமத்துவமும்

## – அமார்த்தியா சென்

10

நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் பாலின சமத்துவம் குறித்து பல முக்கியவத்துவம் வாய்ந்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். குடும்ப அமைப்பு குறித்து அவருடைய கோட்பாடானது குடும்பம் என்பது கூட்டுறவையும் அதே சமயத்தில் சமத்துவமின்மையையும் குடும்பத்திற்குள்ளான உறுப்பினர்களுக்கு இடையிலான பாரபட்சத்தையும் கொண்டது என்று விவரிக்கின்றது. நாட்டின் வளர்ச்சிப் போக்கில் பெண்கள் எதிர்கொள்ளும் பாகுபாடுகள் அவர்களின் உயிர் வாழ்தலைக் கேள்விக்குள்ளாக்குகிறது என்று கூறும் சென் அவருடைய சக ஆய்வாளர் ஜுன் டிரிசுடன் இணைந்து வளர்ச்சிப்போக்கில் எதிர் கொள்ளும் பாகுபாடுகளினால் பெண்களின் உயிர் வாழும் உரிமையே முடக்கப்படுகிறது. கருக்கொலை, சிசுக்கொலை, சத்துணவு, மறுப்பு ஆதாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் எதிர்கொள்ளும் பாரபட்சங்கள் ஆகியவற்றினால் இதுவரை 100 மில்லியன் பெண்களுக்கு மேல் காணாமல் போயிருக்கலாம் என்று ஆய்வின் மூலம் மறுக்கப்பட்டு பெண்களே காணாமல் போவது என்று இவர்கள் முன் வைக்கும் கருத்தாக்கமானது பிரச்சினையின் தீவிரத்தைப் புரிந்துகொள்ள புதிய வழியைக் காட்டுகின்றது. இங்கு இத்தகைய கண்ணோட்டத்துடன் சென் ஹார்டுவார்டு பல்கலைக்கழகத்தில் ஆற்றிய கருத்துரையின் சுருக்கமானது தரப்படுகின்றது.

## <u>சமத்துவமின்மையின் ஏழு வகைகள்:</u>

இன்றைய சமூகமானது ஆண், பெண்களுக்கிடையில் கடுமையான ஏற்றத்தாழ்வைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு சமூகத்திலும், தேசிய இனத்திலும், வர்க்கத்திலும் துன்பங்களின் சுமையானது பெண்களின் மீதே விழுகின்றது. ஆண், பெண்களுக்குச் சமமற்ற பங்கீடுள்ள ஓர் உலகத்திலேயே நாம் வாழ்கிறோம். உலகின் பெரும்பான்மையான பகுதிகளில் ஜப்பானிலிருந்து மெக்சிகோ வரை, உஸ்பெக்கிஸ்தானிலிருந்து அமெரிக்கா வரை நிலவுகிறது. ஆனால் எல்லா நாடுகளிலும் சமத்துவமின்மை ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சமத்துவமின்மையானது பல வடிவங்களில் வகைகளில் நிலவுகின்றது.

## 1. இறப்பில் சமத்துவமின்மை

உலகின் சில பகுதிகளில் ஆண், பெண்களுக்கிடையிலான சமத்துவமின்மையானது மரண விகிதத்தில் வேறுபாட்டைக் காட்டுவதன் மூலமாகக் கொடூரமான வடிவத்தை எடுத்துள்ளது. மொத்த மக்கள் தொகையின் மரண விகிதத்தில் பெண்களின் மரண விகிதமானது அதிகமாக உள்ளது. வட ஆப்பிரிக்காவிலும், சீனா மற்றும் தெற்காசியா உள்ளிட்ட ஆசியாவிலும் பெண்களின் மரண விகிதம் அதிகமாக உள்ளதைக் காணலாம். ஆனால் அதே சமயத்தில் சுகாதார பராமரிப்பிலும் சத்துணவிலும் பாரபட்சம் கடைப்பிடிக்கப்படும் நாடுகளிலும் பெண்களின் மரண விகிதங்கள் குறைவாக உள்ளதையே காண முடியும்.

## 2. ஆண் குழந்தையை விரும்புதல்

பெரும்பாலான ஆணாதிக்கச் சமூகங்களில் பாலின சமத்துவமின்மையானது பெற்றோர்கள் பெண் குழந்தையைவிட ஆண் குழந்தையை விரும்புவதில் வெளிப்படுகின்றது. முந்தைய காலகட்டங்களில் பெற்றோர்களுக்கு இது வெறும் விருப்பமாக மட்டும் இருந்தது. இன்றோ தொழில் நுட்பங்களின் மூலமாகப் பிறக்கப்போகும் குழந்தையின் பாலினத்தைக் கண்டறிந்துகொண்டபின் பெண் குழந்தையாக இருந்தால் அதைக் கருவிலேயே கொன்றுவிடும் பெண்கருக்கொலை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இது உயர் தொழில்நுட்பரீதியான பாலினவாதமாகும் (high-tech sexism) கிழக்காசியா, சீனா, தென்கொரியா, சிங்கப்பூர் மற்றும் தைவான், இந்தியா உள்ளிட்ட தெற்காசியா நாடுகளில் அதிகமாக உள்ளது.

## 3. அடிப்படை வசதிகளில் சமத்துவமின்மை:

பல நாடுகளில் அடிப்படை வசதிகளில் பெண்களுக்குச் சமத்துவம் மறுக்கப்படுகின்றது. மக்கள் தொகை எண்ணிக்கையிலோ, இறப்பு விகிதத்திலோ வேறுபாடு இல்லாத போது மற்ற வழிகளில் பெண்களுக்கெதிராக சமத்துவமின்மையானது கடைப்பிடிக்கப்படுகின்றது. உதாரணமாக, உலகிலேயே ஆப்கானிஸ்தான் நாட்டில் மட்டுமே பெண்குழந்தைகள் பள்ளிக்குக் கல்வி கற்க அனுமதிக்கப்படுவதில்லை. ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா நாடுகளிலும் ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தைகளுக்கு வாய்ப்பு மிகக்

குறைவாகவே அளிக்கப்படுகிறது. சத்துணவைப் பொறுத்தவரை ஆண் குழந்தைகள் மற்றும் ஆண்கள் உண்ட பின்னரே மிச்சம் இருந்தால் மட்டுமே பெண்களுக்கு அளிக்கப்படுகிறது.

## 4. சமூக வாய்ப்புக்களில் சமத்துவமின்மை

ஆரம்பக் கல்வியில் ஆண், பெண்களுக்கிடையில் சிறிய வேறுபாடுகள் இருந்தாலும், உயர் கல்வியிலும் தொழிற்பயிற்சியிலும் பெண்களுக்கெதிரான கடுமையான பாரபட்சமே கடைப்பிடிக்கப்படுகின்றது.

## 5. தொழிற் சார்ந்தோரிடையே சமத்துவமின்மை

வேலைவாய்ப்புக்களில், வேலையில், பதவி உயர்வுகளில் ஆண்களைவிடப் பெண்களே அதிக இடங்களை எதிர்கொள்கின்றனர். உதாரணமாக ஜப்பானை எடுத்துக்கொள்வோம். மக்கள் தொகையில் அல்லது அடிப்படை வசதிகளில் ஏன் உயர்கல்வியில் கூட சமத்துவத்தைக் கொண்டிருந்தாலும் வேலை வாய்ப்புக்களில், வேலையில் பதவி உயர்விலும் ஆண்களைவிட பெண்கள் குறைவான வாய்ப்பையே பெறுகின்றனர். இம்மாதிரியான சமத்துவமின்மையானது மேற்கத்திய நாடுகளில் டி.வி. தொடர்களில் நையாண்டி செய்யப்படுவதைப் பார்க்க முடியும். இங்கிலாந்தின் புகழ்பெற்ற எஸ் மினிஸ்டர் தொடரில் அமைச்சாரனவர் தன்னுடைய செயலரைப் பார்த்து பிரிட்டிஷ் சிவில் சர்வீசில் உயர் பதவிகளில் எத்தனை பெண்கள் இருக்கின்றனர்? என்று கேட்பார். அதற்குச் செயலர், சரியான எண்ணிக்கையைச் சொல்வது மிகவும் கடினமான ஒன்று. அதைப் புலனாய்வு செய்தே கண்டுபிடிக்க முடியும் என்பார். ஆனால் அமைச்சர் விடாப்பிடியாக ஒரு சராசரியாகவாவது கூற முடியுமா என்று கேட்பார். அதற்கு சராசரியாக யாருமே இல்லை என்று செயலர் விடையளிப்பார்.

## 6. சொத்துடமையில் சமத்துவமின்மை

பல சமூகங்களில் சொத்துரிமையில் சமத்துவமற்ற நிலையே காணப்படுகிறது. வீடு மற்றும் நிலங்கள் ஏற்றத்தாழ்வான முறையில்தான் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இச் சொத்துரிமைகள் இல்லாதது பெண்களின் குரலை எடுபடாமல் போகச் செய்வது மட்டுமின்றி, அவர்கள் வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் சமூகத்துறையில் நுழைந்து

பிரகாசிக்கவே முடியாத நிலை ஏற்றடுகின்றது. இச்சமத்துவமின்மையானது பெரும்பாலும் உலகின் எல்லா சமூகங்களிலுமே உள்ளது.

## 7. குடும்பத்திற்குள் சமத்துவமின்மை

குடும்பத்திற்குள் ஆண், பெண் உறவுகளில் அடிப்படையிலேயே சமத்துவமின்மை நிலவுகின்றது. இது பல வடிவங்களிலும் வெளிப்படுகின்றது. ஒரு குடும்பத்தில் ஆண் குழந்தையை மட்டும் வளர்த்தல் என்ற நிலை இல்லாவிட்டாலும் உணவு மற்றும் அடிப்படை வசதிகளில் பெண்களுக்கெதிராகப் பாரபட்சம் காட்டப்படாவிட்டாலும் குடும்பத்தினை அன்றாடம் நடத்திச்செல்வதில் ஏற்றத்தாழ்வே உள்ளது. உதாரணமாக, குடும்ப வேலைகளைப் பகிர்ந்து கொள்வதிலும், குழந்தைப் பாரமரிப்பைப் பகிர்ந்து கொள்வதிலும் கடுமையான ஏற்றத்தாழ்வே உள்ளது. பெரும்பாலான சமூகங்களில் ஆண்கள் வீட்டிற்கு வெளியே வேலைக்குச் செல்வதும் பெண்கள் குடும்பத்தின் அன்றாடப் பணிகளைச் செய்வதும் பாலின வேலைப் பிரிவினையாக உள்ளது. இங்கு ஆண் செய்யும் பணியே அங்கீகரிக்கப்படுவதும் பெண்களின் வீட்டுப்பணிகளுக்கு எவ்வித அங்கீகாரமும் இல்லாத நிலையே உள்ளது. இதில் அதிர்ச்சிக்குரிய விசயம் என்னவென்றால், உலக சுகாதார அமைப்பின் வெளியீடான மனிதனுக்குத் தேவையான சத்துணவு (Handbook of Human Nutrition Requirement – WHO) குறித்த கையேட்டை நான் பார்க்க நேரிட்டபோது வீட்டுப் பணிகளுக்கு மிகக் குறைவான கலோரி (Calories) தேவைப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து நாடுகளும், அங்கீகரிக்கும் உயர்வான ஓர் அமைப்பில் எப்படி இப்படிப்பட்ட பாரபட்சமான வார்த்தைகள் இடம் பெற்றன என்பதை என்னால் தீர்மானிக்க முடியவில்லை. (இவ்வாய்வுக் கட்டுரையானது மிக விரிவாக பிரண்ட்லைன் - நவம்பர் 9, 2001இல் வெளியிடப்பட்டுள்ளது. அதன் சுருக்கமே இது)

## புதிய யுகத்தில் நிலைமை மாறியுள்ளதா?

இப்பிரபஞ்சத்தில் மனிதர்களுக்கிடையே மனிதர்களால் உருவாக்கப்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகள் மானுட மாண்பிற்கே எதிரானதாகும். மனித நாகரிகம் முன்னோக்கிச் சென்றாலும், சமத்துவமின்மையும், பாகுபாடுகளும் பல்வேறு வடிவங்களில்

கொடூரமாய் தொடர்கின்றன. மற்ற நாடுகளைவிட இந்தியாவில் இதன் பாதிப்பு அதிகமாகவே உள்ளது. சுதந்திரத்திற்கு முன்பே இதற்குத் தீர்வு காண பல்வேறு தளங்களில் போராட்டங்களும், கருத்துப் பரிமாற்றங்களும் நடைபெற்றன. அதன் விளைவாக சுதந்திரத்திற்குப் பின்னும் மக்களாட்சியில் ஏற்றத்தாழ்வுகள் தொடரா வண்ணம் கட்டுப்படுத்த சட்டங்கள் உருவாக்கப்பட்டன. அரசியல் சாசனத்தில் சமத்துவ உரிமை அடிப்படை உரிமையாக்கப்பட்டது.

நாகரிகத்தின் முன்னோடியாய் திகழும் அமெரிக்காவில் நிறவெறியை ஒழிக்க ஆப்ரகாம் லிங்கன் முதல் மார்ட்டின் லூதர் கிங் வரை அரும்பாடுபட வேண்டியதாயிற்று. நெல்சன் மண்டேலாவின் நீண்ட கால சிறைப் போராட்டத்திற்குப் பின் தென் ஆப்பிரிக்காவின் நிறவெறி முடிவுக்கு வந்தது. இந்தியாவில் பன்னெடுங்காலமாய் தொடரும் தீண்டாமைக் கொடுமை சுதந்திரமடைந்து அரை நூற்றாண்டுக்கு மேலாகியும் குறைந்த பாடில்லை. தீண்டாமைக் கொடுமைகளுக்கெதிராக அம்பேட்கர் தனிமனிதனாய் போராடி தலித் மக்களுக்கு சில உரிமைகளைப் பெற்றுத் தந்தார்.

சாதி, மதம், ஆண், பெண் பாகுபாடு அடிப்படையில் வேலைவாய்ப்புகள் மறுக்கப்பட்டன. சுதந்திரத்திற்குப் பின்பே இவற்றையெல்லாம் தடுக்கச் சட்டங்கள் உருவாக்கப்பட்டது. ஆனால், இன்றளவும் உடல் ஊனமுற்றோருக்கு சம உரிமை அளிக்கப்படவில்லை என்பது கவலைக்குரிய விஷயமாகும்.

சமத்துவம் என்பது இச்சமூகத்தில் அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டுத் தளத்தில் மிகவும் பின் தங்கியுள்ளோரை முன்னேறிய சமூகத்திற்கு இணையாக்குவது, சமமில்லாதவர்களை சமமாக்குவதாகும். இந்திய அரசியல் சாசனம் சமத்துவ உரிமைகளுக்கு உத்தரவாதமளித்துள்ளது. சமத்துவ உரிமையென்பது ஐந்து வகையான உரிமைகளை உள்ளடக்கியுள்ளது. அவை,

1) சட்டத்தின் முன் அனைவரும் சமம்
2) சாதி, மதம், மொழி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு சமூகத்தில் சமமாக வாழும் உரிமை.
3) வேலை செய்யும் உரிமை
4) தீண்டாமையிலிருந்து காப்பாற்றும் உரிமை. தீண்டாமையை ஒழிக்கும் உரிமை
5) வெளிநாடுகளிலிருந்து அரசின் அனுமதியின்றி பட்டங்களைப் பெறுவதைத் தடை செய்தல் ஆகியவை இதில் அடங்கும்.

ல◆◆ஒ

# 11 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் – 2005

குடும்பத்தில் பல வகையான வன்முறைகளால் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக வரதட்சணைக் கொடுமை, பாலியல் ரீதியான வன்முறைகள், மனரீதியான வன்முறை, உடல் ரீதியான துன்புறுத்தல்கள், உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலை, வார்த்தைகளால் துன்புறுத்தப்படுதல் உறவுகளைக் காட்டி மிரட்டல் போன்றவை. இவ்வாறு பாதிக்கப்படும் பெண்களை இவ்வன்முறைகளிலிருந்து பாதுகாத்திடவும், பாதுகாப்பான சூழலில் வாழ்ந்திட வகை செய்யவும் இச்சட்டம் உதவுகிறது.

பெண்களை வன்முறையிலிருந்து பாதுகாக்க பல சட்டங்கள் அமலில் இருந்தாலும் குடும்ப வன்முறையிலிருந்து பாதுகாக்க தனிச் சட்டம் இதுவரை நமது நாட்டில் எதுவும் இல்லை. குடும்ப வன்முறையால் நமது நாட்டில் பாதிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. இன்று குடும்ப அமைப்பு பெண்கள் மீது அனைத்து வகை வன்முறைகளையும் திணிக்க அங்கீகாரம் கொடுப்பதாகவே உள்ளது. இவற்றைப் பற்றிப் பேசுவதற்குக்கூட அனைவரும் அஞ்சுகிறார்கள்.

இந்தியாவில் நாளொன்றுக்கு 14 பெண்கள் தங்களுடைய புகுந்த வீடுகளில் கொல்லப்படுகிறார்கள். இந்தியாவில் வரதட்சணை முறை சட்டத்திற்குப் புறம்பானது என்றாலும் வருடத்திற்கு 5000க்கும் மேற்பட்ட பெண்கள் புகுந்த வீடுகளில் வரதட்சணை கொடுமையால் மட்டுமே எரிக்கப்படுகிறார்கள். அதிகாரத்தைப் பிரயோகித்துப் பெண்களை எந்த வகையில் துன்புறுத்தினாலும் அது குடும்ப வன்முறையே. 1996-இல் உத்திரபிரதேச மாநிலத்தில் மட்டும் நடத்தப்பட்ட ஆய்வில் 45 சதவீதம் ஆண்கள் தங்களது மனைவிகளை வன்முறைக்கு உட்படுத்துகிறார்கள் என ஒப்புக் கொண்டனர். இந்தியாவில் மட்டும் வருடந்தோறும் 10,000 பெண் சிசுக்கொலைகள் பதிவாகின்றன.

## குடும்ப வன்முறை என்றால் என்ன?

உடல், வார்த்தை, உணர்ச்சி, பாலியல் அல்லது பொருளாதார ரீதியான அவமதிப்புக்கு இட்டுச் செல்லும் நடத்தைகள், தவறான செய்கைகள் அனைத்தும் குடும்ப வன்முறையாகும்.

- இச்செயல் ஒரு பெண்ணின் மனநலன் அல்லது உடல் நலனைப் பாதிக்கின்றது.
- நிகழும் வன்முறை மட்டும் அன்றி வன்முறை குறித்த அச்சுறுத்தல்களும், குடும்ப வன்முறையாகும்.
- சட்டத்திற்கு புறம்பாக வரதட்சணை கேட்டு துன்புறுத்துவதும் குடும்ப வன்முறையாகும்.

## உடல் ரீதியான துஷ்பிரயோகம் என்றால் என்ன?

உடல் தியான துஷ்பிரயோகம் என்பது எந்த ஒரு செயல் அல்லது நடத்தை உடல்வலியை ஏற்படுத்தினாலோ உயிருக்கோ அல்லது பாதிக்கப்பட்டவரின் உடல் உறுப்புகளுக்கோ ஆரோக்கியத்திற்கோ, முன்னேற்றத்திற்கோ, ஊறுவிளைப்பதாகும். மற்றும் தாக்குதல், குற்றமுறு அச்சுறுத்தல், குற்றமிரட்டல் ஆகியவையும் உள்ளடங்கும்.

## பாலியல் துஷ்பிரயோகம் என்றால் என்ன?

பாலியல் துஷ்பிரயோகம் என்பது எந்த ஒரு செயலோ அல்லது நடத்தையோ பாலியல் ரீதியில் பாதிக்கப்பட்டவரை கீழ்மைப்படுத்துவதாகவோ அல்லது சிறுமைப்படுத்துவதாகவோ அவர்தம் மாண்புக்கும் மரியாதைக்கும் பங்கம் ஏற்படுத்துவதாக அமைந்தால் அது பாலியல் துஷ்பிரயோகம். பாதிக்கப்ட்டவர் 16 வயதுக்குட்பட்டவராக இருப்பின் அவரது விருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ உடலுறவு கொள்வது பாலியல் துஷ்பிரயோகமாகும். பாலியல் ரீதியாகவோ சொல் பிரயோகத்தினாலோ உளவியல் ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ துஷ்பிரயோகம் செய்தால் ‘குடும்ப வன்முறை’ ஆகும்.

## வார்த்தை அல்லது உளவியல் ரீதியான துஷ்பிர யோகம் என்றால் என்ன?

அ) இதில் அவமதித்தல், கேலி செய்தல், சிறுமைப்படுத்துதல், தரக்குறைவாக அல்லது கேலிப்பெயர் சூட்டுதல் குறிப்பாக குழந்தை பேறு இல்லை அல்லது ஆண் வாரிசு பெற்றுத் தரவில்லை என சுட்டிக்காட்டுதல் ஆகியவை உள்ளடங்கும். (அல்லது)

ஆ) பாதிக்கப்பட்ட நபரைச் சார்ந்தவர் எவர் ஒருவரும் பாதிக்கப்பட்டவரை உடல் ரீதியாக துன்புறுத்தப் போவதாக தொடர்ச்சியான அச்சுறுத்தலும் அடங்கும்.

## பொருளாதார துஷ்பிரயோகம் என்றால் என்ன?

அ) பாதிக்கப்பட்டவருக்குரிய நிதி ஆதாராங்களை அவை நீதிமன்றத் தீர்ப்பு வாயிலாக அவருக்கு கிடைத்ததாகவோ, சட்டப்படி அவருக்குரியதாகவோ வழக்காறு மூலம் அவருக்கு உரியதாகவோ அவருக்கு தேவையாய் இருப்பதனை அவரிடமிருந்து கவர்ந்து கொள்வது அல்லது கவர்ந்து கொள்ளப்போவதாய் அச்சுறுத்துவதோ அடங்கும். வீட்டுத் தேவைக்கான பொருட்கள் மட்டுமில்லாது வரதட்சனை அல்லது பாதிக்கப்பட்டவருக்கு செலுத்த வேண்டிய வாடகை மற்றும் பாராமரிப்பு ஆகியவை உள்ளடங்கும்.

ஆ) பாதிக்கப்பட்டவருக்கு அல்லது அவரது குழந்தைகளுக்கு தேவைப்படும் அல்லது திருமண உறவினால் உபயோகப்படுத்திட அனுமதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்டவருக்கு சொந்தமான சொத்துக்கள், அவை அசையும், அசையாதவைகள், வி்யுர்ந்த வைகள், பங்குகள், பத்திரங்கள், ஆவணங்களாக இருந்து அவற்றை விற்றுவிடுதல் அல்லது அவருக்கு உரியதாக இல்லாமல் செய்துவிடுவது.

இ) பாதிக்கப்பட்டவருக்கு அவரது குடும்ப உறவின் வாயிலாக கிட்டிய, அவர் அனுபவிக்க வேண்டிய வசதிகளை அல்லது வளங்களை கிடைக்கவிடாமல் தடுப்பது அல்லது கட்டுப்பாடுகள் விதிப்பது.

## இச்சட்டத்தால் பாதுகாக்கப்படுபவர் யாவர்?

குடும்ப வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதாக கூறப்படும் எந்த ஒரு பெண்ணும் பாதிக்கப்பட்டவரே. இந்த பெண் மனைவி மட்டுமல்லாது, மகள்கள், விதவைகள், தாயார்கள் அல்லது ஒரே உறைவிடத்தைப் பகிர்ந்து கொள்ளும் ஏனைய

உறவுகளாகவும் இருக்கலாம். மணமாகாமல் ஆணுடன் இணைந்து வாழும் பெண்ணும் இச்சட்டத்தின் கீழ் பாதுகாப்புப் பெறுகிறார். பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளும் இச்சட்டத்தின் கீழ் பாதுகாப்பு பெறுகின்றனர்.

## <u>இச்சட்டத்தின் கீழ் யார் புகார் செய்யலாம்?</u>

குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ளது, நிகழ்ந்து கொண்டிருக்கிறது அல்லது நிகழ வாய்ப்புள்ளது என்று கருத போதுமான காரணம் உடைய எவரும் அது குறித்த தகவலை அளிக்கலாம். பாதிக்கப்பட்டவர் மட்டுமல்ல, சமூகப் பணியாளர்கள், அருகில் வசிப்பவர்கள், உறவினர்கள், அரசு சாரா அமைப்பினர் ஆகியோரும் அவர் சார்பில் புகார் பதிவு செய்யலாம்.

## <u>யார் மீது புகார் அளிக்கலாம்?</u>

இச்சட்டத்தின் கீழ் எவருக்கு எதிராக நிவாரணம் கோரப்படுகிறதோ, அந்த வயது வந்த, பாதிக்கப்பட்டவருடன் குடும்ப உறவில் உள்ள ஆண் மீது புகார் அளிக்கலாம். பாதிக்கப்பட்ட மனைவி அல்லது மணமாகாமல் ஆணுடன் இணைந்து வாழும் பெண், கணவரின் உறவினர் மீதோ சம்மந்தப்பட்ட ஆண் மீதோ புகார் அளிக்கலாம்.

## <u>இச்சட்டத்தின் கீழ் யாரிடம் புகார் கொடுக்க வேண்டும்?</u>

1) பாதுகாப்பு அதிகாரி
2) சேவை மையங்கள்
3) குற்றவியல் நடுவர்
4) காவல் நிலையம்

## <u>குடும்ப வன்முறை குறித்த புகார்களைப் பெறும் நபரின் கடமை யாது?</u>

- இச்சட்டத்தின் கீழ் நிவாரணம் பெற குற்றவியல் நடுவருக்கு விண்ணப்பிப்பதற்கு உரிமை உள்ளது என்று பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத் தெரிவிப்பது.
- பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் சேவை மையங்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத் தெரிவிப்பது.

- சட்டப்பணிகள் ஆணைக் குழு மீதான சட்டம் 1987-ன் கீழ் இலவச சட்ட உதவிகள் பெற உரிமை உண்டு என்று பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத் தெரிவிப்பது.
- இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்குப் பதிவு செய்யவும் உரிமை உண்டு என்று பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத் தெரிவிப்பது.

## இச்சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டவர் பெறக்கூடிய தீர்வுகள் யாவை?

இச்சட்டம் அவசர நிலை அடிப்படையில் நிவாரணம் வழங்குகிறது. கீழ்காண்பனவற்றின் அடிப்படையில் குற்றவியல் நடுவர் ஒரு சார்பான உத்தரவும் வழங்கலாம்.

### பாதுகாப்பு உத்தரவுகள்:

வன்முறையை உடனடியாக நிறுத்த வன்முறை நிகழ்த்தியவர் பாதிக்கப்பட்டவரின் பணியிடத்திற்கும் அவரது குழந்தைகள் பயிலும் பள்ளிகளுக்கும் வருவதைத் தடுக்க; பாதிக்கப்பட்டவரின் பொருளாதார நலன்களைப் பாதுகாக்க.

### உறைவிட உத்தரவுகள் :

பாதிக்கப்பட்டவர் வெளியேற்றப்படாமலிருக்க, பாதிக்கப் பட்டவருக்கு மாற்று உறைவிடம் ஏற்பாடு செய்ய வன்முறை நிகழ்த்தியவருக்கு உத்திரவிட, பாதிக்கப்பட்டவரின் வீட்டிற்குள் வன்முறை நிகழ்த்தியவர் நுழைவதைத் தடுக்க, பாதிக்கப்பட்டவருக்கு கிடைக்க வேண்டிய உடமைகளை அவர் திரும்பப் பெற ஆவன செய்தல்.

### பணவகை நிவாரணம் :

பாதிக்கப்பட்டவர் இழந்த வருமானத்தை அவருக்கு அளிக்குமாறும், மருத்துவச் செலவுகளைத் தருமாறும், உடமைகள் இழந்திருந்தால் அவற்றை அவருக்கு வழங்குமாறும் வன்முறை நிகழ்த்தியவருக்கு உத்தரவிடுவது, வேறு சட்டங்களின் கீழும் ஜீவனாம்சம் அளிக்க உத்தரவிடலாம். அளிக்கப்படும் பண்வகை நிவாரணம்,

பாதிக்கப்பட்டவர் தனக்கு பழக்கமான வாழ்க்கைத் தரத்தைத் தொடர போதுமானதாக இருத்தல் வேண்டும்.

## குழந்தைப் பாதுகாப்பு உத்தரவுகள் :

பாதிக்கப்பட்டவரின் குழந்தைகள் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களது தற்காலிக பாதுகாப்பு / பராமரிப்பு மீதான உத்தரவுகளை அளிக்க.

## பாதுகாப்பு அதிகாரி என்பவர் யார்?

பாதுகாப்பு அதிகாரி (கூடிய மட்டும் பெண்ணாக இருத்தல் வேண்டும்) மாநில அரசால் நியமிக்கப் படுபவர். குற்றவியல் நடுவர் அல்லது அரசு இச்சட்டத்தின் கீழ் பணிக்கும் கடமைகளைச் செய்பவர். இவர் குற்றவியல் நடுவரின் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பின் கீழ் இயங்குவார்.

## பாதுகாப்பு அதிகாரியின் கடமைகளும் பணிகளும் யாவை?

- இச்சட்டத்தின் கீழ் உள்ள பணிகளைச் செய்வதில் குற்றவியல் நடுவருக்கு உதவுவது.
- புகார் பெற்றவுடன் அது ‘குறித்த குடும்ப சம்பவ’ அறிக்கை தயார் செய்து, குற்றவியல் நடுவருக்கு அனுப்பி அதன் நகலை அப்பகுதி காவல் நிலையத்திற்கு பொறுப்பான அதிகாரி மற்றும் அப்பகுதியில் அமைந்துள்ள சேவை மையத்திற்கு அனுப்புவது.
- நிவாரணம் பெறுவதற்காகப் பாதுகாப்பு உத்தரவு கோரி பாதிக்கப்பட்டவர் சார்பாக நடுவருக்கு விண்ணப்பிப்பது.
- சட்டப் பணிகள் ஆணைக்குழு மீதான சட்டம், 1981 இன் கீழ் பாதிக்கப்பட்டவருக்கு சட்ட உதவி வழங்கப்படுகிறதா என்று உறுதி செய்வது.
- தேவைப்பட்டால் பாதிக்கப்பட்டவருக்குப் பாதுகாப்பான புகலிடம் வழங்கி இதனை அப்புகலிடம் அமைந்துள்ள பகுதியின் அதிகார எல்லைக்குட்பட்ட குற்றவியல் நடுவர் மற்றும் காவல் நிலையத்திற்கு அறிவிப்பது.
- தேவைப்படின் பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவப் பரிசோதனை ஏற்பாடு செய்து கொடுத்து, இதனைச் சம்மபந்தப்பட்ட காவல் நிலையத்திற்கும் குற்றவியல் நடுவருக்கும் அறிவிப்பது.
- பணவகை நிவாரணத்திற்கான உத்தரவு, முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்று உறுதி செய்வது.

## சேவை மையங்கள் என்பவை எவை?

1860 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1956, கம்பெனிகள் பதிவுச் சட்டம் ஆகியவற்றின் கீழோ அல்லத வேறு சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்ட தன்னார்வ தொண்டு அமைப்புகள், பெண்கள் உரிமைகள் பாதுகாப்பில் அக்கறையுடைய சட்ட பூர்வமான, சட்ட மருத்துவ, பொருளாதார தீர்வுகளை தரவிழைகின்ற அமைப்புகள் மாநில அரசிடம் இச்சட்டத்தின் கீழ் சேவை அமைப்பு என தம்மை பதிவு செய்துக் கொள்ளலாம்.

## சேவை மையத்தின் கடமைகளும் அதிகாரங்களும் யாவை?

- ‘குடும்ப சம்பவ அறிக்கை’ பதிவு செய்து இதனைக் குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ள பகுதியின் பாதுகாப்பு அதிகாரிக்கும் குற்றவியல் நடுவருக்கும் அனுப்புவது.
- பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவப் பரிசோதனை செய்து அதனை சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிக்கும் காவல் நிலையத்திற்கும் அறிவித்து மருத்துவ வசதி செய்து தருவது.
- பாதிக்கப்பட்டவருக்குப் புகலிடம் தேவைப்பட்டால் அவருக்குப் பாதுகாப்பு இல்லங்களில் புகலிடம் வழங்கப்படுகிறதா என்று உறுதி செய்வது.

## பாதுகாப்பு இல்லங்களின் கடமைகள்:

பாதுகாப்பு இல்லங்களில் உள்ள பொறுப்பு அதிகாரியிடம் பாதுகாப்பு இல்லத்தில் ஒரு நபருக்கு தங்கும் அனுமதி தருமாறு பாதிக்கப்பட்டவரின் சார்பாக பாதுகாப்பு அலுவலரோ, சேவை அமைப்போ அல்லது பாதிக்கப்பட்ட நபரோ கோரினால் பாதுகாப்பு இல்லத்தின் பொறுப்பாளர் அனுமதி அளிக்க வேண்டும்.

## ‘மருத்துவ வசதி’யின் கடமைகள்:

பாதிக்கப்பட்டவரின் சார்பாக, பாதுகாப்பு அதிகாரியோ, சேவை அமைப்போ அல்லது பாதிக்கப்பட்ட நபரோ மருத்துவ உதவியில் உள்ள பொறுப்பாளரிடம் ஏதேனும் மருத்துவ உதவியை தருமாறு கோரினால் பாதிக்கப்பட்ட நபருக்கு மருத்துவ உதவி அளிக்கப்பட வேண்டும்.

**இச்சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது அவசியமா?**

இல்லை புகார் அளிக்கப்படும் போது குடும்ப சம்பவ அறிக்கை தயார் செய்து அதனை மேற்படி நடவடிக்கைக்காகக் குற்றவியல் நடுவருக்கு அனுப்புவது பாதுகாப்பு அதிகாரியின் கடமையாகும்.

**குற்றவியல் நடுவருக்கு விண்ணப்பம் அளிப்பதற்கான நடைமுறை என்ன?**

இச்சட்டத்தின் கீழ் நிவாரணம் பெற வகுக்கப்பட்டுள்ள படிவத்தில் விண்ணப்பிக்கலாம். குற்றவியல் நடுவர் விசாரணைத் தேதியை அறிவிப்பார். முதல் விசாரணை நிகழ்ந்து 60 நாட்களுக்குள் அவ்விண்ணப்பம் முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

**பாதுகாப்பு உத்தரவினை வன்முறை நிகழ்த்தியவர் கீழ்ப்படியாவிடில் நடவடிக்கை என்ன?**

ஒரு வருட சிறைக்காவல் அல்லது ரூ.20,000/- அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். ஏனைய தண்டனைச் சட்டங்களின் கீழும் வழக்குப் பதிவு செய்யப்படலாம்.

**பாதுகாப்பு அதிகாரி தனது கடமையைச் செய்யாவிட்டால் என்ன செய்யலாம்?**

அரசின் முன் அனுமதியுடன் பாதுகாப்பு அதிகாரியின் மீது புகார் பதிவு செய்யலாம். குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஒரு வருட சிறைக் காவல் அல்லது ரூ. 20,000/- அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – புரிதல்

12

## பாலியல் பலாத்காரமும் சித்ரவதையும் எவ்வாறு ஒன்றுக் கொன்று தொடர்புடையது:

1) சித்ரவதை வழக்குகளில் பெரும்பாலானவை பெண்களுக்கெதிரான பாலியல் வன்கொடுமைகள் சம்பந்தப்பட்டவை.
2) சித்ரவதைகளால் ஏற்படும் விளைவுகள் இருபாலாருக்கும் ஒரே மாதிரியானவை.
3) பெண்களுக்கெதிரான வன்கொடுமைகள் நேரடியாக அரசால் செய்யப்படா விட்டாலும், அரசு இதற்கெதிரான நடவடிக்கைகளை எடுக்கத் தவறுவது/ உதாசீனப்படுத்துவதால் பெண்களுக்கெதிரான பாலியல் கொடுமைகளும் சித்ரவதையே என்று விரிவுபடுத்தப்பட்ட சித்ரவதையின் விளக்கத்தின் கீழ் வரும்.

## பெண்களுக்கெதிரான பாலியல் கொடுமைகளின் வடிவங்கள்

- குடும்ப வன்முறை
- பாலியல் வன்புணர்ச்சி
- குற்றச் செயல்கள் மூலமாக, வார்த்தைகளால் மற்றும் செய்கைகளால் மற்றும் வன்புணர்ச்சிக்கு முயற்சி செய்வதன் மூலமாக மானபங்கப்படுத்துதல்
- பணியிடங்களில் பாலியல் பலாத்காரம்
- வரதட்சணைக் கொடுமைகள்
- விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல்
- பெண் சிசுக்கொலை/ கருச்சிதைவு
- திருமணம் சம்பந்தமான குற்றங்கள்
- ஒழுக்கக் கேடான வார்த்தைகள், உடன்கட்டை ஏற்றல், நாணத்தைக் குலைத்தல்.

## குடும்ப வன்முறை

குடும்ப வன்முறை என்பது பாலியல் ரீதியான தாக்குதல் மற்றும் தூண்டுதல் உள்ளடக்கியதாகும். இது

- உடல் ரீதியான கொச்சைப்படுத்துதல்

- மனநிலை, உணர்வுகளைக் கொச்சைப்படுத்துதல்
- வார்த்தை, சமூக அந்தஸ்தை கொச்சைப்படுத்துதல்
- பாலியல் ரீதியான கொச்சைப்படுத்துதல்
- பொருளாதார ரீதியான கொச்சைப்படுத்துதல் ஆகியவைகள் குடும்பங்களில் பெண்களுக்கெதிராக இழைக்கப்படுகிறது.

**உதாரணங்கள்:**

- இடித்தல், அறைதல், மிதித்தல், தள்ளுதல்
- கொச்சைப்படுத்துதல், புனைப்பெயர் வைத்து அழைத்தல், கேவலப்படுத்துதல்.
- கட்டாய உடலுறவு, பாலியல் ரீதியான உடற்பாகங்களைத் தாக்குதல்.
- ஒழுக்கத்தை சீர்குலைத்தல், கொச்சையான வார்த்தைகளால் மிரட்டுதல்.
- சூடு வைத்தல், வெட்டுதல், ஆயுதங்களைப் பயன்படுத்துதல்.
- உணவு, கொடுக்க மறுத்தல், தூங்கவிடாமை, மருத்துவ கவனிப்பு மறுத்தல்.
- பொருளாதார நிலையைக் கட்டுப்படுத்துதல்.

## குடும்ப வன்முறைக்கான காரணிகள்

- ஆண் வழிச்சமூக அதிகார வர்க்கம்
- கல்வியறிவின்மை, சார்பு நிலைப் பொருளாதாரம், தாழ்த்தப்பட்ட பெண் கலாச்சாரம்.
- வரதட்சணை முறைகள்
- அற்பமான விஷயங்களைப் பெரிதுபடுத்துதல்
- செயற்கையான பாலியல் தேவைகள், விபச்சாரம்.
- சாராயம் மற்றும் சூதாட்டம்
- ஆண்குழந்தை இல்லாமை மற்றும் விதவை

முக்கியமாக குடும்ப வன்முறை என்பது சாதி, மத பிரிவு மற்றும் சமூக, பொருளாதார கொள்கைகளுக்கு அப்பாற்பட்டு செய்யப்படுகிறது.

## **உடல்ரீதியான வன்முறை**

- தலைமுடியைப் பிடித்திழுத்தல், உடற்பாகங்களைக் திருகுதல், இடித்தல், வெட்டுதல், குத்துல், எலும்பை உடைத்தல், சூடுபோடுதல்.
- ஆயுதங்கள் மற்றும் தீக்கருவிகளைப் பயன்படுத்துதல்.
- வன்முறையின் மூலாக மாறி, மாறி கட்டாய கருச்சிதைவு மற்றும் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே கரு வெளியேறுதல்.

## **மனநிலை, உணர்வு மீதான வன்முறை**

- அச்சுறுத்தல்
- ஒழுக்கக்கேடான வகையில் பெண்களை குற்றம் சுமத்துதல்.
- பொது மற்றும் தனிநபர்கள் முன்னிலையில் கேவலப்படுத்துதல்.
- வீட்டுச் சாமான்களை உடைத்தல், வளர்ப்புப் பிராணிகளைக் கொல்லுதல்.
- குழந்தைகள் மற்றும் உறவினர்களுக்கு தீங்கு மற்றும் அடிப்பதாக மிரட்டுதல்.

## **பாலியல் ரீதியான வன்முறை**

- கட்டாய உடலுறவு அல்லது சம்மதமில்லாத பாலியல் நடவடிக்கைகள்
- பாலியல் பாகங்களைத் தாக்குதல்.
- இச்சைப் பொருளாகப் பாவித்தல்.
- இயற்கைக்கு மாறான பாலியல் நடவடிக்கைகளுக்கு கட்டாயப்படுத்துதல்.
- பாலியல் தேவைகளுக்கு ஆட்படாத போது வன்முறை மூலமாக பயமுறுத்தி பணிய வைத்தல்.

## **வார்த்தைகள் மற்றும் சமூக வன்முறை**

- கொச்சைப்படுத்துதல், புனை பெயர் வைத்து அழைத்தல்
- பெண் வீட்டு பெற்றோரை, நண்பர்களை மற்றும் குடும்ப உறவுகளைக் கொச்சைப்படுத்துதல்.
- உறவினர்கள் மற்றும் நண்பர்கள் முன்னிலையில் கேவலப்படுத்துதல்.
- தனிமைப்படுத்துதல், குடும்ப உறவுகளைத் துன்புறுத்தல், நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துதல், பொதுவாக அநாகரீகமாக நடத்துதல்.

## <u>பொருளாதார வன்முறை</u>

- குடும்ப வருமானத்தைக் கட்டுப்படுத்துதல், பொருளாதார நிறைவை அடைவதற்கான வழியைத் தடுத்தல்.
- பொருளாதார சார்புக்கு கட்டாயப்படுத்துதல்.
- வீட்டுச் செலவுகளுக்கு குறைவான பணம் கொடுத்தல்.
- பணத்தை தவறாகப் பயன்படுத்துவதாக அல்லது சுயநலத்திற்கு செலவிடுவதாக குறை கூறுதல்.

## வன்முறையைத் தடுப்பதற்கான நடைமுறை மற்றும் சட்ட இடர்பாடுகள்

- குடும்ப வன்முறையை சமூக / சட்டப் பிரச்சினையாக ஏற்றுக் கொள்ள மறுத்தல்.
- சமூகக் களங்கம் ஏற்படும் காரணத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பேசாதிருத்தல்
- விழிப்புணர்வு மற்றும் தகவலின்மை
- நீண்ட சட்டமுறை மற்றும் தெளிவற்ற நடவடிக்கை, இத்தகைய பிரச்சினையைக் கூறுவதற்கு போதிய சட்டமின்மை

## <u>இந்தியத் தண்டனைச் சட்டத்தில் தீர்வுகள்</u>

- கொடுமை - பிரிவு 498 (a)
- கொலை - பிரிவு 299 & 300
- வரதட்சணைச் சாவு - பிரிவு 304 (b)
- தற்கொலைக்குத் தூண்டுதல் - பிரிவு 305 - 306
- சிசுக்கொலை மற்றும் கருச்சிதைவு - பிரிவு 312- 318
- காயம் மற்றும் கொடுங்காயம் - பிரிவு 319 - 324
- வன்புணர்ச்சி மற்றும் பாலியல் குற்றங்கள் - பிரிவு 375 - 377
- நம்பிக்கை மோசடி - பிரிவு 493 - 498
- மானபங்கப்படுத்துதல் - பிரிவு 354 – 509

## உரிமையியல் சட்டத்தில் தீர்வு

- திருமணம் சம்பந்தமாக - சட்டப்பூர்வமாக பிரிந்து கொள்ளல், உடன் வாழ அழைத்தல், திருமண முறிவு
- ஜீவனாம்சம்
- சாதாரண உரிமையியல்/ தீங்கியல் சட்டத்தில் உறுத்துக்கட்டளை மற்றும் நஷ்ட ஈடு கேட்டல்.

## யாரை அணுகுவது

- நீதித்துறை - சட்ட உதவி மையம், பெண்கள் நீதிமன்றம், குடும்ப நல நீதிமன்றம்
- காவல்துறை - பெண்கள் காவல் நிலையம், வரதட்சணை சிறப்புப் பிரிவு
- அரசு நிறுவனம் - சமூக நல வாரியத்தின் ஆதரவால் செயல்படும் ஆலோசனை மையம், அரசு தங்கும் விடுதிகள்
- தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் – உதவிக்கரங்கள், சட்ட ஆலோசனை மையம், சமூக மன ஆலோசனை மையம், பாதுகாப்பு உறைவிடங்கள்.

## இந்தியாவில் குடும்ப வன்முறைக்கெதிரான சட்டங்களின் எதிர்காலம்

புகுந்த வீட்டிலேயே அடைக்கலம், ஜீவனாம்சம் பாதுகாப்பு உடனடியாகக் கிடைக்குமாறு உத்திரவிடக்கூடிய பெண்பாலியல் வன்முறைக்கெதிரான உரிமையியல் சட்டங்களைக் கொண்டு வருவதற்கான தேசிய பிரச்சாரம்.

## பெண்களுக்கெதிரான வன்முறை

பெண்களுக்கெதிரான வன்முறை என்பது பெண்களுக்கு உடல், உளவியல் மற்றும் பாலியல் ரீதியாகத் தீங்கிழைக்கும், துயரை அளிக்கும் பாலியல் ரீதியான வன்முறை நடவடிக்கையாகும். இதில் அந்நடவடிக்கைக்கான மிரட்டல்கள், நிர்ப்பந்தங்கள், ஏதேச்சதிகாரமாக அவர்களின் சுதந்திரத்தைப் பறிப்பது போன்றவை அடங்கும். அவர்களின் பொது வாழ்க்கையில் அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் நடப்பதாக இருந்தாலும் வன்முறையே.

பெண்களுக்கெதிரான வன்முறை என்பது கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கும். ஆனால், இவை கீழ்க்கண்டவற்றோடு மட்டும் நின்று விடுவதில்லை. குடும்பத்தில் நிகழும் பெண்களை அடிப்பது, பெண் குழந்தைகளை பாலியல் ரீதியாக, முறைகேடாகப் பயன்படுத்துவது, வரதட்சணை வன்முறை, மனைவியையே பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்துவது, பெண்ணுறுப்பைச் சிதைப்பது, பெண்களுக்குத் தீங்கு விளைவிக்கும் மற்ற பாரம்பரிய நடைமுறைகள், சுரண்டல் வன்முறை உள்ளிட்ட உடல், பாலியல் மற்றும் உளவியல் ரீதியான வன்முறைகளும் சமூகத்தில் பெண்களுக்கெதிராக நடைபெறும் பாலியல் பலாத்காரம், பாலியல் ரீதியாக முறையாக நடத்துதல், பாலியல் ரீதியாக தீங்கிழைத்தல், பணி செய்யும் இடத்திலும், கல்வி உள்ளிட்ட இதர நிறுவனங்களிலும் மிரட்டல்கள் விடுப்பது மற்றும் பெண்களை விற்பது, நிர்பந்தப்படுத்தி விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது போன்றவையும், பெண்களின் உடல், பாலியல் மற்றும் உளவியல் ரீதியாக வன்முறையை அரசே இழைப்பது அல்லது ஆதரிப்பது போன்றவையும் வன்முறையாகும்.

- பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புக்கான ஐ.நா.வின் பிரகடனம் 1990

# 13 பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் – 2012

## அத்தியாயம் - 01

### 01. தலைப்பு:

1) இச்சட்டம் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாப்பு சட்டம் - 2012 என்று அழைக்கப்படும்.
2) ஜம்மு காஷ்மீர் நீங்கலாக இந்தியா முழுவதற்கும் பொருந்தும்.
3) மத்திய அரசு அதிகாரப்பூர்வ அரசிதழில் வெளியிட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். (16.07.2012)

### 02. சொற்பொருள் விளக்கம்:

இச்சட்டத்தில் குறிப்பிட்ட இடங்களில் வேறு பொருள்தரும் இடங்கள் தவிர...

1) ஊடுருவும் வகையிலான பாலியல் தாக்குதல் என்பது பிரிவு 5இல் உள்ளவாறு பொருள்படும்.
2) மோசமான பாலியல் கொடுமை என்பது பிரிவு 9இல் உள்ளவாறு பொருள்படும்.
3) ஆயுதப் படைகள் அல்லது பாதுகாப்பு படைகள் என்பது மத்திய ஆயுதப்படைகள், பாதுகாப்பு படைகள், காவல் துறை மற்றும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவைகள்.
4) குழந்தை என்பவர் 18 வயதிற்குட்பட்டவர்கள்.
5) குடும்ப உறவுமுறை என்பது குடும்ப வன்முறைகளிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம்-2005இல் பிரிவு (2)இல் உள்ளவாறு பொருள்படும்.
6) ஊடுருவும் வகையிலான பாலியல் தாக்குதல் என்பது பிரிவு 3இல் உள்ளவாறு பொருள்படும்.

7) வரைந்தளிக்கப்பட்ட என்பது இச்சட்டத்தின் விதிகளில் வரைந்தளிக்கப்பட்டது.

8) மத நிறுவனங்கள் என்பது மத நிறுவனங்கள் (தவறாக பயன்படுத்தலை தடுக்கும்) சட்டம் 1988இல் உள்ளவாறு பொருள்படும்.

9) பாலியல் கொடுமை என்பது பிரிவு 7-இல் உள்ளவாறு பொருள்படும்.

10) பாலியல் துன்புறுத்தல் என்பது பிரிவு 11இல் உள்ளவாறு பொருள்படும்.

11) பகிர்ந்து கொள்ளப்பட்ட இருப்பிடம் என்பது குழந்தை குடும்ப ரீதியாக உறவு கொண்டிருந்தவராக அல்லது கொண்டிருக்கும் குற்றம் இழைத்த நபருடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட இருப்பிடம் என்று பொருள்படும்.

12) சிறப்பு நீதிமன்றம் என்பது பிரிவு 28இன்படி ஏற்படுத்தப்படும் நீதிமன்றமாகும்.

## அத்தியாயம் – 02

## குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள்

### I. ஊடுருவும் வ கையிலான பாலியல் தாக்குதல் தண்டனைகளும்

**a) ஒரு நபர் மோசமான ஊடுருவதக்க பாலியல் தாக்குதலை நிகழ்த்துதல் என்பது.....**

1) ஒரு நபர் தனது பிறப்புறுப்பை குழந்தையின் பிறப்புறுப்பில், வாய், ஆசனவாய் ஆகியவற்றில் நுழைத்தல் அல்லது குழந்தையை செய்ய வைத்தல் அல்லது வேறு நபருடன் செய்ய தூண்டுதல்.

2) ஒரு நபரின் பிறப்புறுப்பு அல்லாத வேறு ஏதேனும் பொருள் அல்லது தனது உடல் பாகங்களை குழந்தையின் பிறப்புறுப்பில், வாய், ஆசனவாய் ஆகியவற்றில் நுழைத்தல் அல்லது குழந்தையை செய்ய வைத்தல் அல்லது வேறு நபருடன் செய்ய தூண்டுதல்.

3) குழந்தையின் உடலில் எந்த பாகத்திலும் பிறப்புறுப்பு, சிறுநீர் பாதை, ஆசனவாயில் ஊடுருவத்தக்க வகையில் கையாண்டால்.

4) தீங்கு இழைக்கும் நபர் தனது முகத்தை குழந்தையின் பிறப்புறுருப்பு, சிறுநீர் குழாய், ஆவனவாய் போன்ற பகுதிகளில் வைத்தல் அல்லது குழந்தையை வைக்க தூண்டுதல் அல்லது வேறு நபருடன் மேற்கண்டவாறு செய்ய தூண்டுதல்.

b) மேற்கண்ட குற்றங்களை செய்தால் 7 வருடங்களுக்கு குறையாமலும் அதிகபட்சமாக ஆயுள் சிறை தண்டனை வரை விதிக்கப்படும் அல்லதுசிறை தண்டனையுடன் அபராதம் என இரண்டும் விதிக்கப்படும்.

## II. மோசமான ஊடுருவும் வகையிலான பாலியல் தாக்குதல்களும் தண்டனைகளும்

**a) காவல் துறையைச் சார்ந்த ஒருவர் ஊடுருவதக்க பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்.....**

1) காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அல்லது பணி அமர்த்தப்பட்ட அல்லது
2) காவல் நிலையம் அல்லது தனது அதிகார எல்லைக்கு அல்லாத காவல் நிலையத்திலோ அல்லது
3) பணியின் போது அல்லது பணியில் இல்லாத வேறு வகைகளில் அல்லது
4) காவலர் என்று அடையாளம் காணப்பட்டாலே,

இவர் மேற்கண்டவாறு பணியில் உள்ளவர் என்று பிறர் அடையாளம் காணும் வகையில் இருப்பவர்.

**b) ஆயுதப்படை மற்றும் பாதுகாப்பு படையைச் சார்ந்த ஒருவர் ஊடுருவதக்க பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்.....**

1) தனக்கு வரையறுக்கப்பட்ட பணி இடத்திலோ அல்லது
2) தனக்கு ஆயுதப் படை அல்லது பாதுகாப்பு படையால் ஒதுக்கப்பட்ட பணி எல்லைக்குள் அல்லது
3) பணியின் போது அல்லது பணியில் இல்லாத வேறு வகைகளில் அல்லது
4) ஆயுதப்படையினர் அல்லது பாதுகாப்பு படையினர் என்று அடையாளம் காணப்பட்டாலே,

இவர் மேற்கண்டவாறு பணியில் உள்ளவர் என்று பிறர் அடையாளம் காணும் வகையில் இருப்பவர்.

**c) அரசுப் பணியைச் சார்ந்த ஒருவர் ஊடுருவதக்க பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்**

1) சிறைத் துறை நிர்வாகத்தை சார்ந்தவர்கள் அல்லது பணியாளர்கள் அல்லது பாதுகாப்பு இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட இதர பாதுகாப்பு இல்லங்கள் அல்லது கொட்டடியில்

பணியாற்றும் ஊழியர்கள், அதிகாரிகள் ஊடுருவதக்க பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்

2) அரசு அல்லது தனியார் மருத்துவமனை நிர்வாகிகள் அல்லது ஊழியர்கள் ஊடுருவதக்க பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்.
3) கல்வி நிறுவனங்கள் மற்றும் சமயம் சார்ந்த நிறுவனங்களைச் சார்ந்த நிர்வாகிகள் அல்லது ஊழியர்கள் ஊடுருவதக்க பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால் அல்லது
4) ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் கூட்டாக மேற்கண்ட குற்ற செயலில் ஈடுபட்டால்
5) மரணத்தை விளைவிக்கும் ஆயுதங்கள் அல்லது சூடேற்றப்பட்ட ஏதேனும் பொருள் அல்லது அரிக்கும் பொருளை பயன்படுத்தி ஊடுருவதக்க பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால் அல்லது
6) ஊடுருவதக்க பாலியல் தாக்குதல் மூலம் கொடூரமான காயம் அல்லது உடல் ரீதியான காயம், குழந்தையின் பால் உறுப்புக்கள் பாதிக்கப்பட்டால்.
7) குழந்தைகள் மீது ஊடுருவதக்க பாலியல் தாக்குதலில் ஈடுபடுவோர்...
   i. மனநல சட்டம் 1987இன்படி மனநலம் குறித்த விளக்கத்தின்படி ஒரு குழந்தையின் உடல் மற்றும் மன நல அளவில் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக பாதிப்பை ஏற்படுத்துவோர்.
   ii. பாலியல் தாக்குதல் மூலம் ஒரு பெண் குழந்தையை கருவுறச் செய்வோர்.
   iii. அன்றாட பணிகளை தற்காலிகமாவோ அல்லது நிரந்தரமாக பாதிக்கும் வகையில் எய்ட்ஸ் அல்லது உயிரை கொல்லும் நோய்கள் அல்லது தொற்று மூலம் உடல் மனநலம் பாதிப்பை ஏற்படுத்துவோர்.
   iv. உடல் மற்றும் மன ரீதியாக இயலா குழந்தைகளை அவர்களின் இயலாமையை பயன்படுத்தி பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோர்.
   v. ஓன்றுக்கும் மேற்பட்ட அல்லது தொடர்ச்சியாக பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோர்.
   vi. 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடம் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.
   vii. இரத்த உறவு, தத்தெடுப்பு, திருமணம், பாதுகாவலர், வளர்ப்பு குழந்தை அல்லது பெற்றோருடன் குடும்ப உறவு கொண்டு ஒரே வீட்டில் அல்லது குடியிருப்பு பகுதியில் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.

viii. குழந்தைகள் தொடர்பாக பணியில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது நிர்வாகிகள் அல்லது ஊழியர்கள் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.

ix. குழந்தைகளுக்கான சேவை செய்யும் ஒரு நிறுவனத்தில் அல்லது காப்பகத்தில் அதன் பொறுப்பானவர்கள் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.

x. குழந்தை ஏற்கனவே கருவுற்ற நிலையில் இருக்கும் போது பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.

xi. பாலியல் தாக்குதலில் ஈடுபட்டு குழந்தையை கொலை செய்ய முற்படுவோர்.

xii. வகுப்புவாதம் அல்லது குழு மோதலின் போது குழந்தைகள் மீது பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.

xiii. ஏற்கனவே பாலியல் தாக்குதலில் ஈடுபட்டு குற்றம்சாட்டப்பட்ட அல்லது இச்சட்டத்தின் ஏதாவது ஒரு பிரிவின் கீழ் தண்டிக்கப்பட்ட ஒருவர் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.

xiv. குழந்தையை பாலியல் தாக்குதலை தொடுத்து பொது இடத்தில் நிர்வாணமாக ஓடவிட்டால்.

இவைகள் மோசமான ஊடுருவதக்க பாலியல் தாக்குதல்களாகும்.

**d) தண்டனைகள்**

மோசமான ஊடுருவதக்க பாலியல் தாக்குதலில் ஈடுபடும் ஒருவருக்கு 10 ஆண்டுகளுக்கு குறையாமலும் அதிகபட்சமாக ஆயுள் தண்டனை வரை கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும் அல்லது சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

## III. பாலியல் தாக்குதலும் தண்டனையும்

a) பாலியல் தாக்குதல் என்பது-பாலியல் நோக்கத்தோடு ஒரு குழந்தையின் பெண் ஆண் பிறப்புறுப்புகள், ஆனசக்குழாய், மார்பகங்களை தொடுவது அல்லது பாலியல் தாக்குதலில் ஈடுபடுபவரின் பெண் ஆண் பிறப்புறுப்புகள், ஆனசக்குழாய், மார்பகங்களை குழந்தையை தொட செய்தல் அல்லது வேறு பாலியல் வக்கிரங்களில் ஈடுபடுதல். இதில் உடல் ரீதியான தாக்குதல் இருக்கும்

ஆனால் குழந்தை அல்லது குற்றவாளியிடம் ஊடுருவதக்க பாலியல் தாக்குதல் நிகழாது.

b) மேற்கண்ட பாலியல் தாக்குதலில் ஈடுபடும் நபருக்கு 3 ஆண்களுக்கு குறையாமலும் அதிகபட்சமாக 5 வரையிலும் சிறை தண்டனை விதிக்கப்படும் அல்லது சிறை தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

## IV. மோசமான பாலியல் தாக்குதலும் தண்டனையும்

**a) காவல் துறையைச் சார்ந்த ஒருவர் பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்.....**

1) காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அல்லது பணி அமர்த்தப்பட்ட அல்லது
2) காவல் நிலையம் அல்லது தனது அதிகார எல்லைக்கு அல்லாத காவல் நிலையத்திலோ அல்லது
3) பணியின் போது அல்லது பணியில் இல்லாத வேறு வகைகளில் அல்லது
4) காவலர் என்று அடையாளம் காணப்பட்டாலே,
5) இவர் மேற்கண்டவாறு பணியில் உள்ளவர் என்று பிறர் அடையாளம் காணும் வகையில் இருந்தாலே

**b. ஆயுதப்படை மற்றும் பாதுகாப்பு படையைச் சார்ந்த ஒருவர் பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்.**

1) தனக்கு வரையறுக்கப்பட்ட பணி இடத்திலோ அல்லது
2) தனக்கு ஆயுதப் படை அல்லது பாதுகாப்பு படையால் ஒதுக்கப்பட்ட பணி எல்லைக்குள் அல்லது
3) பணியின் போது அல்லது பணியில் இல்லாத வேறு வகைகளில் அல்லது
4) ஆயுதப்படையினர் அல்லது பாதுகாப்பு படையினர் என்று அடையாளம் காணப்பட்டாலே,

இவர் மேற்கண்டவாறு பணியில் உள்ளவர் என்று பிறர் அடையாளம் காணும் வகையில் இருந்தாலே

1) அரசுப் பணியைச் சார்ந்த ஒருவர் பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்
2) சிறைத் துறை நிர்வாகத்தை சார்ந்தவர்கள் அல்லது பணியாளர்கள் அல்லது பாதுகாப்பு இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் சட்டத்தால்

ஏற்படுத்தப்பட்ட இதர பாதுகாப்பு இல்லங்கள் அல்லது கொட்டடியில் பணியாற்றும் ஊழியர்கள், அதிகாரிகள் பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்

3) அரசு அல்லது தனியார் மருத்துவமனை நிர்வாகிகள் அல்லது ஊழியர்கள் பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால்.
4) கல்வி நிறுவனங்கள் மற்றும் சமயம் சார்ந்த நிறுவனங்களைச் சார்ந்த நிர்வாகிகள் அல்லது ஊழியர்கள் பாலியல் தாக்குதலை குழந்தை மீது நிகழ்த்தினால் அல்லது
5) ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் கூட்டாக மேற்கண்ட குற்ற செயலில் ஈடுபட்டால் (விளக்கம் - ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் மேற்கண்ட குற்ற செயலில் ஈடுபட்டால் தனிநபருக்கு விதிக்கப்படும் தண்டனை ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக விதிக்கப்படும்.)
6) மரணத்தை விளைவிக்கும் ஆயுதங்கள் அல்லது சூடேற்றப்பட்ட ஏதேனும் பொருள் அல்லது அரிக்கும் பொருளை பயன்படுத்தி பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால் அல்லது
7) பாலியல் தாக்குதல் மூலம் கொடூரமான காயம் அல்லது உடல் ரீதியான காயம், குழந்தையின் பால் உறுப்புக்கள் பாதிக்கப்பட்டால்.
8) குழந்தைகள் மீது பாலியல் தாக்குதலில் ஈடுபடுவோர்...
   i. மனநல சட்டம் 1987இன்படி மனநலம் குறித்த விளக்கத்தின்படி ஒரு குழந்தையின் உடல் மற்றும் மன நல அளவில் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக பாதிப்பை ஏற்படுத்துவோர்.
   ii. பாலியல் தாக்குதல் மூலம் ஒரு பெண் குழந்தையை கருவுறச் செய்வோர்.
   iii. அன்றாட பணிகளை தற்காலிகமாவோ அல்லது நிரந்தரமாக பாதிக்கும் வகையில் எய்ட்ஸ் அல்லது உயிரை கொல்லும் நோய்கள் அல்லது தொற்று மூலம் உடல் மனநலம் பாதிப்பை ஏற்படுத்துவோர்.
   iv. உடல் மற்றும் மன ரீதியாக இயலா குழந்தைகளை அவர்களின் இயலாமையை பயன்படுத்தி பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோர்.
   v. ஒன்றுக்கும் மேற்பட்ட அல்லது தொடர்ச்சியாக பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோர்.
   vi. 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடம் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.

vii. இரத்த உறவு, தத்தெடுப்பு, திருமணம், பாதுகாவலர், வளர்ப்பு குழந்தை அல்லது பெற்றோருடன் குடும்ப உறவு கொண்டு ஒரே வீட்டில் அல்லது குடியிருப்பு பகுதியில் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.

viii. குழந்தைகள் தொடர்பாக பணியில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது நிர்வாகிகள் அல்லது ஊழியர்கள் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.

ix. குழந்தைகளுக்கான சேவை செய்யும் ஒரு நிறுவனத்தில் அல்லது காப்பகத்தில் அதன் பொறுப்பானவர்கள் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.

x. குழந்தை ஏற்கனவே கருவுற்ற நிலையில் இருக்கும் போது பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.

xi. பாலியல் தாக்குதலில் ஈடுபட்டு குழந்தையை கொலை செய்ய முற்படுவோர்.

xii. வகுப்புவாதம் அல்லது குழு மோதலின் போது குழந்தைகள் மீது பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.

xiii. ஏற்கனவே பாலியல் தாக்குதலில் ஈடுபட்டு குற்றம்சாட்டப்பட்ட அல்லது இச்சட்டத்தின் ஏதாவது ஒரு பிரிவின் கீழ் தண்டிக்கப்பட்ட ஒருவர் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டால்.

xiv. குழந்தையை பாலியல் தாக்குதலை தொடுத்து பொது இடத்தில் நிர்வாணமாக ஓடவிட்டால்.

இவைகள் மோசமான ஊடுருவதக்க பாலியல் தாக்குதல்களாகும்.

9) **<u>தண்டனைகள்:</u>**மோசமான பாலியல் தாக்குதலில் ஈடுபடும் ஒருவருக்கு 05 ஆண்டுகளுக்கு குறையாமலும் அதிகபட்சமாக 07 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும் அல்லது சிறை தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

## V.பாலியல் துன்புறுத்தலும் தண்டனையும்

a) ஒரு நபர் பாலியல் துன்புறுத்தல் செய்யும் நோக்குடன் கீழ்க்கண்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டால்...

1) குழந்தைகளிடம் பாலியல் ரீதியான பேச்சுகள், வார்த்தைகள், செய்கைகள், பாலியல் எண்ணத்தை தூண்டும் வகையில் பொருட்களை காட்டுவது அல்லது உடலைக் காட்டுவது

2) குழந்தையின் உடலை அல்லது உடல் உறுப்புகளை பார்க்கும்படி செய்தல் அல்லது மற்றவர்கள் பார்க்கும் வகையில் செய்தல்.

3) குழந்தைகளிடம் பாலியல் உள்நோக்கம் கொண்ட பொருட்களை காட்டி அவர்களை தவறான பாலியல் ரீதியாக சித்தரிக்க தூண்டுவது.

4) ஒரு குழந்தையை தொடர்ந்து பின்தொடர்வது அல்லது கண்காணிப்பது, இது நேரடியாக அல்லது இதர மின்னனு சாதனங்கள் மூலம் கண்காணித்தல் அல்லது தொடர்பு கொள்வது.

5) குழந்தைகளை மிரட்டி தவறாக பாலியல் ரீதியான படங்களை பார்க்க கட்டாயப்படுத்துவது அல்லது இன்னும் பிற ஊடகங்களை காட்டுதல்.

6) பாலியல் வக்கிர படங்களை காட்டி தூண்டுவது அல்லது அவர்களை வேறு வழிகளில் கவர்ந்து இழுப்பது.

b) மேற்கண்ட குற்றங்களுக்கு 3 வருடங்களுக்கு குறையாமல் சிறை தண்டனை விதிக்கப்படும். சிறை தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

# அத்தியாயம் – 03

## குழந்தைகளை ஆபாசமாக படம் எடுத்தலும் தண்டனைகளும்

### I. ஊடகங்களில் குறிப்பாக மின்னனு ஊடகங்களில் நிகழ்ச்சிகள் மற்றும் விளம்பரங்களில் குழந்தைகளைஆபாசமாக சித்தரிப்பது.

a) குழந்தைகளின் பிறப்புறுப்பை காட்சிப்படுத்துவது.

b) குழந்தைகளை தானாகவோ அல்லது தூண்டப்பட்ட பாலியல் சேய்கைகள்

c) குழந்தைகளை ஆபாசமாக சித்தரிப்பது.

### II. மின்னனு மற்றும் அச்சு ஊடகங்களில் குழந்தைகளை சித்தரிப்பது மட்டுமல்லாமல் ஆபாச படங்களை தயாரிப்பது, வெளியீடுவது, விநியோகிப்பது குற்றமாகும்.

a) **தண்டனைகள்:** - குழந்தைகளை பாலியல் ரீதியாக ஆபாசமாக சித்தரித்தால் 5 வருட சிறை தண்டனையும் இரண்டாவது முறை தொடர்ந்து செய்தால் 7 ஆண்டுகள் வரை தண்டனையும் மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.

b) குழந்தையை பாலியல் ரீதியாக ஆபாசமாக சித்தரித்து படத்தை எடுப்பது மட்டுமல்லாமல் நேரடியாக பங்கேற்றிருந்தால் அவருக்கு 10 வருடங்களுக்கு

குறையாமல் அதிகபட்சமாக ஆயுள் சிறை தண்டனை வரை விதிக்கப்படும். மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.

1) குழந்தையை பாலியல் ரீதியாக ஆபாசமாக சித்தரித்து எடுக்கும் படத்தில் நேரடியாக பங்கேற்றிருந்தால் அவருக்கு ஆயுள் சிறை தண்டனை முதல் 8 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும்.

c) வணிக நோக்கில் ஆபாச அச்சு பொருட்கள் மற்றும் மின்னனு பொருட்களை சேகரித்து வைத்தால் 3 ஆண்டுகளுக்கு குறையாமல் சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

## <u>அத்தியாயம் - 04</u>

## குற்றம் செய்வதற்கான முயற்சி மற்றும் உடந்தை

### I. ஒருவர் இக்குற்றத்தை செய்ய...

a) ஒருவரை இக்குற்றத்தை செய்ய தூண்டுவது.

b) ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் இணைந்து குற்றச் செயலில் ஈடுபட சதி செயலில் ஈடுபடுவது.

c) குற்றச்செயலில் ஈடுபடுவதற்கு எதுவாக அச்சுறுத்துவது, கட்டாயப்படுத்துவது, கடத்துதல், ஏமாற்றுவது, பொய் சொல்வது, அதிகாரம், குழந்தையின் இயலாத நிலை, ஆசை காட்டி இணங்க செய்தல் போன்றவை இச்செயல்களுக்கு உதவும் செயலாக கருதப்படும்.

### <u>II. தண்டனை:</u>

உடந்தையாக செயல்பட்டமைக்கு அல்லது தூண்டியமைக்கு, ஆயுள் தண்டனையில் பாதியளவு தண்டனை அளிக்கப்பட வேண்டும். அல்லது பாலியல் குற்றங்களுக்கு வழங்கப்படும் நீண்டகால கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

# அத்தியாயம் - 05

## அறிக்கை தயார் செய்யும் முறை

**I. குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973இன்படி குறிப்பிட்ட பாலியல் தொடர்பாக குற்றம் நடைபெற்றிருந்தால் அல்லது நடைபெற்றதை ஏதோ ஒரு வகையில் அறிந்திருந்தால் (பாதிக்கப்பட்ட குழந்தையும் உள்ளடக்கம்) கீழ்க்கண்டவர்களுக்கு புகாராக தெரிவிக்கலாம்.**

a) சிறப்பு சிறார் காவல் பிரிவு

b) உள்ளூர் காவல் துறை

**II. ஒவ்வொரு அறிக்கையும் துணைப் பிரிவு (1) இன் படி கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்.**

a) எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட எண் கொடுக்க வேண்டும்.

b) தகவல் தருபவருக்கு வாசித்து காட்ட வேண்டும்.

c) காவல் பிரிவில் இதற்கென ஆவணப் புத்தகம் தனியாக பராமரிக்க வேண்டும்.

**III. அறிக்கையில் பதிவு செய்யப்படும் தகவல்கள் எளிய மொழியல் புரிந்து கொள்ளும் வகையில் இருக்க வேண்டும்.**

**IV. குழந்தை புரிந்து கொள்ளும் வகையில் அறிக்கை இல்லையெனில் குழந்தைக்கு புரியும் வகையில் அனுபவம் உள்ள மொழிப் பெயர்பாளர் அல்லது தொடர்பாளரை வைத்து கொள்ள வாய்ப்புகளை ஏற்படுத்தி தர வேண்டும்.**

**V.பாதிக்கப்பட்ட குழந்தைக்கு பாதுகாப்பு தேவை என்று சிறார் காவல் பிரிவு அல்லது உள்ளூர் காவல் துறையினர் கருதினால் அறிக்கை கிடைத்த 24 மணி நேரத்திற்குள் பாதுகாப்பும் கவனிப்பும் அளிக்க வேண்டும். தேவையெனில் மருத்துவ வசதியும் செய்து தர வேண்டும்.**

**VI. சிறப்பு சிறார் காவல் பிரிவு அல்லது உள்ளூர் காவல் துறையினர் அறிக்கை கிடைத்த 24 மணி நேரத்திற்குள் சிறப்பு நீதிமன்றத்திற்கும் குழந்தைகள் நல (Child Protection Committee) குழுவிற்கும் தெரிவிக்க வேண்டும்.**

**VII.தகவல்களை அளிப்பவர்களுக்கு எந்தவிதமாக பிரச்சனைகளும் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.**

**VIII. ஊடகம், உணவகம், தங்கும் விடுதிகள், மனமகிழ் மன்றங்கள், ஸ்டுடியோ அல்லது புகைப்படம் எடுக்கும் வசதியுள்ள இடங்களில் பணிபுரியும் பணியாளர்கள் தங்கள் பணித் தளத்தில் குழந்தைகளை பாலியல் ரீதியாக சுரண்டக் கூடிய வகையிலான ஆபாசப் படம் எடுத்தல் போன்ற நடவடிக்கைகளை உடனடியாக சிறார் சிறப்பு காவல் பிரிவுக்கு அல்லது உள்ளூர் காவல் துறையினருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.**

IX. a). பிரிவு 19இன் துனைப் பிரிவு 1 இன்படியும் பிரிவு 20இன் படியும் சம்பவம் நடந்து உரிய நேரத்தில் தகவல் தெரிவிக்க தவறினரால் 6 மாத காலத்திற்கு குறையாத கால அளவிற்கு சிறை தண்டனையும் மற்றும் அபராதம் என இரண்டும் விதிக்கப்படும்.

b). ஒரு கம்பெனி அல்லது நிறுவனத்தில் அதிகாரியாக அல்லது மற்றவர்களின் பணிகளை மேற்பார்வையிடும நபரின் அதிகாரத்தின் கீழ் அவருடைய சகாக்கள் பிரிவு 19இல் துனைப் பிரிவு 1 இன் படி தகவலை உரிய சிறார் சிறப்பு காவல் பிரிவு அல்லது உள்ளூர் காவல் துறையினருக்கு தகவல் தர தவறினால் அவருக்கு 1 வருடத்திற்கு குறையாமல் சிறை தண்டனையும் மற்றும் அபராதம் என இரண்டும் விதிக்கப்படும்.

**X. எவரேனும் ஒருவரை பயமுறுத்தவோ, நற்பெயரை கெடுக்கவோ, அவரது மாண்பை குலைக்கும் நோக்கில் பொய் புகாரோ அல்லது பொய் தகவலோ அளித்தால் அது குற்றம். இதற்கு 6 மாதத்திற்கு குறையாமல் சிறை தண்டனையும் அபராதம் என தனித் தனியே அல்லது இரண்டும் சேர்ந்து வசூலிக்கப்படும்.**

1) மேற்கண்ட பொய் புகாரை ஒரு குழந்தை அளித்த புகார் பொய்யாக இருக்குமானால் குழந்தைக்கு எவ்வித தண்டனையும் அளிக்கக் கூடாது.
2) குழந்தையாக அள்ளாமல் ஒருவர் குழந்தையின் மீது பொய் புகார் அளித்தால் அவருக்கு ஒரு வருடம் வரை சிறை தண்டனை விதிக்கப்படுவார் அல்லது அபராதம் விதிக்கப்படும் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

XI. a). ஒருவருடைய தனிப்பட்ட அந்தரங்கத்தை பாதிக்குமு வகையில் எவ்வகையான ஊடகத்திலும், வழக்கின் முழுமையான தகவல் தெரியாமல் வழக்கு பற்றிய தகவல்களை அளிக்கக் கூடாது அல்லது பகிர்ந்து கொள்ளக் கூடாது.

b). ஊடகங்களில் குழந்தையின் பெயர், முகவரி, புகைப்படம், குடும்ப விபரம், பள்ளி, அண்டை வீட்டார் மற்றும் இன்னும் பிற விபரங்களை வெளியிடக் கூடாது. (சமீபத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட 3 குழந்தைகளின் பெயர்களை நாடாளுமன்றத்தில் மத்திய உள்துறை அமைச்சர் வெளியிட்டதை தொடர்ந்து எழுந்த அமளியால் உடனடியாக மன்னிப்பு கோரினார்.) குழந்தையின் நலனில் பாதிப்பு ஏற்படாது என்று சிறப்பு நீதி மன்ற கருதினால் அறிக்கை வெளியிட அனுமதிக்கலாம்.

c). ஊடக வெளியீட்டாளர் அல்லது ஸ்டுடியோ உரிமையாளர் ஆகியோருக்கு இரகசியத்தை காக்கும் உரிமை உள்ளது.

d). துனைப் பிரிவு 1 மற்றும் 2இல் உள்ள அடிப்படையான அம்சங்களை மீறுவோர் அல்லது முரண்படுவோர் 6 மாதத்திற்கு குறையாமலும் 1 வருட வரையிலான சிறை தண்டனை மற்றும் அபராதம் என இரண்டும் விதிக்கப்படும்.

## அத்தியாயம்-06

## குழந்தையின் வாக்குமூலத்தை பெறும் முறைகள்

1) குழந்தையின் வாக்குமூலத்தை அதன் வீட்டிலேயே பெற வேண்டும் அல்லது அதற்கு தோதான இடத்தில் பெற வேண்டும். காவல் உதவி ஆய்வாளர் தகுதிக்கு குறையாத பெண் காவல் அதிகாரியே வாக்குமூலத்தை பெற வேண்டும்.
2) குழந்தையின் வாக்குமூலத்தை பெறும் காவல் துறை அதிகாரி தனது காவல் உடையில் வாக்குமூலத்தை பெறக் கூடாது.
3) விசாரணை நடைபெறும் போது எக்காரணம் கொண்டும் குற்றவாளி குழந்தையை சந்திக்கும் வாய்ப்பு அளிக்கக் கூடாது.
4) எக்காரணம் கொண்டும் பாதிக்கப்பட்ட குழந்தையை இரவில் காவல் நிலையத்தில் தங்க வைக்கக் கூடாது.
5) காவல்துறை அதிகாரி எக்காரணம் கொண்டும் வெகுஜன ஊடகங்களில் குழந்தையைப் பற்றிய தகவல்க வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குழந்தையின் நலன் கருதி சிறப்பு நீதிமன்றம் இசைவு தெரிவிக்கும் தகவல்களை மட்டும் வெகுசன ஊடகங்களில் வெளியிடலாம்.

6) குற்றவியல் நடைமுறை விதிகள் 164இன் படி மாஜிஸ்ரேட் குழந்தையின் வாக்குமூலத்தை பதிவு செய்வார். மாஜிஸ்ரேட் குழந்தையின் வாக்குமூலத்தை பதிவு செய்யும் போது குற்றவியல் நடைமுறை விதிகள் 164இன் பிரிவு 1 இன் படி குற்றவாளியின் வழக்கறிஞர் இருக்க வேண்டும் என்ற விதி இத்தகைய வழக்குகளில் பொருந்தாது.

7) குழந்தையின் வாக்குமூலத்தை பெற்றோர் அல்லது உறவினர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் மாஜிஸ்ரேட் அல்லது காவல்துறை அதிகாரி குழந்தை பேசுவதை அப்படியே பதிவு செய்வார்.

8) பதிவு செய்யும் காவல் துறை அதிகாரி அல்லது மாஜிஸ்ரேட் தேவைப்படுமானால் திறமையான மொழிப் பெயர்ப்பாளரை வைத்துக் கொள்ளலாம்.

9) குழந்தை உடல், மன ரீதியாக பாதிக்கப்பட்டிருக்கும் சூழலில் வாக்குமூலம் அளிப்பதில் சிக்கல் இருந்தால் இத்துறையில் நிபுணத்துவம் பெற்ற நபரை தொடர்பாளராக வைத்து குழந்தையின் வாக்குமூலத்தை பதிவு செய்ய வேண்டும்.

10) சாத்தியப்படும் சூழல்களில் குழந்தையின் வாக்குமூலத்தை ஒலி, ஒளி முறைகளில் பதிவு செய்ய வேண்டும்.

11) இச்சட்டத்தில் வரையறுத்துள்ளபடி பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை முதல் தகவல் அறிக்கை, புகார் அளிக்காமல் இருக்கும் சூழலிலும் குற்றவியல் நடைமுறை விதிகள் 1973 இன்படி பிரிவு 164Aஇன் படி மருத்துவ பரிசோதனை நடத்த வேண்டும்.

12) பாதிக்கப்பட்டது பெண் குழந்தையாக இருக்கும் என்றால் பெண் மருத்துவர்தான் மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும்.

13) பாதிக்கப்பட்ட குழந்தையின் பெற்றோர் அல்லது குழந்தையின் நம்பிக்கைக்குரிய நபர்களின் முன்னிலையில் பரிசோதனை நடைபெற வேண்டும்.

14) மருத்துவ பரிசோதனையின் போது பாதிக்கப்பட்ட குழந்தையின் பெற்றோர் வர மறுத்தால் மருத்துவரின் பரிந்துரையின் பேரில் ஒரு பெண் முன்னிலையில் நடத்தலாம்.

# அத்தியாயம்-07

# சிறப்பு நீதிமன்றம்

## சிறப்பு நீதிமன்றம் ஏற்படுத்துதல்-

1) இச்சட்டத்தின் கீழ் வழக்கு விசாரணை விரைவாக நடைபெறும் வகையில் மாநில அரசு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசனை செய்து மாவட்டம் தோறும் சிறப்பு நீதிமன்றங்கள் ஏற்படுத்தி அரசிதழில் அறிவிப்பு வெளியிட வேண்டும்.
2) குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் சட்டம் - 2005இன் படி ஏற்படுத்தப்பட்ட சிறப்பு சிறார் நீதிமன்றம் அல்லது வேறு ஏதேனும் குழந்தைகள் பாதுகாப்புக்கென்று ஏற்படுத்தப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களும் இப்பிரிவின் கீழ் சிறப்பு நீதிமன்றமாக கருதப்படும்.
3) இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள குற்றத்தை செய்தவரை இச்சிறப்பு நீதிமன்றம் விசாரிக்கும் அதே வேலையில் குற்றவாளி குற்றவியல் நடைமுறைச் சட்டம் - 1973இன் படியும் விசாரணைக்கு உட்படுத்தப்டுவார்.
4) ஒரு நபர் குற்றம் இழைத்த அல்லது தூண்டிய அல்லது உடந்தையாக இருந்தமைக்கு இச்சட்டத்தின் பிரிவுகள் 3, 5, 7 மற்றும் 9இன் படி குற்றம் சாட்டப்பட்டிருந்தால் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி இல்லை என்று நிருபிக்கும் வரை சிறப்பு நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளியாகவே பார்க்கும்.
5) இச்சட்டத்தின்படி ஒருவர் மீது குற்றம் சாட்டப்படும் போது அவர் குற்றமிழைக்கும் மனநிலையில் உள்ளவரா என்பதை அறிய வேண்டும். அவரே தனக்கு அப்படி ஒரு மனநிலை இல்லை என்று நிருபிக்க வேண்டும்.
6) குற்றவியல் நடைமுறைச் சட்டம் - 1973 இன்படி உள்ள நடைமுறைகள் சிறப்பு நீதிமன்றத்திற்கும் பொருந்தும். (பிணை மற்றும் பிணையப் பத்திரமும் உள்ளடக்கம்).
7) இச்சட்டத்தின்படி சிறப்பு நீதிமன்றத்தில் வாதாட சிறப்பு அரசு வழக்கறிஞரை நியமித்து அரசிதழில் வெளியிட வேண்டும்.
8) சிறப்பு அரசு வழக்கறிஞராக நியமிக்கப்படுபவர் அனைத்து தகுதிகளையும் பெற்று 7 ஆண்டுகளுக்கு குறையாமல் வழக்கறிஞர் பணியை செய்திருக்க வேண்டும்.

# அத்தியாயம்-08

## சிறப்பு நீதிமன்றங்களின் நடைமுறைகள், அதிகாரங்கள் மற்றும் சாட்சியங்களைப் பதிவு செய்யும் முறை

1) இச்சிறப்பு நீதிமன்றம், இச்சட்டத்தின்கீழ் தான் அறிந்த குற்ற செயல்களை வழக்காக எடுத்துக் கொள்ள முடியும். குற்றங்கள் நிகழ்ந்ததாகக் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின் அடிப்படையில் அல்லது காவல் துறையினர் தரும் அறிக்கையின் அடிப்படையிலோ வழக்கை சிறப்பு நீதிமன்றம் எடுக்க முடியும். அதனால் குற்றம் சுமத்தப்பட்டவரை விசாரணைக்கு உட்படுத்திய பின்புதான் வழக்கை எடுக்க வேண்டும் என்ற அவசியம் எழாது.
2) சிறப்பு நீதிமன்றம் குழந்தையை விசாரிக்கும் போது சீரான இடைவெளிவிட்டு விசாரிக்க வேண்டும்.
3) சிறப்பு நீதிமன்றத்தின் நடைமுறைகள் குழந்தைகள் மைய நடைமுறைகளாக இருக்க வேண்டும். அவர்களுக்கு பயத்தை போக்கி நம்பிக்கை ஏற்படுத்துவம் வகையில் குடும்ப உறுப்பினர்கள், பாதுகாவலர், உறவினர்கள் மற்றும் நன்பர்கள் ஆகியோரை அனுமதிக்க வேண்டும்.
4) குழந்தையை வழக்கு விசாரணைக்காக தொடர்ந்து அழைக்காமல் இருப்பதை உறுதிச் செய்ய வேண்டும்.
5) வழக்கு விசாரணையின் போது குழந்தையின் மாண்பு எவ்வகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அதனால் குழந்தைகளிடம் கேட்கப்படும் கேள்விகளில் எளிமையாகவும் அவர்களின் நடத்தையை கேள்விக்குள்ளாக்காமல் இருப்பதையும் உறுதிச் செய்ய வேண்டும்.
6) சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் போதும், விசாரணை நடைபெறும் போதும் குழந்தையின் அடையாளத்தை வெளிப்படுத்தக் கூடாது.
7) பொருத்தமான சில வழக்குகளில் சிறப்பு நீதிமன்றம் கூடுதல் தண்டனையை விதிக்கும் அதே போல் உடல் மற்றும் மன ரீதியாக பாதிக்கப்பட்ட குழந்தைக்கு நேரடியாக செலுத்ததக்க வகையிலான அபராத தொகையினையும் விதிக்கும்.
8) இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றத்தை ஒரு குழந்தை (18 வயது வரை) செய்தால் இளம் சிறார் நீதிச் சட்டம்-2000ன் கீழ் விசாரிக்க வேண்டும்.
9) ஒரு குழந்தையின் வயது குறித்த சர்ச்சை வரும் போது பொருத்தமான வயது உள்ளதா அல்லது இல்லையா என்பதை சிறப்பு நீதிமன்றமே தீர்மானிக்கும்.

10) குழந்தை தரும் சாட்சியத்தை, சிறப்பு நீதிமன்றம் 30 நாட்களுக்குள் பதிவுச் செய்ய வேண்டும். சாட்சியத்தை பதிவு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டால் அதற்கான உரிய காரணங்களுடன் சிறப்பு நீதிமன்றத்தில் பதிவு செய்ய வேண்டும்.

11) நீதிமன்றத்தில் வழக்கை எடுத்து ஓராண்டுக்குள் முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

12) குழந்தை சாட்சியம் அளிப்பதை பதிவு செய்யும் போது எக்காரணம் கொண்டும் குற்றம் சுமத்தப்பட்டவர் அறிய வாய்ப்பு தரப்படல் கூடாது. அதே நேரத்தில் குழந்தை தரும் சாட்சியத்தின் முக்கிய அம்சங்களை மட்டும் வழக்கறிஞர் மூலம் குற்றம் சுமத்தப்பட்டவர் அறிந்து கொள்ளலாம்.

13) குழந்தையின் சாட்சியத்தை வீடியோ கான்பரன்சிங் மூலம் அல்லது ஒரு பக்க பார்வை உடைய கண்ணாடி மூலம் அல்லது இன்னும் பிற பொருத்தமான கருவிகள் மூலம் பதிவுச் செய்யலாம்.

14) சிறப்பு நீதிமன்றம் தனது விசாரணையை மறைவாகவும் நடத்தலாம். இம்மறைவான விசாரணையின் போது குழந்தையின் பெற்றோர் அல்லது நம்பிக்கையான நபர்கள் உடன் இருக்கலாம்.

15) சிறப்பு நீதிமன்றம், விசாரணையை நீதிமன்றத்திற்கு வெளியே நடத்த விரும்பினால் குற்றவியல் நடைமுறைச் சட்டம் - 1973இன் படி பிரிவு 284இன் படி நடத்தலாம்.

16) குழந்தையின் சாட்சியத்தை முழுமையாகப் பதிவுச் செய்ய தகுதியான மொழிப் பெயர்பாளரை நியமித்துக் கொள்ளலாம்.

17) ஒரு குழந்தை உடல் மற்றும் மன ரீதியாக பாதிக்கப்பட்டிருந்தால் அத்தகைய குழந்தைகளின் சாட்சியங்களையும் முழுமையாகப் பதிவு செய்ய இத்தகைய குழந்தைகளை கையாளும் அனுபவம் உள்ள நிபுணர்களின் உதவியுடன் பதிவுச் செய்யலாம்.

## அத்தியாயம் 9 - இதர அம்சங்கள்

1) **குழந்தை சிறப்பு வல்லுநர்களின் உதவியைப் பெறுதற்கான வழிகாட்டல்**: விசாரணைக்கு முன்பு அல்லது விசாரணையின் போது குழந்தைக்கு உதவி செய்ய அரசு சார நிறுவனங்களை சார்ந்தோர், நிபுணர்கள், தொழில்முறை வல்லுநர்கள், உளவியல் அறிஞர்கள், சமூகப் பணியாளர்கள் போன்றோரை பயன்படுத்துவதற்கு எதுவாக மாநில அரசு வழிகாட்டுதலை உருவாக்க வேண்டும்.
2) **குழந்தை சட்ட உதவிப் பெறுவதற்கான உரிமை**: குற்றவியல் நடைமுறைச் சட்டம்-1973இன் பிரிவு 301இன் படி குழந்தையின் குடும்பத்தினர் அல்லது பாதுகாவலர் சட்ட உதவி ஆணையத்தை அனுகி இச்சட்டத்தின் கீழ் நடைபெற்ற குற்றத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உரிமை உண்டு. தேவைப்பட்டால் இலவச சட்ட உதவி ஆணையத்தின் மூலம் வழக்கறிஞரை வைத்துக் கொள்ளலாம்.
3) **பிரிவு 03 முதல் 13 வரை உள்ள பிரிவுகள் சில வழக்குகளுக்கு பொருந்தாது**: பெற்றோர் அல்லது பாதுகாவலரின் சம்மதத்துடன் பிரிவு 3 முதல் 13 வரை உள்ள அம்சங்கள் குழந்தைகளுக்காக நடத்தப்பெறும் மருத்துவ பரிசோதனைகள் மற்றும் மருத்துவ சிகிச்சைகள் பொருந்தாது.
4) **மாற்று தண்டனைகள்**: இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படும் நபருக்கு வேறு சட்டத்தின் கீழ் தண்டனை கிடைக்குமானால் இதில் எது அதிகமோ அத்தண்டனையை குற்றவாளி பெறுவார்.
5) **சட்டம் பற்றிய பொது விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**: சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மத்திய, மாநில அரசுகள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்.
    a. சட்டம் பற்றிய விழிப்புணர்வை பரந்த அளவில் முன்னேடுத்து செல்ல வேண்டும். இதற்கு அச்சு ஊடகங்கள், தொலைக்காட்சிகள், வானொலிகள் மூலம் சீரான இடைவெளியில் சட்டம் பற்றிய விளம்பரங்கள் செய்ய வேண்டும். இதன் மூலம் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை குழந்தைகள், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் தெரிந்து கொள்வார்கள்.

b. இச்சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்தும் வகையில் மத்திய, மாநில அரசு ஊழியர்களுக்கு (காவல் துறையினர் உட்பட) சீரான இடைவெளியில் பயிற்சி அளிக்க வேண்டும்.

6) **சட்டம் நடைமுறைப்படுத்துவதை கண்காணித்தல்:**

a. தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ஆகியவை இசட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்கும்.

b. இச்சட்டத்தின்படி ஒரு குற்றம் நிகழ்ந்திருக்கும் சூழலில் அதனை விசாரிப்பதற்கான உரிமை தேசிய மற்றும் மாநில ஆணையங்களுக்கு உண்டு.

c. ஒவ்வொரு ஆண்டும் தேசிய மற்றும் மாநில ஆணையம் இச்சட்டம் தொடர்பான தனது செயல்பாடுகளை உள்ளடக்கிய ஆண்டறிக்கையை தயார் செய்ய வேண்டும்.

7) மத்திய அரசு இச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவம் வகையில் விதிகளை அரசிதழில் வெளியிட வேண்டும்.

8) மொழிப் பெயர்ப்பாளர், தொடர்பாளர், வல்லுநர் ஆகியோரின் தகுதிகள், விதிகள், அளிக்கப்பட வேண்டிய சம்பளம், குழந்தைகளுக்கான அவசர மருத்துவ சிகிச்சை, நஷ்ட ஈடு வழங்கல் மற்றும் இதர பிரிவுகளை கண்காணிக்கும் முறைகள்.

9) இச்சட்டத்தை நடைமுறைப்டுத்துவதில் குழப்பம் ஏதாவது ஏற்படுமானால் மத்திய அரசு உரிய மாற்றங்களை செய்து அரசிதழில் வெளியிட வேண்டும்.

- **தமிழாக்கம் எல்.பெர்னாட்**

# அரசமைப்பு உரிமைக் கல்வி ஆசிரியரின் பங்கு

# 14

*அறிவைப் புகட்டுவது மட்டும் ஆசிரியர் பணியல்ல; ஞானத்தின் வித்துக்களை இளம் இதயங்களில் ஊன்றி, வளர்த்தலே.*

*இவர்கள் மாணவர் அணியின் தளபதிகள் அல்லர்; வாழ்வின் பொருள் தேடும் பயணத்தில் மாணவரின் உடன் பயணிகள்.*

*இவர்கள் பணி கேள்வி எழுப்பும் மனோபாவத்தைச் சிதைத்திடாது, உண்மை தேடும் மனோபாவத்தை ஊக்குவித்தலே.*

*அனுபவங்களை வெளிப்படையாகச் சொல்லவிழையும் குழந்தைகள் மனங்களில் அச்சத்தை விளைவிக்காமல், அவர்களுக்குள்ளும் மற்றவரிலும் பரஸ்பர நம்பிக்கையை ஊட்டுதலே வேண்டும்.*

இவ்வழிமுறையில், ஆசிரியரின் பங்கு மகத்தானது. வயதில் மூத்தவர் என்னும் அடிப்படையில் வாழ்க்கையின் பலதரப்பட்ட அனுபவங்களை உடையவர் ஆசிரியர். மேலும், கல்வி தொடர்புடைய பல துறைகளில் அறிவு மிக்கவர். அந்தரங்கமாகவும், ஒழுக்க ரீதியாகவும் வழிநடத்தக்கூடியவர். நிர்வாக ரீதியான பொறுப்பும், செல்வாக்கும் உள்ளவர். மாணவர்களைப் பற்றி தீர்மானிக்கக் கூடியவர். மாணவர்கள் தங்கள் வளர்ச்சிக்காகவும், நலனிற்காகவும் அவர்களுடைய ஆளுமை, பங்களிப்பு, செயல்பாடு ஆகியவற்றைச் சார்ந்துள்ளனர். இந்தப் பரஸ்பர உறவுகள் அடிப்படையில் செய்யப்படும் பணிகள் அனைத்தும் அரசமைப்பு உரிமைக் கல்வியில் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தோன்றுகிறது.

அரசமைப்பு உரிமைக் கல்வியை வழக்கமாகப் பாடங்கள் போதிப்பது போல் கையாள முடியாது. ஆனால், வாழ்வை ஒட்டி இதைப் பயிற்றுவிக்க வேண்டும். எனவே, ஒரு வகையில் ஆசிரியர் அரசமைப்பு மற்றும் மனித உரிமைகளைப் போதிப்பதற்கும், பிறபாடங்களைப் போதிப்பதற்கும் இடையில் வேறுபாடு உள்ளது. ஒருவர் இயற்பியல் ஆசிரியராகப் பணியாற்றும் போது தகவல்களையும், கருத்துக்களையும் போதிக்கிறார். ஆனால், ஒருவர் அரசமைப்பு உரிமைக் கல்வி ஆசிரியராகும் போது அவர் தன்னுடைய வாழ்வின் அனுபவங்களையும், வாழ்வின் அர்த்தத்தைப் பற்றியும் பகிர்வு செய்கிறார். அரசமைப்பு உரிமைக் கல்விப் போதனை இரு வழியில் நடக்கும் பகிர்வு. மனித மாண்பு, உரிமைகள் பற்றி ஆசிரியர் தன்னுடைய அனுபவத்தை மட்டுமே பகிர்வு செய்வதல்ல. மாணவர்களும், தங்களின் சொந்த வாழ்க்கை அனுபவத்தைப் பகிர்வு செய்ய வாய்ப்பு வழங்கப்படுகிறது. மனித மாண்பும், மதிப்பும், மனிதனுக்குள் புதைந்துள்ள விதை. எனவே, மாணவர்களும்கூடத், தங்களின் வாழ்க்கை அனுபவத்தைப் பிறரோடு பகிர்வு செய்ய முடியும் எனக் கருதுகிறோம். இந்த உண்மையின் அடிப்படையில் அரசமைப்பு உரிமைக் கல்வியைப் போதிக்கும் பணியில் ஈடுபடும் ஆசிரியருக்குச் சிறப்புப் பங்களிப்பை உருவாக்கியுள்ளோம்.

*இச்சிறப்புப் பங்களிப்பு வாழ்வின் அர்த்தத்தைக் கண்டு பிடிக்கும் பயணத்திலும், வாழ்வில் நிறைவடைவதிலும் ஆசிரியர் மாணவர்களுடன் சேர்ந்து கூட்டாளியாகப் பயணம் செய்ய வேண்டும் என்பதே. கூட்டாளிகள் என்ற வகையில் ஆசிரியரும், மாணவரும் ஒருவருக்கொருவர் வாழ்வைப் புரிந்து கொள்ளத் தங்கள் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். பரஸ்பரமாக மாற்றுருவாக்க செயல்முறையில் இறங்க வேண்டும். அதாவது ஆசிரியர் புதிய வழிமுறைகளைக் கையாண்டு இதை நிறைவேற்ற வேண்டும். புதிய வழியில் செயல்பட்டுச் சில சவால்களைச் சந்தித்து வெற்றி கொள்ள வேண்டும்.*

*ஒரு ஆசிரியர் புதிய வழியில் தன்னைக் காண்பதற்கு மனிதத் தன்மையோடு உணர்வும் உள்ளவராக இருக்க வேண்டுவது அவசியம். அவர் தன்னுடைய சொந்த வாழ்வில் மாண்பு, மதிப்பீடுகளைக் காப்பவராக இருந்தால் மட்டுமே இது சாத்தியம். இது மாண்பையும், பிறரின் மதிப்பையும் ஏற்று கொள்ளவும், அங்கீகரிக்கவும் வழி வகுக்கும். ஆசிரியர் தன்னை ஒரு புதிய மனிதராகக் காட்டுவதற்கு எப்படி நடக்க வேண்டும்? இச்சிறப்பு பணியை நிறைவேற்ற என்ன திறமைகள் வேண்டும்? இப்புதிய பணியை நடைமுறையில் செயல்படுத்திக் காட்டச் சந்திக்க வேண்டிய குறிப்பிடத்தக்க சவால்கள் என்ன?*

*சில முக்கியமான நடத்தைகள், திறமைகள், செயல்பாடுகள் போன்றவற்றைப் பட்டியலிட முயற்சித்தோம். அவைகள் பின்வருவன:*

## *அணுகு முறைகள்*

### ***ஒளிவு மறைவின்மை:***

*இளைஞர் அல்லது முதியவர், ஆண் அல்லது பெண், அழகானவர், மாநிறம் அல்லது கறுப்பு நிறம் என்ற எந்தப் பாகுபாடும் இல்லாமல் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் நற்குணங்கள் இருப்பதால் அவற்றை வெளிப்படுத்தும் நடவடிக்கைகளும் உள்ளன. முன்பே தீர்மானிக்கப்பட்ட எண்ணங்களுக்கும், முன்தீர்மானங்களுக்கும் இங்கு இடமில்லை. தோற்றங்களைக் கொண்டு எடைபோடாமல், மாண்பு மற்றும் சுயமதிப்பு ஆகியவற்றிற்கான மனித வாழ்வின் ஏக்கத்துடிப்பை விடாப்பிடியாகத் தொடர்ந்து கண்டறிவது.*

### ***திறன் வளர்த்தல்:***

*ஒருவரின் வாழ்வை காப்பதற்காக வேறொருவர் வன்முறையில் இறங்குவது, ஏதாவது தீங்கு செய்ய நினைப்பது ஏதாவது செய்து அவரின் உயிரைக் காப்பது போன்ற நடத்தை ஒரு மனோபாவம் ஆகும். பிறரையும் தன்னைப் போல் ஒருவராகப் பார்க்கும் மனோபாவம் இது. பிறரும் ஒரு மனிதராக வளர உரிய இடம் வழங்கவும், நேர்மறையாகச் சிந்திக்கவும் இது வழிவகுக்கிறது.*

### ***நம்பிக்கை:***

*மனித உறவு ஏற்கெனவே பின்னப்பட்ட ஒன்றல்ல. அதைக் கண்டறிய வேண்டும். உரமூட்ட வேண்டும். வளர்த்தெடுக்க வேண்டும், மேம்படுத்த வேண்டும். ஆழப்படுத்த வேண்டும். இந்த அணுகுமுறையில் நம்பிக்கையூட்டும் நடத்தைகள் அடிப்படையானவை. மனித மாண்பு மற்றும் உரிமைகள் பொருத்தமட்டில் இவை மிக முக்கியமானவை ஒவ்வொரு*

*மனிதனுக்குள்ளும் உள்ள மிக உயர்ந்தவை எது? ஒவ்வொரு மனிதனுக்கும் விலை மதிப்பற்றவை எவை? என்பதை மனித மாண்பும், உரிமைகளும் கையாளுகின்றன. மாண்பு மற்றும் உரிமைகள் குறித்த கண்ணோட்டத்திலிருந்து குழந்தைகளுடன் ஒருவர் உறவு வைத்துக் கொள்ளும் போது மீண்டும் இது மிக அவசியமாகிறது. ஆசிரியரிடம் மாணவர்களுக்கு உள்ள நம்பிக்கை காரணமாக மனித வாழ்வின் பல அம்சங்கள் பற்றி அவர்களுக்கு எழும் கேள்விக்குரிய விடையை ஆசிரியரிடமிருந்தே பெற விரும்பக் கூடும். அப்போது ஆசிரியரை அவர்கள் வழிகாட்டியாகவும், துணையாகவும், எண்ணக்கூடும். இந்நம்பிக்கையின் அடிப்படையிலே அவர்கள் ஆசிரியர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள். எனவே, அவர்கள் புரிதலை எதிர்பார்க்கிறார்கள். நம்பிக்கையை ஏற்று கொண்டிருக்கிறார்கள்.*

***<u>எளிமை:</u>***

*குழந்தையின் உலகத்தைப் புரிந்து கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும். அதற்கு அவர் குழந்தையைப் போலக் குழந்தைகளாக மாறினால் மட்டுமே இவ்வுலகிற்குள் நுழைய முடியும். எனவே, ஆசிரியர் குழந்தையைப் போல எளியவராக மாற வேண்டியது அவசியம். குழந்தைகளின் உலகை அவர் அறிந்து கொள்ளுதல், அவர்களின் கேள்விகளைப் புரிந்து கொள்ளுதல், உணர்வுகளை அறிதல், ஏக்கங்களை அறிதல், மாண்பை மதித்தல், அவர்களின் எல்லைகளை ஏற்று கொள்ளுதல், வாழ்வின் அர்த்தத்தைக் கண்டறியும் பயணத்தில் அவர்களோடு துணையாக இருத்தல் போன்றவற்றைக் கடைபிடிப்பதன் வாயிலாக ஆசிரியர் குழந்தை போல எளியவராக முடியும்.*

***<u>ஜனநாயகத்தன்மை:</u>***

*சமூகத்திலும், ஏன் இயற்கையிலும்கூடப் பன்மைத் தன்மை பல்வேறு மட்டங்களில் உள்ள சிறப்பம்சம் ஆகும். நிறம், சாதி, பண்பாடு, பால்வேறுபாடு, இனம், தேசியம், புவியியல் வேறுபாடு, அனுபவங்கள், அபிப்பிராயங்கள், எண்ணங்கள் ஆகிய பல மட்டங்களில் பன்மைத் தன்மை நிலவுகிறது. மனித மாண்பிற்கும் உரிமைகளுக்குமான ஏக்கம் அனைத்து மனிதர்களுக்கும் அடிப்படையில் பொதுவானவை. இப்போக்குகள் குழந்தைகளைப் பொருத்தமட்டில் வேறுபடலாம். எல்லைகள் விதிக்கப்படலாம். வேற்றுமைகளின் வெளிப்பாட்டுக்கு ஜனநாயக நடவடிக்கையே சாதகமானது. தொடர்ந்து செயல்படக்கூடியது. இது இவ்வேறுபாடுகள் சந்திக்கும் பொதுவான அம்சத்தைக் கண்டறியும் முறையாகும். உண்மையில் மனித உரிமைகள் மீதுதான் ஜனநாயகம் கட்டப்பட்டுள்ளது. மனித உரிமைகளை மறுத்தால் ஜனநாயகத்தின் செயல்பாட்டில் ஓட்டை விழுந்து விடும்.*

***<u>உறுதி:</u>***

*வாழ்வின் சில அடிப்படை எதார்த்தங்கள் தொடர்பான, ஆசிரியரின் நம்பிக்கைகளை இது குறிக்கிறது. அதாவது, மனித மாண்பு, உரிமைகள் பற்றிய அவரின் திடநம்பிக்கை. குறிப்பாகப், பாலியல் உரிமைகள், தலித் உரிமைகள், மக்களாட்சி, சமூகத்தின் பன்மைத் தன்மை ஆகியன பற்றிய ஆசிரியரின் திடநம்பிக்கை, சிந்தனைத் தெளிவு, தகவல் அறிவு, கருத்துக்கள் ஆகியவற்றில் உள்ள திடநம்பிக்கையைக் குறிப்பிடலாம். சமூகப் போக்குகளிலும், பிரச்சினைகளிலும் ஒருவர் எடுக்கும் பொது நிலைப்பாடு, மனித மாண்பு, உரிமைகள் செயல்பாட்டில் அவருடைய ஈடுபாடு ஆகியவற்றில் உறுதித்தன்மையின் பார்வை விரிவடைகிறது.*

**பரிவு:**

*இது வாழ்வின் அடிப்படைகளில் மிக முக்கியமான ஒன்று. குறிப்பாக, மனித வாழ்வில் மாண்பும், உரிமைகளும் மறுக்கப்பட்டோர் மீது கொள்ளவேண்டிய உணர்வு. பரிவுடைய மனிதன் வாழ்வை மதிக்கவும், வளர்க்கவும், பாதுகாக்கவும், மேம்படுத்தவும் தெரிந்தவன். ஒருவரின் உயிருக்குத் தீங்கு நேரும் போது அவர் மீது ஏற்படும் இப்பரிவுணர்வு தோழமையையும், சகமனித உணர்வையும் ஏற்படுத்துகிறது. எனவே, பரிவு என்பதன் பொருள் ஒருவரின் "துயரத்தை உணர்தல்" ஆகும். வாழ்வை நேசித்தால் மனித வாழ்வாக இருந்தாலும் அல்லது இயற்கை வாழ்வாக இருந்தாலும் அவர் துயரத்தை உணர விரும்ப வேண்டும்.*

**ஒழுக்கம்-ஆன்மீகம்:**

*நீதி, உண்மை, சமத்துவம், சுதந்திரம் போன்ற மதிப்பீடுகள் மனித மாண்பு, அடிப்படை உணர்வுகள் ஆகியவை பற்றிய நம் விழிப்புணர்வை உயர்த்தக் கூடியவை. ஓர் ஆசிரியர் இம்மதிப்பீடுகளை வளர்ப்பதில் ஈடுபாடு கொண்டால் அதையே மாணவர்களுக்கு உணர்வூட்டும் ஒரு வலுவான ஆதாரமாக்க முடியும். இவர்கள் தங்கள் வாழ்வையும், வருங்காலத்தையும் உருவாக்கும் மாதிரிக்காக இளமைப் பருவத்தில் ஏங்கி நிற்கின்றனர்.*

## திறமைகள்

**உற்று நோக்குதல்:**

*நேரடி வாழ்க்கை அனுபவத்தின் வழியாகவும் அல்லது தகவல் தொடர்பு சாதனங்களின் வழியாகவும் (செய்தித் தாள்கள், தொலைக்காட்சி) அன்றாட வாழ்வில் நிகழும் மனித உரிமை மீறல்களை அல்லது காக்கின்ற உறுதியைக் கண்டறியும் திறன் கொண்டவராக ஆசிரியர் இருக்க வேண்டும். இது வகுப்பில் மாணவர்களுக்குப் போதிய தகவல்களைத் திரட்டித் தரவும், கூடுதல் தகவல் வழங்கவும், விவாதங்களை வழிநடத்தவும் நிறைகுறைகளைப் பற்றி கூறவும் அவருக்கு உதவும். மேலும், மாணவர்களின் பின்னணியையும், அவர்கள் அனுபவங்கள் வாயிலாக என்ன கூறுகிறார்கள் என்பதையும் உற்று நோக்கி அவர்களுக்கு நன்கு புரியும் வகையில் நிறைகுறைகளை எடுத்துக் கூறி ஞானத்தோடு வழி நடத்த வேண்டும்.*

**பகுப்பாய்வு:**

*தகவல்கள் மற்றும் அனுபவங்கள் மூலம் பெறப்பட்டவைகளிலிருந்து, விளைவுகளையும், பாதிப்புகளையும் கண்டறியவும், அவற்றிற்கிடையில் நிலவும் உறவுகளை அறியவும்; தோற்றங்களிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கவும்; ஆசிரியருக்குப் பகுப்பாய்வுத் திறன் அவசியம். இது மனித உரிமை நிகழ்வுகள், சம்பவங்கள் மீது மாணவர்கள் தங்கள் பார்வையை நிறுவவும், ஆசிரியர் விமர்சிக்கவும் வழிநடத்தவும் உதவும்.*

**தொகுத்துரைத்தல்:**

*பகுப்பாய்வுக்குப் பிறகு வரும் தொகுத்துரைத்தல் கருத்துகள், தகவல்கள், அனுபவங்கள் ஆகியவற்றைத் தொகுத்துப் பொதுக் கருத்துக்களையும், முறைகளையும், சூழல்களையும், வருங்காலத் திட்டங்களையும் உருவாக்க உதவுகிறது. மனித உரிமைகளைப் புரிந்து கொள்ள*

ஒட்டு மொத்தச் சித்திரத்தை வழங்குகிறது. சமத்துவம், சுதந்திரம், நீதி போன்ற அடிப்படை மதிப்பீடுகளிலிருந்து பார்வை பெறும் போது, தொகுத்துரைத்தலுக்கு வாழ்வின் கண்ணோட்டம் தேவை. இது அர்த்தமுள்ள வாழ்விற்கு மிக அவசியம்.

## அறியும் திறன்:

இது உள்ளுணர்வு மற்றும் உள்ளறிவு ஆகியவற்றால் அடைய வேண்டிய ஒன்று. இது உற்று நோக்குதல், கூர்மையாகக் கவனித்தல் ஆகியவற்றின் பயனாக உருவாகக்கூடியது. கவனத்தைக் குவிப்பதன் மூலம் மனதை ஒழுங்குபடுத்துவதாகும். இத்திறமை உடையவர் அல்லது இதில் பயிற்சி மிக்கவர் உணர்வுகளுக்கு அப்பால் உள்ளதை அறியக் கூடியவர் ஆவார். எதார்த்தத்தின் சாராம்சத்தை அறிபவர் ஆவார். மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட சூழலில் இருப்பதால் மனித உரிமை நிகழ்வுகளில் மறைந்து கிடக்கும் அர்த்தத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் உள்ளுணர்வும், உள்ளறிவும் கொண்ட ஆசிரியரோடு சேர்ந்து இந்த அர்த்தத்தைக் கண்டறிய முடியும். அவர்கள் எதைக் கண்டறிய விரும்புகிறார்களோ அதன்படி வழிகாட்ட முடியும்.

## படைப்பாற்றல்:

ஆர்வமூட்டவும், நிலையான உற்சாகமூட்டவும், மனித உரிமை வடிவங்களைப் பற்றி போதிக்கவும், ஆசிரியர் போதிய படைப்பாற்றல் கொண்டவராக இருக்க வேண்டும். படைப்பாற்றல் மிக்க வழிமுறைகளைக் கையாளத் தெரிந்திருக்க வேண்டும். மாற்று வழிகளையும் அறிந்திருக்க வேண்டும். மாணவர்களின் பின்னணியையும், திறனையும் சார்ந்து பாடத்திட்டத்தின் பொருளையும், வழிமுறைகளையும் தேர்வு செய்ய வேண்டியது அவசியம். எனவே, ஆசிரியர் பாடத்தில் கொடுத்துள்ளவற்றை - அதாவது கதைகள், நிகழ்வுகள், சம்பவங்கள், மேற்கோள்கள், கவிதைகள், சிறுசம்பவ விளக்கங்கள், வாழ்க்கை வரலாற்று சித்திரங்கள், வகுப்பறை மற்றும் வீட்டுப் பயிற்சிகள் ஆகியவற்றைப் பாடமாக்கப் பயன்படுத்துவதோடு மட்டும் நின்று விடக் கூடாது. பாடத்திட்டத்தை முழுமையாகப் பயன்படுத்துவதற்கான சுதந்திரம் கொண்டவராகவும், கற்பனைத் திறன் உடையவராகவும் அவர் இருக்க வேண்டும். இதுவே மாணவர்களிடமிருந்து மிகுதியான நற்பயன்களையும், விளைவுகளையும் உருவாக்கும்.

## தெளிவான பேச்சு:

ஆசிரியர் பல்வேறு மட்டங்களில் தன்னை வெளிப்படுத்தக் கூடியவராக இருக்க வேண்டும். உணர்வுகளையும், எண்ணங்களையும் வெளிப்படுத்தவும், தகவல்களையும், அதன் மதிப்பீட்டையும் பகிர்வு செய்யவும். எழுதவும், பேசவும், கலைத்திறமைகளைப் பயன்படுத்தவும், ஒருவரின் நடத்தையையும் வாழ்க்கை முறையையும் வழிநடத்தவும், சமூகக் கண்ணோட்டத்தையும் வாழ்வின் குறிக்கோளையும் தெளிவாகக் கூறவும். அவருக்குத் திறன் இருக்க வேண்டியது அவசியம். அதாவது ஒருவரின் ஆளுமை வழியாகத் தொடர்பு கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும். மனித மாண்பே ஒவ்வொரு மனிதனின் மனவிருப்பம். இதை ஒருவரின் ஆளுமை வழியாக மற்றவருக்கு வெற்றிகரமாகத் தெரியப்படுத்தினால் வாழ்வில் இன்பத்தையும், திருப்தியையும் கண்டடைவார்.

## கலை உணர்வு:

மனித உரிமை விழிப்புணர்வு என்பது வெறும் அறிவு சார்ந்த ஒன்றல்ல. இது கலைநயம் மிக்க பணி. குயவன் அழகுணர்வுடன் செய்யும் வேலை போன்றது அல்லது ஒரு தாய் தன் மகவை

*ஊட்டி வளர்த்து பாலபருவத்தை கடக்கச் செய்தல் போன்றது. குயவனுக்கு மண் ஒரு உயிரற்ற பொருள் அல்ல. ஆனால், அவனுடைய கற்பனை திறனுக்கு ஏற்ப வளைந்து, நெளிந்து உயிர் பெறும் பொருளாகும். சிற்பி ஒரு கல்லில் உயிர்துடிப்புள்ள சிலையைச் செதுக்குவது போன்ற பணி இது. ஒரு தாய் கற்பனைகளோடு தன் மகவைப் பராமரித்து ஆளாக்குவது போன்றது. அரசமைப்பு உரிமைக் கல்வியின் நோக்கம் இறுதியாக ஒவ்வொருவருக்குள்ளும் மனிதத்தை மலரச் செய்தலே. தகுந்த கவனம் மட்டுமே ஒரு குழந்தைக்குள் மனித நேயத்தை வளர்த்தெடுக்க உத்தரவாதம் அளிக்கும்.*

## ***பணிகள்***

*இக்கல்வியைப் போதிக்கும் ஆசிரியருக்குத் தேவையான திறமைகள், நடத்தைகள் முதலியவற்றைப் பெறச் செய்யப் பின்வரும் செயல்பாடுகளைச் செய்தால் எளிதாக இருக்கும். இத்திறமைகள், நடத்தைகள் ஆகியவற்றின் இணைப்பில் இச்செயல்பாடுகள் அமைந்துள்ளன.*

### ***சாதனையாளர்:***

*மனித மாண்பு ஒவ்வொரு ஆண், பெண், குழந்தை ஆகியோரிடம் இயல்பாகவே உள்ளது. இதை மாணவர்கள் கண்டறிய உதவி செய்தல், அவர்கள் விழிப்புணர்வை ஆழப்படுத்துதல் ஆகியவைகளே ஆசிரியர் பணிகள். பல்வேறு வாய்ப்புகளை வழங்குதல் அல்லது அடையாளம் காட்டுதல் ஆகியவையே இப்பணியை நிறைவேற்றக் கூடியவை. மாணவர்களின் சொந்த அனுபவங்களை நினைவுபடுத்துதல், செய்தித்தாள்களை வாசித்தல், தொலைக்காட்சி நாடகத் தொடர்களையும், நிகழ்ச்சிகளையும் பார்த்தல், நாட்டுப் பாடல்கள் அல்லது சினிமா பாடல்களைக் கவனித்தல், நிகழ்ச்சிகள், சம்பவங்கள், வாழ்க்கை வரலாற்று சம்பவங்கள் போன்றவைகளை விவரித்தல், நூல்களை மனித உரிமை போக்கோடு இணைத்துப் படிக்க உதவுதல், அவர்களின் ஆர்வத்தைத் தூண்டுதல், கேள்விகள் எழுப்பச் செய்தல், கண்ணோட்டத்தை விரிவடையச் செய்யும் பார்வையிடல்களை (Exposure Visits) அமைத்துக் கொடுத்தல், படைப்பாற்றல்மிக்க படங்கள் வரைய ஊக்கப்படுத்துதல் முதலிய பணிகளைச்செய்யலாம்.*

### ***ஊக்குனர்:***

*விழிப்புணர்வில் வாழ்வை பிணைத்தல், மாணவர்கள் மனித மாண்பையும், உரிமைகளையும் புரிந்து கொள்ளச் செய்தல் ஆகியவையே ஊக்குனர் பணி என ஒரு வகையில் பொருள் கொள்ளலாம். ஒவ்வொரு பாடத்தையும் நடத்தும் வேளையில் வகுப்பில் உள்ள ஒவ்வொரு மாணவரையும் பங்கேற்கச் செய்தல் என வேறொரு வகையில் பொருள் கொள்ளலாம். சில மாணவர்கள் மட்டும் பங்கேற்கும் முறைகளைத் தவிர்த்து அனைத்து மாணவர்களையும் பங்கேற்கச் செய்ய வேண்டும்.*

### ***கல்வியாளர்:***

*Educator எனும் ஆங்கிலப் பதத்தின் (Educare - வெளிக் கொணரல், மறைந்து கிடக்கும் ஆற்றலை மேம்படுத்தல்) என்பதன் பொருளுக்கு ஏற்ப அடிப்படை மனித உரிமை விழிப்புணர்வையும், அறிவையும் மாணவர்களிடமிருந்து வெளிக் கொணர்தல் அல்லது எழுப்புதல் பணியை ஆசிரியர் நிறைவேற்ற வேண்டும். இவ்வகையில், தன்னுள்ளும், பிறரிடத்திலும் மாண்பைக் கட்டியெழுப்புவதில் அதைக் கண்டறிவதில் ஆசிரியருடன் சக*

பங்களாளிகளாக அவர்கள் மாற வேண்டும். இவ்வகையான கற்பிக்கும் முறையில் அவர்கள் உதவியாளர்களாகவும், ஆய்வுப் பொருளாகவும் இருக்க வேண்டும். பிறரின் மதிப்பு, இயற்கையின் முக்கியத்துவம் உள்ளிட்ட வாழ்க்கை மதிப்பீடு பற்றித் தெளிவான, நிலையான உடன்பாட்டுக்கு வரவேண்டும்.

## ஒருங்கிணைப்பாளர்:

இத்திட்டப்பணியில் ஆசிரியர் பல்வேறு மட்டங்களில் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்ற வேண்டும்.

(1) ஜனநாயக வழிமுறைகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு மாணவரும் தன் கருத்தை எழுத்து, பேச்சு அல்லது படங்கள் அல்லது பிற வகையில் வெளிப்படுத்த வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டும். இதில் மாணவர்களுக்குத் தரவேண்டிய கருத்துக்கள், அவர்களிடமிருந்து வெளிவரும் கருத்துக்கள் போன்றவற்றை ஆசிரியர் தொகுக்க வேண்டியது அவசியம்.

(2) சிறு குழுக்களுக்குள் அல்லது வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களுக்குள் அல்லது பேட்டி எடுக்க வெளிச் செல்லும் மாணவர்க்குள் பார்வையிடலுக்காகவும் (Exposure Visit) பிரிந்து செல்லும் குழுக்களுக்குள் “நாம் எனும் உணர்வைக்” கட்டியெழுப்ப வேண்டும். ஒற்றுமை உணர்வை வளர்த்தெடுக்கும் பயிற்சிகளைக் கொடுத்து வருங்காலத்தில் மனித உரிமைப் பணிகளில் குழுவாகச் செயல்படும் மதிப்பீட்டை இப்போதே வளர்க்க வேண்டும்.

(3) நலிவுற்ற சமூகக் குழுக்கள் பிரிவினையால் அல்லல்படும் குழுக்கள் ஆகியோரின் மாண்பு, உரிமைகள் போன்றவற்றைப் பற்றி மாபெரும் விழிப்புணர்வை ஊட்டுவதன் வாயிலாக மாணவர்களை இம்மக்களுடன் ஒருங்கிணைப்பை உருவாக்க இக்கல்வி முயல்கிறது. காலப்போக்கில், இக்குழுக்கள் சமூகத்தின் ஓட்டத்தில் கலந்திட இளைஞர் சமுதாயம் பணியாற்ற முன்வரும் வகையில் அவர்களுக்குக் கருத்தூட்ட வேண்டும்.

## நோக்கம் வளர்ப்பவர்:

நற்கருத்துக்களை ஊட்டுவதற்கு மாணவர்களின் இளம் பருவமே சிறந்தது. இக்கல்வி வழங்கும் மனிதாபிமானக் கண்ணோட்டம் அவர்கள் வாழ்க்கைக்கு ஒரு நோக்கத்தை வழங்குகிறது. இந்நோக்கத்தை வழங்கும் பொறுப்பு ஆசிரியருடையது. மாணவர்களுக்கு அவர்களே ஒரு முன்மாதிரியாக இருக்க முடியும். மனித உரிமைகளின் நற்பயன்களுக்காக உழைத்து, வாழ்ந்த வரலாற்றின் முக்கிய நாயகர்களைப் பற்றி எடுத்துக்கூறி அவர்களின் இளமைப் பருவத்திலேயே ஒரு படிமத்தை உருவாக்க முடியும்.

## வழிகாட்டி:

மனித மாண்பின் தேவை மாணவர்களின் உள்ளத்தைத் தொட்டு விட்டால், அவர்கள் மனித உரிமையில் அக்கறை கொண்ட பணியிலும், பிரச்சினைகளிலும் சந்தேகமின்றி, ஆர்வத் துடிப்போடு இறங்குவார்கள். சுதந்திரம், அச்சமின்மை, நட்பு ஆகிய சூழல்களில் இச்செயல்பாடுகள் படைப்பாற்றலுடனும், சமயோசிதத்துடனும் இருக்கும். ஒரு வழிகாட்டி என்ற வகையில் ஆசிரியர் இத்தகையச் சூழலுக்கு உறுதியளிக்க வேண்டும். சோர்வுற்றவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்க வேண்டும். நலிவுற்றோரின் பரிதாபமான மனித உரிமை சூழல் மீது கவனம் செலுத்தும்

வேளையில், மாணவர்களின் இதயங்களிலும், சிந்தனைகளிலும் உருவாகும் படைப்பாற்றல் திறனையும் சரியான வழியில் திசை திருப்ப வேண்டும். வழிகாட்டியாக இருப்பது முக்கியம் மட்டுமல்ல. அதேவேளை அது ஆசிரியருக்குச் சவாலும் மிகுந்ததாகும்.

## <u>தனிப்பட்ட மற்றும் சமூகச் செயல்பாடு</u>

மாற்றுருவாக்க கல்வி வட்டத்தில் *(Hermeneutic Transformative Circle)* இது கடைசி "பணி" இவ்வட்டத்தில் இடம் பெற்றுள்ள இக்கடைசி பணியில் மாணவர்களால் கற்றுக் கொள்ளப்பட்ட அனுபவங்களின் இறுதி முடிவுகளே இங்கே மாற்றுருவாக்கம் எனக் குறிப்பிடப்படுகிறது. குடும்பம், அண்டை அயலார்கள், பள்ளி அல்லது சமூகம் உள்ளிட்ட சமூக நடவடிக்கைகளில் நிகழ்ந்துள்ள மாற்றங்களின் மீது அவர்களின் பள்ளி வாழ்க்கையில் அல்லது வயது வந்த பருவத்தை அடைந்த போது தாக்கம் செலுத்திய விருப்பங்களை இது குறிக்கிறது.

மாணவர்களின் உடனடி சமூக நடவடிக்கைகளைப் பொருத்தமட்டில், சில பாடங்களில் உள்ள செயல்பாட்டு பயிற்சிகள் சமூகத்தில் மனித உரிமைகளை எப்படிப் பாதுகாக்க முடியும்? எப்படி மேம்படுத்த முடியும்? என்று திட்டமான யோசனைகளை அவர்களிடமிருந்து வரவேற்கிறது. அனைத்துப் பாடங்களிலும் உள்ள இம்மாதிரி பயிற்சிகளை அவர்கள் செய்வதற்கு ஆசிரியர்கள் மிகுந்த வாய்ப்புகளை வழங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், மாணவர்கள் இவ்வாலோசனைகளை திடமான செயல்பாடுகளாக மாற்றியமைக்க ஆசிரியர்கள் ஊக்கப்படுத்த முடியும். அப்போது தான் அவர்கள் தங்கள் விருப்பத்தை எதார்த்தத்தில் செயல்படுத்தக் கூடியவர்களாக ஆவார்கள். அவர்களின் இளமைப் பருவத்தின் காரணமாக அனுபவம் மற்றும் திறன் ஆகியவை குறைவாக இருப்பதால், அவர்கள் செயல்பாடும் குறைவாகவே இருக்கும் என்பது வெளிப்படை. சமூக மாற்றத்திற்கான அவர்களுடைய செயல்பாடுகளின் சிறப்பு - அதன் நோக்கமும், விளைவும் என்னவாக இருந்தாலும்கூடக் - குறைக்கப்படக் கூடாது. அவர்கள் வாழும் சூழலில் பாதிப்பு ஏற்படுத்தும் சில மாற்றங்களை அவர்கள் செயல்பாடுகள் முடுக்கி விடும், அதே நேரத்தில் அவர்களுக்குள்ளும் ஒரு மாற்றத்தையும் கொண்டு வரும்.

ஒரு மாணவர் இவ்வட்டத்தின் கடைசிக் கட்டத்தை ஒரு முறை அடைந்து விட்டால், ஏற்கெனவே அவர்களுக்குக் கிடைத்த பயிற்சிகள் வாயிலாகக் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு மாற்றத்திற்கான சில புதிய வழிகளைக் கண்டறியக் கூடும். இதை முழுமையாக அடையாமல் போனால், அதை எட்டப் பின்வருவன தேவைப்படலாம். இவற்றையொட்டிச் சில கேள்விகளை எழுப்பி இக்கல்வி மாணவர்களிடத்தில் என்ன விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதைக் கணிக்க வேண்டும்.

### <u>விழிப்புணர்வு:</u>

மாணவர் தன் மாண்பைப் பற்றியும், தன் சொந்த உரிமைகள் பற்றியும், பிறர் உரிமைகளுக்காக அவர் செய்ய வேண்டிய கடமைகள் பற்றியும் விழிப்புணர்வு அடைந்துள்ளாரா? எந்த நிலைகளில்? அறிதல், உணர்தல், நடத்தைகள், மதிப்பீடுகள்? எதைப்பற்றி? தன்னுடைய சொந்த உரிமைகளைப் பற்றியா? பொதுவான பிறரின் உரிமைகள் பற்றியா? நலிவுற்ற, பிரிவினையால் பாதிக்கப்பட்ட சமூகக் குழுக்களின் உரிமைகள் பற்றியா?

## *உற்று நோக்கல்:*

*மாணவரின் கவனம் எப்படி உள்ளது? செய்தித் தாள்கள், ஒலி, ஒளி, தகவல் சாதனங்கள், குடும்பம் மற்றும் நண்பர்களின் அனுபவங்கள், பள்ளி பாடநூல்கள் ஆகியவற்றில் அவரின் கவனம் எப்படி உள்ளது? அவருடைய கவனிக்கும் ஆற்றலின் அளவு என்ன?*

## *அறிவு:*

*கல்வியை போதிக்கும் காலத்தில் மாணவர்கள் மனித உரிமைகள் தொடர்பாக என்ன தகவல்கள், சிந்தனைகள் பெற்றனர்? அவற்றில் இதுவரை என்ன வகையான தெளிவு பெற்றுள்ளார்கள்? மனித உரிமைகள் பற்றி எவ்வகை நம்பிக்கைகளைக் கட்டி எழுப்பி உள்ளனர்?*

## *விமர்சனப் பார்வை:*

*தங்களாலும், பிறராலும் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களின் மீது விமர்சனப் பார்வையை எவ்வாறு மேம்படுத்தி உள்ளனர்? மனித உரிமை மீறல்கள் பற்றிக் கேள்வி எழுப்பக் கற்றுக் கொண்டுள்ளார்களா? சுதந்திரமாகத் தங்கள் கருத்தைத் தெரிவிக்க அவர்களால் முடிகிறதா?*

## *படைப்பாற்றல்:*

*படங்கள், ஓரங்க நாடகங்கள், எழுத்து ஆகியவற்றின் வாயிலாக மனித உரிமைகளுக்கான சூழலைக் கற்பனையோடு சித்தரித்து வழங்க முடிகிறதா? இவற்றின் மூலம் அவர்கள் கற்றுக் கொண்டவற்றை எந்த அளவுக்கு வெளிப்படுத்த முடிகிறது? மனித உரிமை மீறல்களுக்கான தீர்வை என்ன மாதிரிப் படைப்பாற்றலில் வெளிப்படுத்துகின்றனர்? அல்லது தங்கள் பள்ளிக்கூட வளாகத்திற்குள்ளும், சமூகத்திற்குள்ளும் மனித உரிமைக் கலாச்சாரத்தை படைப்பாற்றலின் எந்த நிலையில் வெளிப்படுத்துகின்றனர்?*

## *தோழமை:*

*வகுப்பில் அல்லது குழு ரீதியான பணிகளைச் செய்யும் போது எந்த நிலைகளில் ஒற்றுமை நிலவுகிறது? சாதி, பால்வேறுபாடு, அந்தஸ்து, செல்வம், நிறம் உள்ளிட்ட பாகுபாடுகள் நிலவும் சமூகச் சூழலில் ஒருவரையொருவர் மதித்திடவும், புரிந்து கொள்ளவும், ஏற்று கொள்ளவும் மனித உரிமை விழிப்புணர்வு எந்த அளவிற்குத் தயார்படுத்தி உள்ளது? ஏழைகள், நலிவுற்றோர் ஆகியோரை எந்தளவுக்கு நேசிக்கிறார்கள்? உதாரணமாகக் குழந்தைத் தொழிலாளர்கள், பால் பாகுபாட்டினால் பாதிக்கப்பட்ட சிறுமிகள், தாழ்த்தப்பட்டவர்கள், பள்ளியில் உள்ள கடைமட்ட பணியாளர்கள், வீட்டு வேலை செய்யும் பெண்கள் போன்றவர்களை எந்தளவுக்கு நேசிக்கிறார்கள்? இப்பாதிக்கப்பட்ட சமூகக் குழுக்களின் மாண்பைப் பாதுகாக்கவும், அதற்காகப் போராடவும், மேம்படுத்தவும் தானும் ஒரு மனிதன் என்ற வகையில் அவர்களின் கடமையை எவ்வழியில் நிறைவேற்றுகிறார்கள்?*

## *ஜனநாயகம்:*

*ஒவ்வொரு தனிமனிதனுக்குள்ளும் ஒவ்வொரு உயிரினத்திற்குள்ளும், உயிரற்ற பொருட்களுக்குள்ளும், ஒவ்வொரு மொழிக்குள்ளும், ஒவ்வொரு பண்பாட்டிற்குள்ளும் நிலவும் ஒற்றுமை பண்புகளை மாணவர்கள் அங்கீகரிக்கிறார்களா? ஒவ்வொருவருடைய*

*கண்ணோட்டத்தின் முக்கியத்துவத்தைக் கண்டு அவர்கள் மதிக்கிறார்களா? மற்றவர்களின் கருத்தைக் கவனிக்கும் திறனை அவர்கள் எவ்வழிகளில் மேம்படுத்திக் கொள்கின்றனர்? அழிக்கும் பிரிவுக்கும், ஆதிக்கம் செலுத்தும் பிரிவுக்கும் இடையில் உள்ள வேற்றுமைகளைக் கண்டறிய முடிகிறதா? பன்மைத் தன்மைகளையும், சிக்கல்களையும் கண்டறிய முடிகிறதா? இக்கண்ணோட்டங்களுக்கு இடையே நிலவும் முரண்பாடுகளை எவ்வாறு கற்றுக் கொண்டுள்ளனர்? முரண்பட்ட கண்ணோட்டங்கள் மற்றும் ஆளுமைகள் நிலவும் சூழலில், அவர்களுக்குள் ஒப்பு கொள்ள முடியாத நிலை இருக்கும் போது எப்படி இசைவான சூழலை உருவாக்குவார்கள்?*

**<u>உணர்வு:</u>**

*பாடங்களில் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தும் போது என்ன உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர்? நலிவுற்ற சமூகக் குழுக்களின் சூழல்களை அவர்கள் அறியும் போது என்ன உணர்வுகளைக் காட்டுகின்றனர்? தங்களுக்குள் மனித உரிமைப் பண்பாட்டை வளர்க்கும் வகையில் சில சிறப்பு உணர்வுகளைக் கண்டறிந்து எப்படி வளர்க்கிறார்கள்? மனித உரிமை மீறல்கள் நடக்கும் போது எழும் அவர்களின் உணர்வுகளை நிலைப்படுத்தவும், ஆற்றலைச் செம்மையான வழியில் செலுத்தவும் முடிகிறதா? கடுமையான மனித உரிமை மீறல்கள் நிலவும் சூழலைச் சந்திக்கும் போது தங்கள் உணர்வுகளோடு ஒத்து போக வழி கண்டுபிடிக்க முடிகிறதா?*

**<u>பரிவு:</u>**

*மனித வாழ்க்கையையும், அதே போல் இயற்கையையும் ஒப்புயர்வற்றதாக மாணவர்கள் காண்கிறார்களா? நலிவுற்ற சமூகக் குழுவின் மாண்பும், உரிமைகளும் மறுக்கப்படும்போது அவர்கள் பிரச்சினையில் தானும் ஒரு பகுதி எனத் தனக்குள் உணர்கிறார்களா? பாதிக்கப்பட்ட மக்கள் மீது பரிவு ஏற்படுவதன் பயனாக அவர்கள் தங்களின் சொந்த வாழ்க்கையையும், உள்ளூர் சமூகச் சூழல்களையும் மாற்றுவதற்கு என்ன வழிகளைக் கடைபிடிக்கின்றனர்?*

**<u>ஒழுக்கம்-ஆன்மீகம்:</u>**

*வாழ்க்கையின் பெரும்பாலான பகுதியில் அவர்கள் பின்பற்றும் அடிப்படை மதிப்பீடுகள் என்ன? மனித உறவுகளில் அவர்களின் உணர்வின் நிலை என்ன? அவர்களின் சொந்த வாழ்க்கையில் சமூக ரீதியில் நலிவுற்ற குழுவினருக்கு என்ன முக்கியத்துவம் கொடுக்கின்றனர்? அவர்களின் வாழ்க்கையை இக்குழுவினர் எப்படிப் பாதிக்கின்றனர்?*

## <u>முடிவுரை</u>

இம்மாற்றுருவாக்கக் கல்வியின் வெவ்வேறு “கட்டங்களை“ ஒட்டு மொத்தமாகத் தொகுத்துப் பார்க்கும் போது மூன்று முடிவுகள் வெளிப்படுகின்றன.

- அனைத்து கட்டங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. ஒவ்வொரு கட்டமும் முன்னதிலிருந்த தொடர்கிறது. எனவே, அரசமைப்பு உரிமைக் கல்வியின் போதனை முறையின் அனைத்து கட்டங்களையும் ஒட்டு மொத்தமாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

- *இப்பாடத்திட்டத்தில் உள்ள ஒவ்வொரு பாடமும் ஒவ்வொரு கட்டத்திற்கும் சமமான அழுத்தம் கொடுக்காமல் இருக்கலாம். எனவே, சில கட்டங்கள் மற்றவற்றைவிட முக்கியத்துவம் குறைந்ததாக அர்த்தம் ஆகாது. பாடத்திட்டத்தை நிறைவேற்றும் காலத்தில் ஒவ்வொரு கட்டத்திற்கும் தனிக்கவனம் செலுத்தும் வகையில் - ஆசிரியரின் படைப்புத் திறனுக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளது.*

*பாடத்திட்டத்தை அப்படியே முழுமையாக மாணவர்களுக்குக் கொடுத்து விடும் வகையில் இம்மாற்றுருவாக்க கல்வி போதனை இங்குப் பயன்படுத்தப்படவில்லை. இக்கல்வி போதனா முறை ஒவ்வொரு பாடத்திலும், ஒவ்வொரு அத்தியாயத்திலும், அதாவது அனைத்து அத்தியாயங்களிலும், முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு சுருள் வட்டம் போல இப்போதனை முறை பாடத்திலிருந்து பாடத்திற்கும், ஒரு அத்தியாயத்திலிருந்து இன்னொரு அத்தியாயத்திற்குள்ளும் நகர்ந்து செல்கிறது. பாடத்திட்டத்தின் முதல் பகுதி ஒரு தொகுதியாக அமைக்கப்பட்டுள்ளது. வருங்கால இளைய சமுதாயத்தின் நலனிற்கு ஏதுவாக வலுவான அடித்தளத்தை இது இடுகிறது.*